பக்கங்கள் : பதினாறு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 20 வள்ளுவர் ஆண்டு 2036 புரட்டாதி 5 புதன்கிழமை (21.09.2005) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர் :299

## அதிகாரத் தக்கவைப்புக்காக தமிழர் மீது போர் வலிந்து திணிக்கப்படும் அபாயக் கட்டம்!

### எதிர்கொள்ளத் தயாராவோம்! வன்னியில் தேசிய அறைகூவல்!!

பரந்தன்,செப்.21

அதிகாரப் போட்டியினாலும், உட்கட்சிப் பூசல்கள் மற்றும் பொருளாதார நலிவு, இனவாத, மதவாதக் கடும் கோட்பாடுகள் என்பவற்றால் ஸ்ரீலங்கா அரச இயந்திரம் பல வீனப்பட்டு சிதைந்துள்ளது. வழமைபோல் அதிகாரத் தக்கவைப்புக்காகத் தமிழ்பேசும் மக்கள் மீது போர் வலிந்து திணிக்கப்படும் அபாயம் உருவாகி உள்ளது. போர் வலியதெனினும் அதனை எதிர்கொள்ள வேண்டியது தவிர்க்க முடியாத வழியாக உள்ளது.

நேற்று கிளிநொச்சியில் நடைபெற்ற போர் எழுச்சி ஆயத்த மாநாட்டின் முடிவில் விடுக்கப்பட்ட தேசிய அறைகூவலில் மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறைகூவல் வருமாறு:-

இலங்கையின் இனப்பிணக்கு வரலாற்றில் போர் ஓய்வும் பேச்சு வார்த்தைகளும், பல தடவைகள் நடைபெற்ற போதும், அவற்றில் வெற்றியடைய முடியவில்லை. எனினும், சர்வதேச சமூகத்தின்பால் நாம் வைத்துள்ள நம்பிக்கையின் அடிப்படையில் கடந்த 3 வருடகாலப் போர் ஓய்வும், சமாதான முன்னெடுப்புக்களும், சர்வதேச சமூகத்தின் அனுசரணையுடன் மேற்கொள்ளப்பட்டுவந்தும் உருப்படியான எந்த முடிவுகளும் எட்டப்பட முடியவில்லை. தற்போது யுத்த நிறுத்தம்

(2ஆம் பக்கம் பார்க்க)

# சமஷ்டி மட்டுமே தீர்வுக்கு வழி என இணைத் தலைமைகள் தெரிவிப்பு

## அவற்றின் கூட்டறிக்கையின் வாசகங்கள் பிரதமரின் நிலைப்பாட்டுக்குச் சாட்டையடி

கொழும்பு, செப்ரெம்பர் 21

இலங்கை இனப்பிரச்சினைக்கு ஒற்றையாட்சி முறைக்குள்தான் தீர்வு என்று பௌத்த-சிங்கள மேலாண்மைப் போக்குடைய கட்சிகளோடு ஒப்பந்தம் செய்துகொண்டு, ஜனாதிபதித் தேர்தல் களத்தில் இறங்கியிருக்கும் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவுக்குச் சாட்டையடி கொடுத்திருக்கிறது இலங்கைக்கு உதவும் நாடுகளின் டோக்கியோ மாநாட்டின் இணைத் தலைமை நாடுகளின் கூட்டறிக்கை.

அமெரிக்கா, ஜப்பான், நோர்வே மற்றும் ஐரோப்பிய ஒன்றியம் ஆகியவற்றின் பிரதிநிதிகளைக் கொண்ட இணைத் தலைமைகள் இலங்கை நிலைவரம் குறித்து நேற்றுமுன்தினம் கூடி ஆராய்ந்த பின்னர் விடுத்த கூட்டறிக்கையிலேயே, பிரதமரின் நிலைப்பாட்டுக்குத் திட்டவட்டமாக மாறான கொள்கை நிலைப்பாடு வெளிப்படுத்தப்பட்டிருக்கின்றது.

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தாம் ஜே.வி.பியினருடனும், ஜாதிக ஹெல உறுமயவினருடனும் ஜனாதிபதித் தேர்தலையொட்டி செய்துகொண்ட ஒப்பந்தங்களில்-

✱ இனப்பிரச்சினைக்கு ஒற்றையாட்சி முறையின் கீழேயே தீர்வு.

✱ தமிழர்களுக்கென இலங்கையில் தனியான தாயகம் ஏதும் கிடையாது.

(16ஆம் பக்கம் பார்க்க)

## திருமலையில் குண்டு வீச்சு

திருகோணமலை, செப்.21

திருகோணமலை மாவட்டத்தில் அநுராதபுரம் சந்தி, அலஸ்தோட்டம் பகுதியில் நேற்றுமுன்தினம் இரவு 8.10 மணியளவில் இடம்பெற்ற கைக்குண்டு வீச்சில் இரு கடற்படையினர் காயமடைந்துள்ளனர்.

அந்தப் பகுதில் உள்ள காவலரணை நோக்கி இக்கைக்குண்டு வீச்சு இடம்பெற்றது என்றும்-

(16ஆம் பக்கம் பார்க்க)

## பொலீஸ் ஆணைக்குழு கண்காணிப்பாளருக்கு கடிதம்

விடுதலைப் புலிகளால் தடுத்து வைக்கப்பட்டுள்ள மூன்று பொலீஸாரையும் விடுதலை செய்வதற்கு இலங்கைப் போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழு உடனடி நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென பொலீஸ் ஆணைக் குழு நேற்றுக் கேட்டிருக்கிறது.

இது தொடர்பில் இலங்கைப் போர்நிறுத்

(16ஆம் பக்கம் பார்க்க)

## காவலில் உள்ள பொலீஸாருடன் உறவினர் சந்திப்பு



கிளிநொச்சி, செப்.21

விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் வைத்து கைது செய்யப்பட்டு தமிழீழ நீதிமன்றத்தின் உத்தரவின்பேரில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள மூன்று பொலீஸாரையும் அவர்களது உறவினர்கள் நேற்று சந்தித்தனர்.

தமிழீழ காவல்துறையின் சீர்திருத்தப் பள்ளியில் வைத்து உறவினர்கள் பொலீஸாரைச் சந்தித்தனர்.

நேற்றுமுற்பகல் 10.30 மணி முதல் பிற்பகல் 2.30 மணிவரை நடந்த இச்சந்திப்பில் பொலீஸாரின் நலன்களை உறவினர்கள் கேட்டறிந்தனர்.

தாங்கள் நன்கு பராமரிக்கப்பட்டு வருகின்றனர் என்றும்- விரைவில் விடுதலையாவோம் என்று தாங்கள் நம்புகின்றனர் என்றும் - பொலீஸார் உறவினர்களிடம் தெரிவித்தனர்.

கிளிநொச்சியில் இருந்து வவுனியாவுக்கு நேற்று சென்ற உறவினர் மீண்டும் கிளிநொச்சிக்குத் தாங்கள் வரவிருக்கின்றனர் எனத் தெரிவித்தனர்.

ஒரு பொலீஸாரின் மனைவியும் இரு

(16ஆம் பக்கம் பார்க்க)

## நேற்றுப் பிரதமரின் முதல் பிரசாரக் கூட்டம் எதிர்பார்த்த அளவுக்கு சோபிக்கவில்லை

### சிவப்புக்கு முதலிடம்; ஹெல உறுமய ‘அவுட்’!

கொழும்பு, செப். 21

ஜனாதிபதித் தேர்தலை ஒட்டி ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி நடத்திய அதன் முதலாவது தேர்தல் பிரசாரக்கூட்டத்தில் ஜாதிக ஹெல உறுமயவின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் எவரும் கலந்துகொள்ளவில்லை. ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின், அமைச்சர்கள் மற்றும்

(16ஆம் பக்கம் பார்க்க)

## இந்துமா சமுத்திரத்தில் 3ஆவது கடற்படையாக உருவெடுத்து வரும் கடற்புலிகள் குறித்து அச்சம்

இந்துமா சமுத்திரப் பிராந்தியத்தில் மூன்றாவது வலிமையான கடற்படையாக தமிழீழக் கடற்படை உருவெடுத்திருப்பதாக இந்தியப் பேராசிரியர் சூரிய நாராயணன் அச்சம் தெரிவித்துள்ளார்.

‘பாக்கு நீரிணைப் பிராந்தியத்தில் மீனவர்கள் பிரச்சினை’ என்ற தலைப்பில் சூர்ய நாராயணன் எழுதியுள்ள புத்தகத்தில் இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது. அதில் உள்ள முக்கிய அம்சங்கள் வருமாறு:-

இந்தியா - ஸ்ரீலங்கா இடையே கடல்சார் கொள்கை நெகிழ்வுத் தன்மையாக இருக்கிறது. இதனால் இந்தப் பிராந்தியத்தில் வலிமைமிக்க மூன்றாவது சக்தியாக விடுதலைப் புலிகளின் கடற்புலிகள் உருவெடுத்து வருகிறார்கள்.

தொடக்க நிலையிலேயே இந்தியா கடற்புலிகளை அழித்துவிடவேண்டும்.

இலங்கைத் தமிழ் மீனவர்களுக்கும் இந்தியத் தமிழ் மீனவர்களுக்கும் இடையேயான பிரச்சினையில் ஸ்ரீலங்கா கடற்படை இந்தியத் தமிழ் மீனவர்களுக்கு ஆதரவான நிலையில் இருப்பதாக விடுதலைப் புலிகள் குற்றஞ்சாட்டி வருகின்றனர்.

(16ஆம் பக்கம் பார்க்க)

## அரசியல் படுகொலைகளைப் புலிகள் நிறுத்தவேண்டும் துணை ஆயுதக் குழுக்களை அரசு அகற்றவேண்டும்

### இணைத் தலைமைகள் காட்டமான அறிக்கை

கொழும்பு, செப்.21

✱ அரசியல் படுகொலைகளையும், சிறுவர்களைப் படைக்குச் சேர்ப்பதையும் விடுதலைப் புலிகள் நிறுத்தவேண்டும்.

✱ வடக்கு - கிழக்கில் உள்ள துணை இராணுவப் படைகளை, அவற்றின் ஆயுதங்களைக் களைந்து அவற்றை அங்கிருந்து இலங்கை அரசு அகற்றவேண்டும்.

- இவ்வாறு தனது காட்டமான கூட்டறிக்கையில் தெரிவித்திருக்கின்றன இலங்கைக்கு உதவும் நாடுகளின் டோக்கியோ மாநாட்

(16ஆம் பக்கம் பார்க்க)



கிளிநொச்சியில் நேற்று இடம்பெற்ற தமிழீழ விடுதலைப் போருக்கான தேசிய அறைகூவல் மாநாட்டில் தமிழீழ விடுதலைப் புலிகளின் மூத்த உறுப்பினர் வே.பாலகுமாரன் உரைநிகழ்த்துவதை முதல் படத்திலும், நிகழ்வில் கலந்துகொண்டோரை இறுதி இரண்டு படங்களிலும் காணலாம்.

(படங்கள்: பரந்தன் செய்தியாளர்)

# பொங்குதமிழ் தொடர்பாக முழு வீச்சில் பிரசாரம்

யாழ்ப்பாணம்,செப்.21

தமிழ்பேசும் மக்களின் சுயநிர்ணய உரிமையை சர்வதேச சமூகம் அங்கீகரிக்கக் கோரும் வகையில் யாழ். பல்கலைக்கழக சமூகத்தால் முன்னெடுக்கப்படும் 'பொங்கு தமிழ்' நிகழ்வுக்கான எழுச்சிப் பிரசாரக் கூட்டங்கள் நேற்றும் பரவலாக இடம்பெற்றன.

பலாலி ஆசிரிய கலாசாலை ஆசிரிய மாணவர்கள், யாழ். தேசிய கல்வியியல் கல்லூரி முகிழ்நிலை ஆசிரியர்கள் மற்றும் பல்கலைக் கழக மாணவர்கள் ஆகியோர் ஒன்றிணைந்து இந்த எழுச்சிப் பிரசாரப் பணிகளை மேற்கொண்டனர்.

தீவகத்தில் ஊர்காவற்றுறை, புங்குடுதீவு ஆகிய பகுதிகளிலுள்ள பாடசாலைகளிலும் மாணவர்களுக்கும் தென்மராட்சிப் பகுதிகளிலுள்ள பாடசாலைகளிலும் இப்பிரசாரப் பணிகள் இடம்பெற்றுள்ளன.

வலிகாமம் பகுதியில் சங்கானை, மல்லாகம், இளவாலை, தெல்லிப்பழை ஆகிய பகுதிகளிலுள்ள பாடசாலைகளில் பிரசாரக் கூட்டங்கள் இடம்பெற்றன. வலிகாமம் வடக்குப் பிரதேச செயலகத்தில் பிரதேச செயலக ஊழியர்கள், கிராம சேவையாளர்கள் மற்றும் சமுர்த்தி உத்தியோகத்தர்கள் ஆகியோர் ஒன்றுகூடி 'பொங்குதமிழ்' ஏற்பாடு குறித்துக் கலந்துரையாடினர்.

இக்கலந்துரையாடலில் அப்பிரதேச மக்களுக்கு பொங்குதமிழ் தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்தும் பொருட்டு கிராமிய ரீதியிலான கலந்துரையாடல்களை நடத்துவது பற்றியும் கலந்துரையாடப்பட்டது.

இதன் அடிப்படையில் நாளை வியாழக்கிழமை முதல் இப்பிரதேச செயலகத்திற்குட்பட்ட கிராம சேவையாளர் பிரிவு ரீதியாக பல்கலைக்கழக மாணவர்களும், ஆசிரிய கலாசாலை மாணவர்களும் ஒன்றிணைந்து எழுச்சிக் கூட்டங்களை நடத்தவுள்ளனர். (ஐ-86-410)

# சமாதான நலன் சிந்தனை

இலங்கைத் தீவைப் பொறுத்தவரையில் சமாதானத்தின் பெறுமதியையும், அவசியத்தையும் பற்றி மக்களுக்கு விளக்கவேண்டிய தேவை இல்லை. 25 வருடகால யுத்தமும், அதற்கு வழிவகுத்த முன்னைய 25 வருடகால உரிமைமறுப்பும் எம்மீது சுமத்தியுள்ள வேதனையின் பாரத்தை அனைவரும் அனுபவித்துள்ளோம். குறிப்பாக எமது பகுதியைப்போன்ற யுத்த பிரதேசங்களில் வாழும் மக்கள் இன்னும்தான் அமைதி குலைந்தவர்களாய், மீண்டும் போர் மேகங்கள் சூழ்ந்த நிலையில் நிட்சயமற்ற ஒரு எதிர்காலத்திற்கு முகம்கொடுத்து ஏக்கத்துடன் வாழ்கின்றனர்.

இவ்வாறு, யதார்த்த ரீதியில் நோக்கும்போது, சமாதானம் என்றவுடனே அதை யுத்தத்துடன் தொடர்புபடுத்தியே பார்க்கிறோம். இது முறையானதே.

இருப்பினும், யுத்த சூழ்நிலைக்கு அப்பாலும் சமாதானமின்மையை நாம் காண்கிறோம். தனி நபர்களிடையே, குடும்பங்களுக்கிடையே, குழுக்களிடையே, சமூகங்களிடையே, தகராறுகள், வன்செயல்கள் ஆகியவற்றைக் காண்கிறோம்.

இவை வெளிப்படையாகத் தோன்றுபவை. சமாதானத்திற்கு அச்சுறுத்தலாயிருப்பது யுத்தமும், வன்செயல்களும் மட்டுமல்ல. நீர்மட்டத்திற்குக் கீழே மறைந்திருக்கும் பனிமலையின் பெரும் பகுதிபோன்று, எமது பார்வையிலிருந்து தப்பும் அநீத சமூகக் கட்டமைப்புகள் இனம், நிறம், மொழி, மதம், பால்நிலை, சாதி, பிரதேசம் போன்ற பலவிதமான அடித்தளங்களின் மீது செயற்கையாக எழுப்பப்பட்ட அநீத கட்டமைப்புகள் - இவையும் பெரிய அல்லது சிறிய மட்டங்களில் சமாதானம் நிலைகொள்வதற்கு அச்சுறுத்தலாயுள்ளன. அந்த வகையில் தனிநபர்களாகிய நாம் ஒவ்வொருவருமே சமாதான 'குழப்பி' களாக செயற்படுவதுண்டு.

அனைத்துலக சமாதான தினமாகிய இன்று சொற்பநேரம் எமது மனங்களை ஒரு நிலைப்படுத்தி, சமாதானத்திற்கு எமது பங்களிப்பு என்ன என்பது பற்றிச் சிந்தித்து, இறை பிரார்த்தனையில் ஈடுபடுவது பயனுள்ளதாயிருக்கும்.

இறைவா!

பொய்மையில் நின்று மெய்மைக்கும் இருளில் நின்று ஒளியினுக்கும் சாவிலிருந்து வாழ்விற்கும் அழைத்துச் செல்வாய் சாந்தி.

(தகவல்: சமாதான மனித உரிமைப் பண்பாட்டுப் பணியகம்)

# தம்பாலை ஆசிரியர் கொலை: சந்தேக நபர்கள் ஐவர் சரண்!

யாழ்ப்பாணம்,செப்.21

அச்சுவேலி, தம்பாலைப் பகுதியில் அண்மையில் ஆங்கில ஆசிரியர் ஒருவர் அடித்துக் கொலை செய்யப்பட்டமை தொடர்பாக தேடப்பட்டுவந்த ஐந்து சந்தேக நபர்கள் மல்லாகம் நீதிமன்றத்தில் நேற்றுமுன்தினம் சரண் அடைந்துள்ளனர்.

கடந்த மாதம் 3ஆம் திகதி தாக்குதலுக்கு உள்ளாகி 9 ஆம் திகதி மரணமான ஆங்கில ஆசிரியர் தர்மராஜா சிவானந்தம் என்பவரின் கொலை தொடர்பாகத் தேடப்பட்டு வந்த ஐந்து சந்தேக நபர்களே மல்லாகம் நீதிமன்றத்தில் நேற்றுமுன்தினம் சரண் அடைந்தனர்.

சட்டத்தரணி எஸ். விஸ்வலிங்கம் மூலம் சரண் அடைந்த சந்தேகநபர்களை எதிர்வரும் 23 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கும்படி மல்லாகம் நீதிவான் திருமதி ச. இளங்கோவன் உத்தரவிட்டார். (ஐ-3)

# தென்மராட்சியில் கண்காட்சி

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலை மாணவர்களுக்குகிடையிலான வலய மட்ட ஆக்கப் பொருள் கண்காட்சி இன்றும் நாளையும் நடைபெறவுள்ளது.

ஆரம்பப் பிரிவு மாணவர்களின் ஆக்கப் பொருள் கண்காட்சி சாவகச்சேரி டிறிபேக் கல்லூரியிலும், ஏனைய பிரிவு மாணவர்களின் ஆக்கப் பொருள் கண்காட்சி சாவகச்சேரி இந்துக் கல்லூரியிலும் நடைபெறும்.

டிறிபேக் கல்லூரியில் நடைபெறும் கண்காட்சியினை சாவகச்சேரி சிற்றி சென்ரர் நிறுவன உரிமையாளர் த.குகனேசனும், சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் நடைபெறும் கண்காட்சியினை தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி றெஜினா இருதயநாதனும் ஆரம்பித்துவைப்பர். (3-117)

## சிறுமி மீதான பாலியல் துஷ்பிரயோக வழக்கு:

# விரிவுரையாளர் மீதான விசாரணையை துரிதப்படுத்துமாறு நீதிவான் உத்தரவு!

யாழ்ப்பாணம்,செப்.21

சிறுமி ஒருத்தி மீதான பாலியல் துஷ்பிரயோகம் தொடர்பாக யாழ். பல்கலைக்கழக விரிவுரையாளர் ஒருவருக்கு எதிராகத் தொடரப்பட்ட வழக்கின் விசாரணைகளைத் துரிதமாக மேற்கொள்ளுமாறு யாழ். நீதிவான் திருமதி ஸ்ரீநிதி நந்தசேகரன் பொலீஸாருக்கு உத்தரவிட்டுள்ளார்.

இந்த வழக்கு நேற்று மீண்டும் விசாரணைக்கு எடுக்கப்பட்ட சமயம் சந்தேக நபர் சார்பில் ஆஜரான சட்டத்தரணி என்.ஸ்ரீகாந்தா சந்தேகநபருக்குப் பிணைகோரி மனு ஒன்றைத் தாக்கல் செய்தார். ஆனால், விசாரணைகள் முடிவடையாததால் பிணை வழங்க முடியாதுள்ளது என்றும் விசாரணை முடிவடையும் பட்சத்தில் பிணை வழங்குவது குறித்தும் பரிசீலிக்கலாம் என்றும் - நீதிவான் தெரிவித்தார்.

சந்தேகநபரை மேலும் இருவார காலத்துக்கு விளக்கமறியலில் வைக்கும்படியும் நீதிவான் உத்தரவிட்டார். (ஐ-3)

# அதிகாரத் தக்க...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கேள்விக்குள்ளாகியுள்ளது.

போராளிகள், தமிழ் இனப்பற்றாளர்கள், பொதுமக்கள் மீதான கொலைகளும் கொலை முயற்சிகளும், அச்சுறுத்தல்களும் தொடர்ந்த வண்ணமுள்ளன. அரச கட்டுப்பாட்டுப் பகுதியில் அரசியல் பணிபுரிந்த போராளிகளின் நடவடிக்கைகள் அச்சுறுத்தலுக்குட்பட்டுள்ளன. இவர்கள் உயிர்ப் பாதுகாப்புக் கருதி மீள அழைக்கப்பட்டுள்ளனர். போர் நிறுத்தத்தையும் போர் நிறுத்த உடன்பாட்டு விதிகளையும்; ஏற்பாடுகளையும் காப்பாற்றக் கூடிய நீடித்துப் பேணக்கூடிய உபாயங்கள் எதுவும் இன்று இல்லையென்பது வெளிப்படையானது.

தமிழ் பேசும் மக்கள் தமது அரசியல் அபிலாசைகளையும் தமிழீழத் தேசியத் தலைமைக்கான ஆதரவையும், வரலாற்றில் எப்போதும் இல்லாதவாறு பெரும் எடுப்பில் வெளிப்படுத்தி வருகின்றனர். ஜூலை 27 ஆம் நாளில் வவுனியா மாவட்டத்தில் தமிழ்ப் பேசும் மக்களின் அரசியல் அபிலாசைகளை உள்ளடக்கிய பிரகடனம் வெளிப்பட்டது. அதனைத் தொடர்ந்து தமிழ்ப் பேசும் மக்கள் வாழும் பிரதேசங்கள் எங்கும் மக்கள் எழுச்சிப் பிரகடனங்கள் வெளியிடப்பட்டு வருகின்றன. செப்ரெம்பர் 1 இல் கிளிநொச்சியில் இலட்சக்கணக்கான மக்கள் ஒன்றுகூடி தமது அரசியல் நிலைப்பாட்டைப் பிரகடனம் செய்தனர் என்பதை நாம் எல்லோரும் அறிவோம்.

சிறிலங்கா அரசிற்குள் பலத்த அதிகாரப் போட்டி நிலவுகின்றது. உட்கட்சிப் பூசல்களினாலும், பொருளாதார நலிவினாலும், இனவாத, மதவாத கடும் கோட்பாடுகளினாலும், அரச இயந்திரம் பலவீனப்பட்டு சிதைந்துள்ளது. வழமைபோல் அதிகாரத் தக்கவைப்பிற்காக தமிழ் பேசும் மக்கள்மீது போர் வலிந்து திணிக்கப்படும் அபாயம் உருவாகியுள்ளது. இதனால் தமிழ் பேசும் மக்கள் மத்தியில் சமாதான செயல்முறை தொடர்பில் விரக்தியும், ஏமாற்றமும், ஏற்பட்டுள்ளது. தங்களது அடுத்தகட்ட நடவடிக்கை தொடர்பாக அவர்கள் சிந்திக்கத் தலைப்பட்டுள்ளனர். தமிழ் மக்களுடைய வளமும், பலமும், இலட்சியபற்றும் எவ்வாறானதென்பதை சமகால போர் ஓய்விற்கு முன்னைய காலங்களில் வெளிப்படுத்தியிருக்கின்றோம்.

தற்போதைய அரசியல் கள யதார்த்தத்தின் அடிப்படையில் போர் முனைப்பும் சமாதான நடவடிக்கைகளை முடக்கவும், சிறிலங்கா அரசும், அதன் இன, மத கடும் கோட்பாட்டாளர்களும், தீவிர முயற்சிகளை மேற்கொண்டுவருகின்றனர். இந்நிலையில் சர்வதேச அனுசரணையை புறந்தள்ளவும், அதிகாரப் பகிர்வு யோசனையைக் கைவிடவும், ஒற்றையாட்சி அரசியல் அமைப்பை முன்னிறுத்தி பௌத்த, சிங்கள தேசத்திற்கு முதன்மை நல்கவும், பல இனவாத உள்ளக உடன்பாடுகளும், கூட்டுக்களும், உருவாக்கப்பட்டுள்ளது.

இந்த அரசியல் களத்தின் அகப்புற நிலைப்பாடுகளிடையே தமிழ் பேசும் மக்களாகிய நாம் தீர்க்கமான நிலைப்பாட்டிற்கு வர வேண்டிய சூழ்நிலைக்கு நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளோம். சிறிலங்கா அரசின் அரசியல் இராஜதந்திர நடவடிக்கைகளை அதற்கே உரிய வழிகளிலும் அதன் போரியல் முன்னெடுப்புக்களை அதற்கே உரிய வழிகளிலும் சந்திப்பதற்கு நாம் தயாராகியுள்ளோம். யுத்த முனைப்புகளுக்கு முகம் கொடுத்து யுத்தத்தை யுத்தத்தின் வழியிலேயே சந்தித்து எமது அரசியல் அபிலாசைகளை வென்றெடுக்கத் தீர்மானித்துள்ளோம். தமிழ் பேசும் மக்களின் இந்த அரசியல் நிலைப்பாட்டிற்கும், தேசிய இன விடுதலைப் போராட்டத்திற்கும், சர்வதேச சமூகம் உலக அரசின் சர்வதேச நியமங்களுக்கு அமைவாக எமது விடுதலைப் போரை அங்கீகரித்து ஆதரவு அளிக்குமாறு வேண்டுகிறோம்.

தமிழ்பேசும் மக்களாகிய நாம் அனைவரும் மீண்டும் ஒரு மிடுக்குப் பெற்று எம்மீது வலிந்து திணிக்கப்படும் போரை எதிர்கொள்வதற்குத் தயாராகுவோம். அனைவரும் முழுமையான ஆயுதப் பயிற்சியைப் பெறுவோம். எமது அனைத்து வளங்களையும், பலங்களையும், விடுதலைப் போர்முனைக்கு வழங்குவோம். போர் வலியதெனினும் எமது தாயக விடுதலைக்கு அதுவே தவிர்க்க முடியாத வழியாகும் என்பதால் இன்றிலிருந்து எம்மையும், எம்மைச் சூழவுள்ள யாவற்றையும், தமிழீழத் தாயக விடுதலைக்கு அர்ப்பணிப்போம் என உறுதியெடுத்துக்கொள்கின்றோம்.

- இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-305-352)

# அராலி வயல் வெளிப் பகுதியில் காயத்துடன் வயோதிபர் மீட்பு!

யாழ்ப்பாணம்,செப்.21

தலையில் காயமடைந்து மயங்கிய நிலையில் காணப்பட்ட வயோதிபர் ஒருவர் அராலிப் பகுதி வயல் வெளியில் இருந்து மீட்கப்பட்டிருக்கிறார். அவரது மோட்டார் சைக்கிளும் அங்கு காணப்பட்டது.

துணைவியைச் சேர்ந்த வேலன் வைரவன் (வயது 65) என்ற வயோதிபரே மயங்கிய நிலையில் மீட்கப்பட்டு யாழ். மருத்துவமனையின் அவசர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டிருக்கிறார்.

வீட்டில் இருந்து தனியே மோட்டார் சைக்கிளில் கிளம்பிச் சென்ற இவர் நீண்ட நேரமாகியும் வீடு திரும்பாததை அடுத்து அவரைத் தேடிச்சென்ற உறவினர்கள் அராலி செட்டியாமடம் வயல் பகுதியில் அவரைக் கண்டுபிடித்தனர்.

தலையில் காயத்துடன் மயக்கமுற்ற நிலையில் வயோதிபர் காணப்பட்டார் என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ-12)




**உதயன்**
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி, தொலைநகல் – 222 2030, 222 2083, 222 3837.

# இணைத் தலைமைகளின் அறிக்கை பேரினவாதிகளுக்கு நல்லதோர் சூடு!

டோக்கியோ உதவி வழங்கும் நாடுகளின் மாநாட்டின் இணைத் தலைமை அமைப்புகள் நான்கும் நேற்று முன்தினம் நியூயோர்க்கில் கூடி இலங்கை நிலைவரம் குறித்து ஆராய்ந்த பின்னர் வெளியிட்டிருக்கும் அறிக்கை இலங்கையின் இன்றைய அரசியல் நிலையில் மிக முக்கியமானதாகும்.

அமைதி முயற்சிகளுடன் நேரடியாகத் தொடர்புபட்ட தரப்புகளான இலங்கை அரசுக்கும், விடுதலைப் புலிகளுக்கும் இந்த அறிக்கை மூலம் மீளவும் ஒரு தடவை நெருக்குதல் கொடுத்திருக்கின்றன இணைத் தலைமை அமைப்புகள். இது வழமையானதுதான். கடைசியாகக் கடந்த ஜூலையில் பிரஸல்ஸில் நடைபெற்ற இணைத் தலைமை நாடுகளின் கூட்டத்தின் முடிவில் விடுக்கப்பட்ட அறிக்கையிலும் இதேபோன்று அழுத்தம் கொடுக்கும் பல்லவிதான் பாடப்பட்டிருந்தது.

புலிகள் வன்முறைகளைக் கைவிடவேண்டும், சிறுவர்களைப் படைக்குத் திரட்டுவதை நிறுத்தவேண்டும் மற்றும் வடக்கு - கிழக்கிலிருந்து துணை ஆயுதப் படைகளை அகற்றி, அவற்றின் ஆயுதங்களைக் களைந்து அதன்மூலம் இயல்புநிலை திரும்புவதற்கு இலங்கை அரசு நடவடிக்கை எடுக்கவேண்டும் என்ற விடயங்கள் இப்போதும் திரும்பவும் வலியுறுத்தப்பட்டிருக்கின்றன - வார்த்தைகளில்தான் சற்று மாற்றம்.

அதேபோன்று யுத்தநிறுத்த உடன்படிக்கையை முழு அளவில் நடைமுறைப்படுத்துவதற்கான நடவடிக்கைகளும் தங்குதடை, பின்னடைவு இன்றி எடுக்கப்பட வேண்டும் என்பதும் மீண்டும் ஒரு தடவை தற்போதைய அறிக்கையில் வலியுறுத்தப்பட்டுள்ளது. இது எதிர்பார்க்கப்பட்டதுதான்.

ஆனால், இவை எல்லாவற்றுக்கும் அப்பால் இலங்கை இனப்பிரச்சினைக்கு அமைதித் தீர்வு காணும் வழிவகை குறித்து இணைத் தலைமை நாடுகளான அமெரிக்கா, ஜப்பான், நோர்வே மற்றும் ஐரோப்பிய ஒன்றியத்திற்குத் தலைமை வகிக்கும் பிரிட்டன் ஆகியவை தெரிவித்திருக்கும் கருத்து, இப்போது தென்னிலங்கையைக் கலக்கி வரும் ஜனாதிபதித் தேர்தல் பிரசாரத்தை ஒட்டிய பேரினவாத எழுச்சிக்கு நல்லதோர் சாட்டை அடியாகும்.

குறிப்பாகச் சொல்வதானால் தேர்தல் வெற்றி என்ற சுயலாப அரசியல் நோக்கத்திற்காக பௌத்த - சிங்களப் பேரினவாத சக்திகளை ஒன்றுதிரட்டி, தனக்குப் பின்னால் அணிதிரள வைத்திருக்கும் - ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் ஜனாதிபதி வேட்பாளரும், பிரதமருமான - மஹிந்த ராஜ பக்ஷவின் அரசியல் நிலைப்பாட்டுக்கு விழுந்த நல்ல தோர் சூடாகவும் இதைக் கொள்ளலாம்.

தமிழர்களுக்கு இந்த இலங்கைத் தீவில் தனியான தயாகமோ, சுயநிர்ணய உரிமையோ கிடையாது என்றும், இனப்பிரச்சினைக்கான எந்தத் தீர்வும் ஒற்றையாட்சி முறையின் கீழ்த்தான் என்றும் எழுத்துமூலம் ஒப்பந்தங்களைச் செய்து, அந்த ஒப்பந்தங்களை முன்னிறுத்தி, வாக்குத் திரட்ட முயன்றிருக்கும் பிரதமர் மஹிந்த ராஜ பக்ஷவுக்குத் தெட்டத்தெளிவாக சில விடயங்களை உணர்த்தியிருக்கின்றன இணைத் தலைமைகள்.

*"ஜனநாயகத்தை உறுதிப்படுத்தி, சகல இன குழுக்களினதும் சட்டபூர்வமான உரிமைகளையும், அடிப்படை உரிமைகளையும் மதிக்கும் விதத்தில் - 2002 டிசெம்பரில் ஒஸ்லோவில் காணப்பட்ட கொள்கை இணக்கத்துக்கு அமைய - ஐக்கிய இலங்கைக்குள் சமஷ்டி முறையிலான இணக்கப்பாடு ஒன்றை அரசியல் பேச்சு வாயிலாகக் காண்பதன் மூலம் மட்டுமே இந்தப் பிரச்சினைக்கு அமைதித்தீர்வு காணமுடியும் என இணைத்தலைமைகள் மீள வலியுறுத்துகின்றன"* - என்று இந்த அறிக்கை மிகத் தெளிவாகத் தெரிவித்திருக்கின்றது.

அதாவது, ஒஸ்லோவில் காணப்பட்ட இணக்கத்தின் பிரகாரம் "உள்ளக சுயநிர்ணய உரிமையுடன் கூடிய சமஷ்டி முறை ஒன்றின் கீழ்தான்" அமைதித்தீர்வு காண முடியும் என்பதைச் சர்வதேச சமூகம் தெளிவாக வலியுறுத்தியிருக்கின்றது.

அத்தோடு இந்த ஜனாதிபதித் தேர்தலின் பின்னர் தன்னும் இனப்பிரச்சினைக்கு அமைதித்தீர்வு காண்பதற்கான முயற்சிகளை முன்னெடுப்பதற்கு வாய்ப்பாக இருக்கக்கூடிய விடயங்களைப் பாதிக்கும் விதத்தில் இப்போது அறிக்கைகளை வெளியிடுவதையும், அறிவிப்புகள், செயற்பாடுகளை மேற்கொள்வதையும் செய்யவேண்டாம் என்றும் இணைத் தலைமை நாடுகள் தமது அறிக்கையில் கோரியிருக்கின்றன.

சுற்றிச் சுற்றிப் பார்த்தால் பௌத்த - சிங்கள பேரினவாத சக்திகளை ஒன்றுதிரட்டி, அதன்மூலம் - தெரிந்தோ, தெரியாமலோ - விரும்பியோ, விரும்பாமலோ - அமைதி முயற்சிகளுக்கு அழிவு ஏற்படுத்தும் வகையில் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தற்போது முன்னெடுக்கும் நடவடிக்கைகளுக்கு ஒரு குட்டுக் குட்டியதாகவே இணைத் தலைமை நாடுகளின் இந்த அறிக்கை அமைந்திருக்கிறது.

நல்ல மாட்டுக்கு ஒரு சூடு என்பார்கள். இத்தோடாவது சம்பந்தப்பட்டோர் திருந்துவார்களா? காலம்தான் பதில் கூறவேண்டும்.

# யாழ். இரத்த வங்கிக்கு வாகனம் 'வேல்ட் விஷன்' நிறுவனம் வழங்கியது

யாழ்ப்பாணம்,செப்.21

யாழ். போதனா வைத்தியசாலையின் இரத்த வங்கிப் பிரிவிற்கு 'வேல்ட் விஷன்' நிறுவனம் வாகனம் ஒன்றை அன்பளிப்பாக வழங்கியுள்ளது.

இதற்கான நிகழ்வு நேற்றுமுற்பகல் 10.30 மணியளவில் யாழ். வைத்தியசாலையில் நடைபெற்றது. அப்போது 'வேல்ட் விஷன்' நிறுவனத்தின் திட்டப் பணிப்பாளர் ஆன்பெனி மேரியா யாழ். போதனா வைத்தியசாலையின் பதில் பணிப்பாளர் வைத்தியகலாநிதி உமாபதியிடம் வாகனத்தைச் சம்பிரதாய பூர்வமாகக் கையளித்தார்.

இந்நிகழ்வில் வைத்தியசாலையின் நிர்வாக உத்தியோகத்தர் ஆர்.பத்மநாதன், இரத்தவங்கிப் பிரிவின் அதிகாரிகள் மற்றும் 'வேல்ட் விஷன்' நிறுவன உத்தியோகத்தர்கள் எனப் பலர் கலந்துகொண்டனர்.

வைத்தியசாலையின் இரத்தவங்கிப் பிரிவின் நடமாடும் சேவைக்கு வாகனம் அவசியம் என்று வைத்தியசாலை நிர்வாகம் வேண்டுகோள் விடுத்ததாகவும் - அதற்கமையவே இந்த வாகனம் அன்பளிப்புச் செய்யப்படுவதாகவும் 'வேல்ட் விஷன்' நிறுவனத்தின் யாழ். மாவட்ட அதிகாரி தெரிவித்தார்.

நீண்டதூரம் சென்று இரத்தம் பெறுவதற்கான சகல வசதிகளும் இந்த வாகனத்தில் உள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஒ-13)



யாழ். போதனா வைத்தியசாலையின் இரத்த வங்கிப் பிரிவுக்கென 'வேல்ட் விஷன்' நிறுவனத்தினால் வழங்கப்பட்ட வாகனத்தினை அந்நிறுவனத்தின் திட்டப் பணிப்பாளர் ஆன் பெனி மேரியா வைத்திசாலையின் பதில் பணிப்பாளர் வைத்திய கலாநிதி உமாபதியிடம் கையளிப்பதைப் படத்தில் காணலாம்.

*(படம்: கவிதரன்)*

# உயர்தரப் பரீட்சைப் பெறுபேறுகளின் அடைவுமட்டத்தை மதிப்பிடக் குழு

யாழ்ப்பாணம்,செப்.21

அண்மையில் வெளியான ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சைப் பெறுபேறுகளில் யாழ். மாவட்ட அடைவு மட்டத்தைக் கணிப்பிட குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது. இத்தகவலை யாழ். கல்வி வலய அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

பாட ரீதியாகப் பெறுபேறுகளின் அடைவு மட்டத்தைக் கணிப்பிட்டு அதன் முடிவுகளை வெளியிட உள்ளது.

இக்குழுவினர் தற்போது பாடசாலை ரீதியாகப் பெறுபேறுகளின் தரத்தை மதிப்பிட்டு வருகின்றனர்.

அடுத்த கட்டமாகக் கோட்ட மற்றும் வலய ரீதியாகவும் மதிப்பீட்டு நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்றும்-

பெரும்பாலும் இதன்முடிவுகள் அடுத்த மாத முற்பகுதியில் வெளியிடப்படுமென்றும் - தெரிவிக்கப்பட்டது. (ஒ-13)

# மானிப்பாய் கிறீன் மருத்துவமனையில் வைத்தியசேவை

மானிப்பாய் கிறீன் ஞாபகார்த்த வைத்தியசாலையில் வாரந்தோறும் ஞாயிற்றுக்கிழமைகளில் மகப்பேற்று வைத்தியமும் குழந்தைகளுக்கான சிகிச்சையும் இடம்பெறுகின்றன.

கடந்த ஞாயிற்றுக்கிழமை முதல் ஆரம்பமாகியுள்ள இந்த மருத்துவ சேவைகளில் காலையில் குழந்தைகளுக்கான சிகிச்சையும் மாலையில் மகப்பேற்று வைத்தியமும் இடம்பெறவுள்ளது. பிரபல வைத்தியர்களால் மேற்கொள்ளப்படவுள்ள இந்த மருத்துவ சேவைகளில் பயன்பெற உள்ளவர்கள் முன்கூட்டியே பதிவுசெய்துகொள்ளுமாறு வைத்தியசாலை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (ஒ-152)

# அரச காணிகளில் குடியிருப்போருக்கு அனுமதிப் பத்திரம் வழங்க நடவடிக்கை

யாழ்ப்பாணம், செப்.21

யாழ். குடாநாட்டில் நீண்டகாலமாக அரச காணிகளில் குடியிருக்கும் வறுமைக் கோட்டிற்கு உடபட்ட குடும்பங்களுக்கு சட்டபூர்வமான காணி அபிவிருத்தி சட்ட அனுமதிப்பத்திரம் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என யாழ். மாவட்ட துரித காணிச் செயலணி ஆணையாளர் கு.ஞானசேகரம் தெரிவித்தார்.

இந்த நடவடிக்கையின் கீழ் 11 பிரதேச செயலர் பிரிவுகளைச் சேர்ந்த 882 குடும்பங்களுக்குக் காணி அனுமதிப் பத்திரம் வழங்க மாகாண காணி ஆணையாளர் அனுமதி வழங்கியுள்ளார்.

இதில் பயனாளிகளாக கோப்பாய் பிரிவில் 380 குடும்பங்களும் சாவகச்சேரிப் பிரிவில் 26 குடும்பங்களும் நல்லூர் பிரிவில் 16 குடும்பங்களும் ஊர்காவற்றுறைப் பிரிவில் 24 குடும்பங்களும் சண்டிலிப்பாய் பிரிவில் 5 குடும்பங்களும் உடுவில் பிரிவில் 46 குடும்பங்களும் மருதங்கேணிப் பிரிவில் 140 குடும்பங்களும் தெல்லிப்பழைப் பிரிவில் 59 குடும்பங்களும் கரவெட்டிப் பிரிவில் 14 குடும்பங்களும் சங்கானைப் பிரிவில் 20 குடும்பங்களும் பருத்தித்துறைப் பிரிவில் 152 குடும்பங்களும் தெரிவுசெய்யப்பட்டுள்ளன.

இவர்களுக்குரிய காணி அனுமதிப் பத்திரங்கள் வழங்கும் நடவடிக்கையில் பிரதேச செயலாளர்கள் ஈடுபட்டுள்ளனர்.

இதுவரை கோப்பாயில் 209 குடும்பங்களுக்கும் சாவகச்சேரியில் 26 குடும்பங்களுக்கும் நல்லூரில் 16 குடும்பங்களுக்கும் ஊர்காவற்றுறையில் 24 குடும்பங்களுக்கும் சண்டிலிப்பாயில் 5 குடும்பங்களுக்கும் உடுவிலில் 35 குடும்பங்களுக்கும் காணி அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்பட்டுள்ளன.

தெரிவுசெய்யப்பட்ட ஏனைய குடும்பங்களுக்கான அனுமதிப்பத்திரங்கள் வழங்கும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. விரைவில் அவை வழங்கப்படும் என்று அவர் மேலும் தெரிவித்தார். (ஒ-204-203)

## நாளை

*புரட்டாதி 06*
*வியாழக்கிழமை*
*22.09.2005*
**திதி:** *பஞ்சமி*
*பின்னிர , 2.25 வரை*
**நட்சத்திரம்: பரணி சித்தம்**
*முற்பகல் 10.09 வரை*
**சுபநேரம்:** *07.32 - 09.02*
**ராகுகாலம்:** *01.32 - 03.02*
**(யாவும் பழைய நேரப்படி)**

## உதயவாக்கு

**ஒரு பிரச்சினையை சரியாக அணுகுவதே அதற்குரிய பாதித் தீர்வாக அமைகிறது.**

– காப்மேயர்

## உயிர் காக்கும் பணியில் ஒன்றிணைவோம்



# சின்னஞ்சிறு விளம்பரங்கள்

## விற்பனைக்கு

2 Sri தொடர் இலக்கம் கொண்ட Morris Minor கார் உட்பட T.V., டெக் டீப் பிறிசர், மின் விசிறிகள், மர அலுமாரி, மேசைகள் என்பன விற்பனைக்குண்டு. தொடர்பு: 0777-221221 (40239)

நல்ல நிலையில் உள்ள நிசான் Sanny இன 17-xxxx தொடர் இலக்கமுடைய வெள்ளை நிற A/C பொருத்தப்பட்ட கார் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: 0777 614449. (40211)

நல்ல நிலையில் உள்ள AMT Computer (72 GP Card disk), Sony Cassete player (Mark- II Japan), Bajaj Calioer 115 (NP HE xxxx) தொடர் இலக்கமுடையது என்பன விற்பனைக்குண்டு. தொடர்பு: 0776203050 (40229)

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம், ஈச்சமோட்டை வீதி, வாசிகசாலைக்கு அருகில் 1¼ பரப்புக் கொண்ட காணி விற்பனைக்குண்டு. தொடர்பு: S.S.நாதன், 16/3, விதானையார் வீதி, ஈச்சமோட்டை, யாழ்ப்பாணம். (40240)

## தொலைபேசி விற்பனைக்கு

பாவனையிலுள்ள தொலைபேசி இணைப்பு விற்பனைக்குண்டு. தொடர்பு: இல.964, K.K.S. வீதி, நாச்சிமார் கோயிலடி, யாழ்ப்பாணம். (சி-45215)

## இறைச்சிக்கோழி விற்பனைக்கு

Prima உயிர் Broiler மற்றும் இறைச்சிக் கோழிகள் சுகாதார முறைப்படி உடன் சுத்தம் செய்து தினமும் பெற்றுக் கொள்ளலாம். (Electronic நிறுவை) தொடர்பு: நல்லூர் வீடியோ சென்ரர் வளவு, 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (39657)

## தேவை

உதிரிப்பாக விற்பனை நிலையம் ஒன்றிற்கு யாழ் நகரப் பகுதியில் கடை வாடகைக்குத் தேவை. தொடர்பு: 077 6036332. (40199)

## தவறிவிட்டது

சிறிதரன் கலாமலர் என்பவருடைய தேசிய அடையாள அட்டை (565531476V), இராணுவ அடையாள அட்டை, தொழில் அடையாள அட்டை என்பன முனியப்பர் வீதி- யாழ்.நகரில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் கீழ்க்காணும் முகவரியில் ஒப்படைக்கவும் DSI காட்சியறை 426, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். (பூபாலசிங்கம் புத்தகசாலைக்கு முன்பாக) (40242)

சந்திரகாந்தன் றஞ்சினிதேவி, நடேசன் சந்திரகாந்தன் ஆகியோரது தேசிய அடையாள அட்டைகள் (வறுத்தாவிளான் தெல்லிப்பழை எனும் முகவரி கொண்டது) தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் இராச வீதி, புத்தூர் வடக்கு, நவக்கிரி எனும் முகவரியில் ஒப்படைக்கவும். (40237)

## மணமகள் தேவை

யாழ்.இந்து கௌரவ, பூராடம் முதலாம் பாதம், 1973 இல் பிறந்த, 7இல் செவ்வாய், கிரகபாவம் 29 உடைய, அழகிய சிவந்த நிறமுடைய மணமகனுக்கு அழகான படித்த குணமான மணமகளை பெற்றோர் எதிர்பார்க்கின்றனர். தொடர்பு: விளம்பர இல. 2700 C/o உதயன். (40189)

## மணமகன் தேவை

லக்கினத்தில் செவ்வாய், உயரம் 5 அடி, வயது 25, கிரகபாவம் 84, சிவந்த அழகிய மணமகளுக்கு மணமகன் தேவை. மதம் இந்து, கிறிஸ்தவம் கவனிக்கப்படமாட்டாது. தொடர்பு: விளம்பர இல.2701-மே/பா உதயன். (40195)

## வாடகைக்கு

யாழ்ப்பாணம், கன்னாதிட்டி றோட்டில் மூன்று மாடிக்கட்டடம் வாடகைக்குண்டு. பகுதியாகவும் கொடுக்கப்படும். சகல வியாபாரத்திற்கும் ஏற்றது. தொடர்பு: T.P.No. 021-222 5040 (திங்கள்-வெள்ளி வரை தொடர்பு கொள்ளலாம்). (40081)

கோயில் வீதி, நல்லூரில் 3 அறைகள் பெரிய Hall மற்றும் சகல வசதிகளுமுடைய கீழ்தள வீடு வாடகைக்குண்டு. 3 அல்லது 4 பேர்களைக் கொண்ட குடும்பத்தினர் விரும்பத்தக்கது. தொடர்பு: 393/17, கோயில் பின் வீதி, நல்லூர் T.P.: 222 6461. (40187)

**THE ROYAL COLLEGE OF JAFFNA**

சுலபமாக ஆங்கிலத்தில் கதைக்கப் பயில By: விக்னேஸ்வரன் ஆச்சாரி 426, (302), K.K.S .வீதி, யாழ்ப்பாணம். பிளாக் வீதி, சங்கானை. (மாதக்கட்டணம் 150/) (40249)(21-16)

## விற்பனைக்கு

சகல வகையான கையடக்கத் தொலைபேசிகளும் அதற்கான உதிரிப்பாகங்களும் விற்பனைக்குண்டு. உங்கள் சொந்தப் பெயர்களுக்கு சிம் காட்டும் வழங்கப்படும். பழுதுபார்க்குத் திருத்தும் சேவையும் உண்டு.

**யாழ்- போன் சொப்**

10, நவீன சந்தை மேல்மாடி, ஆஸ்பத்திரி வீதி (திரி ஸ்ரார் ஹோட்டலுக்கு முன்பாக), யாழ்ப்பாணம்.

(21-16)

## வீடு விற்பனைக்கு

பருத்தித்துறையில் வேலாயுதம் மகாவித்தியாலயத்திற்கு வடக்குத் திசையில் உள்ள செட்டித் தெருவில் அமைந்த இரண்டாவது வீடு உடனடி விற்பனைக்குண்டு. வீட்டு உரிமையாளர் உடனடியாக வீட்டை விற்று ஒரு கிழமைக்குள் வெளிநாடு செல்ல இருப்பதால் உடன் தொடர்பு கொள்ளவும்.

தொடர்பு: ரவீன்ஸ் ரெலிகொம்,
சிங்கத்தின் வீடு,
கரவெட்டி கிழக்கு, கரவெட்டி.
T.P. No.: 021 226 3321
0779112820

(40244)(21.16)

## ச.ச.நிலையத்துக்கு நிதி ஒதுக்கீடு

கைதடி மத்தி வளர்மதி சனசமூக நிலையத்தின் பயன்பாட்டிற்கென ஒலி பெருக்கிச் சாதனங்களைக் கொள்வனவு செய்வதற்காக யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் என்.இரவிராஜ் தனது பன்முகப்படுத்தப்பட்ட வரவு -செலவு நிதியிலிருந்து 50 ஆயிரம் ரூபாவை அண்மையில் வழங்கியுள்ளார் என வளர்மதி சனசமூக நிலையத் தலைவர் சி.கந்தசாமி தெரிவித்துள்ளார். (ஒ-75)

## CEYLON MEDICAL COLLEGE COUNCIL PHARMACIST'S (EXTERNAL) EXAMINATION 2006/2007

புதிய வகுப்புகள் ஆரம்பம்: 01.10.2005

சனிக்கிழமை பிற்பகல் 2 மணி

**சாயிராம் பார்மசி கல்வி, பட்டப்படிப்புகள் கல்லூரி,**

57/13, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

குறைந்த பட்ச கல்வித் தகைமைகள்:

G.C.E O/L - Credit pass in science and simple passes in English & Maths

G.C.E A/L - Passes in 3 subjects including credit in Chemistry

தை/ஆனி/2006 நடைபெறவிருக்கும் பரீட்சைக்கான மீட்டல் வகுப்புகள் சனி/ஞாயிற்றுக்கிழமைகளில் காலை 9 மணிக்கு நடைபெறுகின்றது. (40164) (21.16)

## COMPUTER EXPRESS

Institute of Information Technology

இல. 15, சிறாம்பியடி வீதி,யாழ்ப்பாணம்.(off Stanly Rd.)

021-222 8250,0777- 222422,077 3151647

இலங்கையில் முதற்தடவையாக கம்பனிக்கணக்குகளுடன்

**Computerized Accounting**

*Acc pac+Quick Book Pro+MYOB*

ஆகிய முன்னணி *Accounting Software* அனைத்திறுடாகவும் கற்பிக்கப்படும்.

Course Contents
- Fundamentals of IT
- Manual Accounting
- Financial Accounting
- Cost Accounting
- Taxation (Including VAT)
- Stock Control
- Bank Reconciliation
- Badgeting
- Fore Casting
- Business Planing

A\L மாணவர்களிற்குரிய விசேட பிரிவுகள் மேற்குறித்த தினத்தில் ஆரம்பமாகின்றன

இக்கற்கைநெறியின் முடிவில் வேலைகொள்வதற்கு
Audit Firm Experience தேவையில்லை!
Working Experience தேவையில்லை!

ஆரம்பம்
24/09/2005 9.30AM
25/09/2005

Tally Accounting Package
புதிய பிரிவுகள் ஆரம்பம்
24/09/2005:- 12.00-02.00 pm
25/09/2005 :-

# கண்ணீர் அஞ்சலி

**சோமசுந்தரஐயர் நடராஜக்குருக்கள்** 19.09.2005 திங்கட்கிழமை இறைபதமடைந்த செய்தியறிந்து அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவிக்கின்றோம். வண்ணை காட்டுத்துறை ஸ்ரீ அம்பலவாண விக்கினேஸ்வரப் பிள்ளையார் கோயிலில் கடந்த 15 வருடங்களாக உற்சவகாலக் குருவாக சேவையாற்றினார். அவரின் ஆத்மா சாந்திக்காக இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

இ.சந்தானகோபாலசர்மா, இ.குமாரசாமிசர்மா
தேவஸ்தான அர்ச்சகர்கள்,
ச.ஸ்ரீநிவாசன் தேவஸ்தான அறங்காவலர்,
அடியார்கள்
காட்டுத்துறை பிள்ளையார் தேவஸ்தானம்
ஒடை ஒழுங்கை, வண்ணார்பண்ணை. (21.16)

(40245)

# மரண அறிவித்தல்கள்



## கந்தசாமி அரசரட்ணம் (றட்ணி)

யாழ்ப்பாணம், கஸ்தூரியார் வீதியைப் பிறப்பிடமாகவும் திருநெல்வேலி கிழக்கு, காளிகோயிலடியை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தசாமி அரசரட்ணம் அவர்கள் நேற்று (20.09.2005) செவ்வாய்க்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தசாமி- சிவபாக்கியம் தம்பதியரின் மூத்த மகனும், காலஞ்சென்றவர்களான துரையப்பா -விசாலாட்சி தம்பதியரின் அன்பு மருமகனும், செல்வவதியின் அன்புக் கணவரும், அருட்செல்வன், அரவிந்தன், அகிலேஸ்வரன், அஜந்தன் (இத்தா), அருந்ததி ஆகியோரின் பாசமிகு தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

காளிகோயிலடி, திருநெல்வேலி கிழக்கு,
யாழ்ப்பாணம்.
T.P.: 0776054054

தகவல்:
**அஜந்தன்** (இத்தா-மகன்)

(40241)(21.16)

## குமாரசாமி சிவனேஸ்வரம் (ஆங்கில ஆசிரியர்)

(யா/துணவி அ.மி.த.க.பாடசாலை)



வட்டுக்கிழக்கைப் பிறப்பிடமாகவும், சங்கரத்தையை வசிப்பிடமாகவும் கொண்ட குமாரசாமி சிவனேஸ்வரம் அவர்கள் 18.09.2005 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான குமாரசாமி - மனோன்மணி தம்பதியின் அருமைப் புதல்வனும் காலஞ்சென்றவர்களான பரமராசா- சிவஞானவதியார் தம்பதியின் அன்பு மருமகனும், செல்வராணியின் அன்புக் கணவரும், சிவதர்ஷனி (பிரான்ஸ்) சிவகௌமினி (Union Assurance) ஆகியோரின் அன்புத் தந்தையும் சத்தியராஜ் (பிரான்ஸ்) அவர்களின் அன்பு மாமனாரும் கமலா, விமலா, பரமேஸ்வரன் (ஜேர்மனி) தவனேஸ்வரன், விக்கினேஸ்வரன், நடேஸ்வரன் (நடாமாஸ்ரர்) குமரகுருபரன் (ஆஸ்திரேலியா) ஆகியோரின் அன்புச் சகோதரனும், தவராணி, குகறாஜன் (கோகுலன் ஐஸ்கிறீம்) ஆகியோரின் அன்பு மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளை (22.09.2005) வியாழக்கிழமை காலை 9 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் வழுக்கையாறு இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சங்கரத்தை
வட்டுக்கோட்டை (40247)(21.16)

தகவல்:
**குகன் (மைத்துனர்-** கோகுலன் ஐஸ்கிறீம்).

# அனைவருக்கும் புலமைப்பரிசில்

## COMPUTER EXPRESS

Institute of Information Technology

## புலமைப்பரிசில் திட்டம் - 2005

**80% OFF**

| பாட நெறிகள் | | பாடநெறிக் கட்டணம் | செலுத்தவேண்டிய கட்டணம்(20%) |
|---|---|---|---|
| Diploma in computer Science | - 4மாதம் | 6,000 | 1,200 |
| Honours Diploma in Computer Science | - 6மாதம் | 8,000 | 1,600 |
| Diploma in Webpage Designing | - 4 மாதம் | 6,000 | 1,200 |
| Diploma in Graphic Designing | - 4 மாதம் | 6,000 | 1,200 |
| Diploma in Desktop Publishing | - 4 மாதம் | 5,000 | 1,000 |
| Diploma in Hardware Engineering | - 3 மாதம் | 5,000 | 1,000 |
| Accounting Package | - 3 மாதம் | 7,000 | 1,400 |
| Diploma in AutoCAD | - 3 மாதம் | 5,000 | 1,000 |
| MS Office | - 3 மாதம் | | 500 |

**50% OFF** Advances Courses

| | | |
|---|---|---|
| Diploma in Net Working | ~~4000~~ | 2000 |
| Diploma in Video Editing | ~~6000~~ | 3000 |
| Diploma in Multimedia | ~~5000~~ | 2500 |

கம்பியூட்டர் எக்ஸ்பிரஸ் ஆசிரியர் குழாமினால் வகுப்புக்கள் நடாத்தப்படும். சர்வதேச அங்கீகாரம் பெற்ற சான்றிதழ், வரையறுக்கப்படாத கணனிப் பயிற்சி.

October 03ம் திகதிக்கு முன்னர் பதிவு செய்துகொள்ளவும்.

வகுப்புக்கள் ஆரம்பம்
Batch II - 23/09/2005
Batch III - 24/09/2005
Batch IV - 25/09/2005
Batch V - 02/10/2005

Maniyam Building
இல. 15, சிறாம்பியடி வீதி,யாழ்ப்பாணம்.(off Stanly Rd.)
021-2228250, 0777 222422, 077 3151647

## கோட்டைகட்டிய குளத்தை புனரமைப்பதற்கு நிதி

ஒட்டுசுட்டான்,செப்.21

துணுக்காய் பிரதேச நிர்வாக எல்லைக்குட்பட்ட கோட்டைகட்டிய குளத்தைப் புனரமைப்புச் செய்வதற்கு உலகவங்கியின் வடக்கு- கிழக்கு மீள் நிர்மாணத் திட்டத்தின் கீழ் 6 கோடி ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிதியைப் பயன்படுத்தி விரைவில் இக்குளம் புனரமைப்பு மேற்கொள்ளப்படும் என்று துணுக்காய் பிரதேச் செயலகத் திட்டமிடல் பகுதி அதிகாரி திருமதி சாந்தி சுரேந்திரராசா தெரிவித்துள்ளார். (த-341-203)

## புதிய அதிபர் நியமனம்

வெள்ளாங்குளம்,செப்.21

இலுப்பைக்கடவை வித்தியாலயத்தின் அதிபராக கடந்த முதலாம் திகதி முதல் நந்தகோபாலசிங்கம் இராமச்சந்திரன் பொறுப்பேற்றுள்ளார்.

கடந்த ஆறு ஆண்டுகளாக இப்பாடசாலையின் அதிபராகக் கடமையாற்றியவரான கணேசபாலேந்திரன் தென்மராட்சிக் கல்வி வலயத்திற்கு இடமாற்றப்பட்டதையடுத்தே புதிய அதிபர் நியமிக்கப்பட்டார். (ஓ-415)

## முல்லைத்தீவில் வீட்டுத் திட்டம்

ஒட்டுசுட்டான்,செப்.21

முல்லைத்தீவுப் பிரதேசத்தில் ஆழிப் பேரலையால் பாதிக்கப்பட்ட ஒருதொகுதி வீடுகளை அமைப்பதற்கு அடிக்கல் நடப்பட்டுள்ளது.

இதற்கான நிகழ்வு கடந்த 11ஆம் திகதி முற்பகல் 10 மணிக்கு கள்ளப்பாடு கிராமத்தில் நடைபெற்றது.

தமிழர் புனர்வாழ்வுக் கழகம் இக்கட்டுமானப் பணியை முன்னெடுக்கிறது.

தொடர்ந்து தொகுதி தொகுதியாக வீடமைப்பு வேலைகள் மேற்கொள்ளப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டது. (ஓ-341-293)

## மாங்குளத்தில் மருத்துவ சேவை

கிளிநொச்சி,செப்.21

திலீபன் மருத்துவமனையின் சிறப்பு நடமாடும் சேவை கடந்த வெள்ளிக்கிழமை மாங்குளத்தில் நடைபெற்றது.

மாங்குளம் பிரதேச திலீபன் மருத்துவமனை அபிவிருத்திக் குழுத் தலைவர் சி.கருணேஸ்வரன் தலைமையில் நடைபெற்ற இச் சேவையை வைத்திய கலாநிதி திருமதி எழுமதி கரிகாலன் பொதுச் சுடர் ஏற்றி ஆரம்பித்து வைத்தார்.

தேசியக் கொடியை திலீபன் மருத்துவமனைப் போராளி வண்ணன் ஏற்றினார்.

ஈகச்சுடரை மாவீரர் நகுலாவின் தயார் சரஸ்வதி, பெரிய புளியங்குளம் அ.த.க. பாடசாலை அதிபர் நித்தியகலா வேகாவனம் ஆகியோர் ஏற்றினர்.

சுகாதாரக் கருத்துரையை திருமதி எழுமதி கரிகாலன் நிகழ்த்தினார். காட்சி அறையை மருத்துவப் போராளி ஈழவாணி நாடா வெட்டித் திறந்துவைத்தார்.

மருத்துவ சேவையில் பொது மருத்துவம், குழந்தை மருத்துவம், பற்சிகிச்சை என்பன வழக்கப்பட்டன. (த-202)

# வவுனியாவில் சுமூக நிலை பாதிப்பு: கண்காணிப்புக் குழுவிடம் முறைப்பாடு

ஒட்டுசுட்டான்,செப்.21

வவுனியா மக்களின் அன்றாட வாழ்வில் சுமூக நிலையை ஏற்படுத்த போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினர் நடவடிக்கை எடுக்கவேண்டும்

- இவ்வாறு போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினரிடம் வவுனியா வெகுசன ஒன்றியத்தின் பிரதிநிதிகள் வேண்டுகோள் விடுத்தனர். இது குறித்த மகஜரையும் அவர்கள் போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவிடம் சமர்ப்பித்தனர்.

போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினரை வவுனியா அலுவலகத்தில் வெகுஜன அமைப்புகளின் பிரதிநிதிகள் கடந்த 16ஆம் திகதி சந்தித்தனர். அப்போது இலங்கை தமிழரசுக் கட்சியின் வன்னி மாவட்ட அமைப்பாளர், வர்த்தக சங்கத்தின் பிரதிநிதிகள், எழுச்சிப் பேரவையினர் ஆகியோர் அடங்கிய குழுவினர் போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் வவுனியா மாவட்டத் தலைவரிடம் மகஜரைக் கையளித்தனர். வவுனியாவில் இடம்பெறும் கொலைகள் உள்ளிட்ட வன்முறைகளால் மக்களின் சுமூக வாழ்க்கை பாதிப்படைந்துள்ளதாகவும் -

இதனைச் சீர்செய்யும் வகையில் தமிழீழ விடுதலைப் புலிகள் மீண்டும் இராணுவப் பகுதிக்குள் வந்து அரசியல் நடவடிக்கையினை மேற்கொள்வது அவசியம் என்றும் -

அதற்கு போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினர் ஏற்பாடு செய்துகொடுக்கவேண்டுமெனவும் அவர்கள் கேட்டுள்ளனர். (ஓ-341)

**முல்லைத்தீவு மாவட்டத்தில்**

# அனுபவமிக்க அலுவலர் இல்லை; இதனால் அபிவிருத்தி தாமதம்

ஒட்டுசுட்டான்,செப்.21

அனுபவம் வாய்ந்த தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள் இல்லாததால் முல்லைத்தீவு மாவட்டத்தின் அபிவிருத்தி வேலைகள் தாமதமாகிவருகின்றன.

முல்லைத்தீவு மாவட்டம் துரிதகதியில் அபிவிருத்தி செய்யப்படவேண்டிய தேவையுள்ளது. தற்போது ஒரு சில அபிவிருத்திப் பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

பல வேலைகளில் பின்னடைவுகள் ஏற்படுவதற்கு அனுபவம் வாய்ந்த தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள் இல்லாமையே காரணம் என திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன.

இதேவேளை -

பணியில் ஈடுபட்டுள்ள சில தொழில்நுட்ப உத்தியோகத்தர்களும் வாகன வசதிகள் இல்லாமையால் பெரும் சிரமங்களை அனுபவித்து வருகின்றனர் என்றும் அந்த வட்டாரங்கள் சுட்டிக்காட்டுகின்றன. (ஓ-341-202)




# ஒட்டுசுட்டானில் கடும் வரட்சி: பெரும் போகத்திற்குப் பாதிப்பு

ஒட்டுசுட்டான்,செப்.21

ஒட்டுசுட்டானில் தற்போது நிலவி வரும் வரட்சி காரணமாக 2005- 2006 காலபோக நெற்செய்கைக்கான நிலத்தைப் பண்படுத்த முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாக விவசாயிகள் கவலை தெரிவித்துள்ளனர்.

நெல் விதைப்பை மேற்கொள்ளும் காலம் நெருங்கிவருகின்றது. எனினும் வரட்சிகாரணமாக காணிகளை உழுது பண்படுத்த முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாக அவர்கள் மேலும் கவலை தெரிவித்துள்ளனர்.

தற்போது விவசாயிகள் மழையை எதிர்பார்த்த வண்ணம் உள்ளனர். மழை பெய்தால்தான் நெற்செய்கைக்கான ஆரம்பநடவடிக்கைகளையே மேற்கொள்ள முடியும் என்ற அளவிற்கு இப்பகுதியில் வரட்சி நிலவுகின்றது. (த-341-203)

# 'துளிர்' கவிதை நூல் வெளியீடு

பரந்தன்,செப்.21

நவம் அறிவுக்கூட மீள்வலுவுள்ளவர்களின் ஆக்கங்கள் அடங்கிய 'துளிர்' கவிதை நூல் வெளியீட்டு விழா கடந்த ஆம் திகதி லெப்.கேணல் நவம் அறிவுக்கூடத்தில் நடைபெற்றது.

போராளி நிமலன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் லெப்.கேணல் நவத்தின் திருவுருவப் படத்திற்கான ஈகச்சுடரை நவம் அறிவுக்கூடப் பொறுப்பாளர் து.ப. கலைக்கோன் ஏற்றிவைத்தார்.

தொடர்ந்து தமிழீழத்தேசியக் கொடியை புலிகளின் குரல் நிறுவனப் பொறுப்பாளர் நா.தமிழன்பன் ஏற்றினார்.

போராளி நிமலன் ஆய்வுரையையும், புலிகளின் குரல் நிறுவனப் பொறுப்பாளர் சிறப்புரையையும் கோப்பாய் கல்வியியற் கல்லூரி விரிவுரையாளர் ஆ.இரவீந்திரநாதன் மதிப்பீட்டுரையையும் வழங்கினர்.

தொடர்ந்து நூலின் முதற்பிரதியை கணனி ஆசிரியை செல்வி உமா வெளியிட்டுவைக்க இனிய வாழ்வில்லப் பணிப்பாளர் திருமதி காந்திமதி அதனைப் பெற்றுக்கொண்டார். (ஓ-352-203)

## கற்சிலைமடு மருத்துவமனையில் திலீபனின் நினைவு நிகழ்வு

ஒட்டுசுட்டான்,செப்.21

லெப்.கேணல் தியாக தீபம் திலீபனின் 18 ஆவது ஆண்டு நினைவு தின நிகழ்வுகள் கடந்த16 ஆம் திகதி கற்சிலைமடு தியாக தீபம் திலீபன் மருத்துவமனையில் சிறப்புற நடைபெற்றது.

மருத்துவமனைப் பணிப்பாளர் சுகிர்தா தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் பொதுச் சுடரினை மருததுவமனைச் சாரதி கதிர்காமு ஏற்றிவைத்தார். தமிழீழத் தேசியக் கொடியை மருத்துவப் போராளி ஈழநிலா ஏற்றினார். திருவுருவப் படத்திற்கான மலர் மாலையை மருத்துவப் பணிப்பாளர் செல்வராசா ரமா அணிவித்தார். (த-341-202)

## நியாப் II திட்டத்தில் தண்டுவானில் அபிவிருத்தி

புதுக்குடியிருப்பு,செப்.21

நியாப் II திட்டத்தின் கீழ் தண்டுவான் கிராமத்தில் பொதுக் கிணறு, பொதுநோக்கு மண்டபம், வீதி என்பன அமைக்கப்படவுள்ளன.

இதுதொடர்பான கூட்டம் ஒன்று அண்மையில் தண்டுவான் அ.த.க.பாடசாலையில் நடைபெற்றது.

இக் கூட்டத்தில் தண்டுவான் பிரதேசப் பொறுப்பாளர் ஈழவன், ' நியாப்' திட்டவலுஆட்டலாளர், கிராம அபிவிருத்திச் சங்கத்தினர், மாதர் அபிவிருத்திச் சங்கத்தினர், பொது மக்கள் எனப் பலர் கலந்துகொண்டனர்.

பொதுநோக்கு மண்டபம், கிணறுகள் என்பவற்றை அமைப்பதற்கான இடங்கள் தெரிவுசெய்யப்பட்டுள்ளன. (353-202)

## கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டன

புதுக்குடியிருப்பு,செப்.21

சிறுவர் பாதுகாப்பு நிதியம் முல்லைத்தீவு வலய பாடசாலை மாணவர்களுக்கு ஒரு தொகுதி கற்றல் உபகரணங்களை வழங்கியுள்ளது.

வலயத்திலுள்ள மாணவர்களின் கல்விச் செயற்பாட்டை ஊக்குவிக்கும் முகமாக வலயக் கல்விப் பணிமனையூடாகஇப்பொருள்கள் வழங்கப்பட்டுள்ளன. (த-353-202)

## வவுனியா வடக்கில் 100 வீடுகள் அமைப்பு

புதுக்குடியிருப்பு,செப்.21

வடக்கு - கிழக்கு வீடமைப்புத் திட்டத்தின் கீழ் வவுனியா வடக்குப் பிரதேச செயலகப் பிரிவில் 100 வீடுகள் அமைக்கப்பட்டு வருகின்றன.

பட்டிக்குடியிருப்பு, துவரங்குளம், கற்குளம், நெகழ்படந்தான் ஆகிய கிராமங்களில் அமைக்கப்பட்டுவரும் மேற்படி வீடுகளின் கட்டுமான வேலைகள் பூர்த்தியாகும் நிலையிலுள்ளன. மிகவிரைவில் இவ் வீடுகள் மக்களிடம் கையளிக்கப்படவுள்ளன என்று தெரிவிக்கப்பட்டது.

'ஜெயசிக்குறு' இராணுவ நடவடிக்கையின்போது இந்தப் பிரதேசங்களின் வீடுகள் யாவும் முற்றாக அழிவடைந்தன. இப்பிரதேச மக்கள் குடியிருப்பதற்கு வீடுகள் இல்லாமல் வேறு பிரதேசங்களில் தற்காலிகமாகத் தங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (த-353-202)

## பெண்கள் தொடர்பான விழிப்புணர்வுக் கருத்தரங்கு

புதுக்குடியிருப்பு,செப்.21

பெண்களுக்கு எதிரான வன்முறைகளைத் தடுத்தல், ஆண் பெண் சமத்துவம், பெண்கள் உரிமைகள் தொடர்பாக விழிப்புணர்வு பெறச் செய்தல் ஆகிய விழிப்புணர்வுச் செயற்பாடுகளை முல்லைத்தீவு மாவட்ட மகளிர் அரசியல்துறையும் பெண்கள் அபிவிருத்தி நிறுவனமும் இணைந்து மேற்கொண்டுவரு கின்றன.

குறிப்பாக ஆழிப்பேரலை அனர்த்தத்தால் பாதிக்கப்பட்டு தற்காலிகக் குடியிருப்புகளில் வசிக்கும் மக்களுக்கு இத்தகைய கருத்தரங்குகள் நடத்தப்படுகின்றன. கடந்த மாதம் 29ஆம் திகதி இடம்பெற்ற இந்த நிகழ்வில் கருத்துரை களை முல்லைத்தீவு மாவட்ட பெண்கள் அபி விருத்திப் புனர்வாழ்வுக் கழக இணைப்பா ளர், 'ஒக்ஸ்பாம்' நிறுவன இணைப்பாளர் ஆகியோர் வழங்கினர்.

'ஒக்ஸ்பாம்' நிறுவனத்தினரும் பெண்கள் அபிவிருத்திப் புனர்வாழ்வு நிறுவனத்தினரும் இணைந்து கடந்த வருடம் தொடக்கம் பால்நிலை சமத்துவம் தொடர்பாக பல்வேறு கருத்தரங்குகளையும் நடத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (த-353-204)



**நவம் அறிவுக்கூடத்தில் நடைபெற்ற 'துளிர்' கவிதைத் தொகுப்பு நூல் வெளியீட்டு விழாவில் 'புலிகளின் குரல்' நிறுவனப் பொறுப்பாளர் நா.தமிழன்பன் தமிழீழத் தேசியக் கொடியேற்றுவதையும் - லெப்.கேணல் நவத்தின் திருவுருவப் படத்திற்கு மலர் மாலை சூட்டப்படுவதையும் -படங்களில் காணலாம்.**

*(படங்கள் : பரந்தன் செய்தியாளர்)*

"எனக்கும் போட்டிகளில் பங்களிக்க விருப்பம். ஆனால் பாடசாலையில் ஆசிரியர்களின் பிள்ளைகளுக்கே முன்னுரிமை கிடைக்கின்றது. அவர்கள் முன் திறமையிருந்தும் நாங்கள் திறமையற்றவர்களாகி விடுகின்றோம்" - தீபக் வயது 16

**உங்களுக்குத் தெரியுமா?**

பிள்ளைகள் சகல வகையான இம்சைகள் புறக்கணிப்புக்கள் என்பவற்றில் இருந்து பாதுகாப்பு பெறும் உரிமையுடையவர்கள்.

- சிறுவர் உரிமைகள் சமவாயம் - 2

பாடசாலைச் சமூகமே! பாகுபாடின்றி பிள்ளைகளின் திறமைகளை வளர்ப்பதற்கு உதவுவீர்களா?

**உலக சிறுவர் தினத்திற்கு இன்னும் 10 நாட்களே உள்ளன.**

# பாராட்டி வாழ்த்துகின்றோம்

யா/அம்பன் அ.மி.த.க. பாடசாலையில் க.பொ.த. உயர்தர வகுப்பு முதன்முதலாக 2003ஆம் ஆண்டு தற்காலிக அனுமதியுடன் புதிதாக ஆரம்பிக்கப்பட்டு, இவ்வகுப்பில் பத்து மாணவர்கள் கல்வி கற்றனர். கல்வி கற்ற ı. ந்து மாணவர்களும் 2005ஆம் ஆண்டு க.பொ.த. உ/த பரீட்சைக்குத் தோற்றி அனைவருமே நல்ல பெறுபேறுகளைப் பெற்றுள்ளனர். இம்மாணவர்கள் நல்ல பெறுபேறுகள் பெற உழைத்த இப்பாடசாலை அதிபர், ஆசிரியர்களுக்கும் எமது பாடசாலையில் க.பொ.த. உ/த வகுப்பை ஆரம்பிக்க உதவியவர்களுக்கும் இப்பாடசாலையில் கல்வி பயின்று பரீட்சையில் நல்ல பெறுபேறுகளைப் பெற்று இப்பாடசாலைக்கும் ஆசிரியர்களுக்கும் பெற்றோர்களுக்கும் நன்மதிப்பைத் தேடித்தந்த மாணவர்களையும் மனதாரப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

சித்தியடைந்த மாணவர்களின் பெறுபேறுகளின் விவரம்:

| | |
|---|---|
| 1. பே.அனிதா | 2 A, B |
| 2. ர.அனுராகரன் | A, 2B |
| 3. நா.பிரசாந்தி | A, B, C |
| 4. க.சுமதா | A, 2C |
| 5. வே.கிரிஜா | 2B, C |
| 6. க.கீர்த்தனா | 2B, C |
| 7. இ.தனுஜா | B, 2C |
| 8. சி.புனிதமலர் | B, 2C |
| 9. பா.லஜிதா | 2B, S |
| 10. சி.சிவாதரன் | 3C |

பெற்றோர்,
பழைய மாணவர்,
நலன்விரும்பிகள்.

அம்பன்,
குடத்தனை.

(40225) (24-16-19)

## சாதனையாளர்களை வாழ்த்துகின்றோம்

தீவக வலயத்தில் தனக்கென ஒரு தனியான இடத்தைப் பெற்ற **ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரியின்** உடற் பயிற்சிக் குழுவினர் வலய, மாவட்ட, மாகாண மட்டங் களில் முதன்மை பெற்று தேசிய மட்டத்திலும் 2ஆம் இடத்தைப் பெற்று கல்லூரித் தாய்க்கும் 20 வருடங்களின் பின் யாழ். மாவட்டத்திற்கும் பெருமையையும் புகழையும் தேடித் தந்துள்ளனர். அவர்களைப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

அத்தோடு, கல்வியிலும் '2005' உயர்தரப் பரீட்சையில் தீவக வலயத்தில் '3A' சித்தியைப் பெற்ற **செல்வி தெ.துஸ்யந் தினியையும்** அவரோடு சிறந்த பெறுபேறுகளைப் பெற்ற ஏனைய மாணவர்களையும் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

(40220) (24-16-19)

**பழைய மாணவர் சங்கம்,**
**யா/புனித அந்தோனியார் கல்லூரி, கனடா கிளை.**

## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 12 - 05 - 1974



மறைவு 21 - 09 - 2003

அமரர்

# சிவசம்பு ராஜ்மோகன்

திதி: தசமி 27-09-2005

ஈராண்டு காலமது உருண்டோடி மறைந்திடினும்
ஈரவிழிகள் இங்கு காயவில்லை நின் நினைவால்...!

பாரதி வீதி,
நாயன்மார்கட்டு,
யாழ்ப்பாணம்.

6, GLEDWOOD DRIVE,
HAYES,
UB 4 0AG, LONDAN.

அப்பா,
சகோதரிகள்,
மைத்துனர்.

(40152) (24-16-19)

## 'பாண்ட்' வாத்திய கருவிகள் அன்பளிப்பு

சங்கானை,செப்.21

சங்கானை சிவப்பிரகாச மகாவித்தியாலயம் 'பாண்ட்' வாத்தியக் கருவிகளைக் கொள்வனவுசெய்துள்ளது. நாடாளுமன்ற உறுப்பினர் ந.ரவிராஜ் வழங்கிய நிதியைப் பயன்படுத்தி இந்தக் கருவிகள் கொள்வனவு செய்யப்பட்டுள்ளன. (எ-29)

## சமாதான வார விசேட வழிபாடு

வலி.தெற்கு,செப்.21

சர்வதேச சமாதான வாரத்தை முன்னிட்டு மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலயத்தில் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை விசேட பூசை வழிபாடுகள் நடைபெறவுள்ளன.

மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலய அறநெறிப் பாடசாலை மாணவர்கள் அதன் அதிபர் சமூகஜோதி கா.கணேசதாசன் தலைமையில் விசேட பூசைகளிலும் கூட்டுப் பிரார்த்தனையிலும் ஈடுபடுவர்.

அன்றையதினம் இணுவில் அண்ணா தொழிலகத்தால் வெளியிடப்பட்ட ''பதினாறு விநாயகர் திருப்பெயர்கள்'' என்னும் நூல் இலவசமாக மாணவர்களுக்கு வழங்கப்படும். (ஓ-152)

## விற்பனைக்குண்டு

*'ஏ போட்டி' ரயர் 5.50-16 பிறிஸ்ரோன் ரயர் விற்பனைக்குண்டு.*

தொடர்பு:ஆலடிச்சந்தி,
பிரதான வீதி,
மானிப்பாய்.

(40215) (24-16-19)

## தேவை

பான்சி, தொலைத்தொடர்பு, போட்டோ பிரதி வியாபாரத்தில் அனுபவமுள்ள பெண்களும் பழகவிரும்புவோரும் தேவை.

நேரில் தொடர்பு கொள்ளவும்
சீலைன்ஸ் கொம்பிளெக்ஸ்
வதிரி வீதி, உடுப்பிட்டி.

## டிஜிற்றல் போட்டோ கொப்பி


$A_4$ - கறுப்பு வெள்ளை -3 ரூபா
$A_4$ - கலர் 40 ரூபா

**மூர்த்தி லேசர் டிஜிற்றல் கலர் லாப்**
*62/16, ஸ்ரான்லி வீதி,*
*யாழ்ப்பாணம்.*

(8/45195) (39-16-19-24)

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

தோற்றம் 15 - 02 - 1922



மறைவு 21 - 08 - 2005

# திருமதி சின்னையா தங்கம்மா

21-08-2005 அன்று சிவபதமடைந்த எமது அன்புத் தாயின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (21-09-2005) புதன் கிழமை அவரின் இல்லத்தில் நடைபெறவுள்ளது. அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்து கொண்டு அன்னாரின் ஆத்மசாந்திக்காகப் பிரார்த்திக்குமாறு அனைவரையும் அழைக்கின்றோம்.

சங்கரப்பிள்ளை வீதி,
ஆனைக்கோட்டை.

பிள்ளைகள்,
மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

(40208) (24-16-19)

ஜெய்குருதேவ்



ஸ்ரீஸ்ரீ ரவிசங்கர்ஜி அவர்களின்

# வாழும் கலைப் பயிற்சி

(சிறுவர்களுக்கானது)

8 வயது தொடக்கம் 15 வயதுவரை

குறிப்பு: ஞாபக சக்தி அதிகரிக்கும், மனம் ஒரு நிலைப்படும். பிள்ளைகள் தன் சக்தி அறிந்து உள் உணர்ந்து ஆன்மீக வழியில் வளர்ந்து ஊக்கமும் உற்சாகமும் கொண்டு தம் எதிர்காலச் சவால்களை துணிகரமாகவும் வெற்றிகரமாகவும் எதிர்கொள்ளும் மனவலிமை ஏற்படும். அஸ்மா குணப்படும்.

நாள் : 2005.09.22 முதல் 2005.09.25 வரை
நேரம் : காலை 9 முதல் மாலை 5 வரை
இடம் : கம்பன் கோட்டம், நல்லூர், யாழ்ப்பாணம்.

மேலும் தொடர்புகளுக்கு: 0779059549, 0779059544
பதிவுகளை 2005.09.21 அன்று மேற்படி மண்டபத்தில் மேற்கொள்ளலாம்.

*அன்பில் மலருங்கள்!* *உங்களை உணருங்கள்!*
*அனைவரும் வருக!*

(40186) (51-11-34)

www.artofliving.org www.srisriravishankar.org

## 31ஆம்நாள் கண்ணீர் அஞ்சலி
அமரர் சுப்பர் கிருஸ்ணபிள்ளை

தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையில் வேலை செய்யும் க.பத்மநாதனின் மாமனார் காலஞ்சென்ற செய்தியை அறிந்து வடபிராந்திய தொழிற்சங்கம் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதோடு, அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

வடபிராந்திய தொழிற்சங்கம்
தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபை,
யாழ்ப்பாணம். (40221) (24-16-19)






STUDY SITE FOR VISUAL CULTURE

# ஓவிய இரசனை

விளக்கப் படங்களுடன் கூடிய விரிவுரைத் தொடர்

**யாருக்கு?**
ஓவியம்பற்றி, அதன் வரலாறு, இன்றைய போக்குகளை அறிந்து கொள்ள ஆர்வம் உடைய சகலருக்கும்

**எங்கே?**
405, பருத்தித்துறை வீதி, நல்லூர்.
(நல்லூர் சிவன் கோவிலுக்கு முன்பாக)

**காலம்?**
20 மணித்தியாலங்கள் (வார இறுதி நாட்களில்)

**எப்போது?**
15.10.2005 மாலை 3.00 மணி

**கட்டணம்?**
1500/=

மேலதிக விபரங்களுக்கு 0777774015

ஆர்வமுடையோர் 05.10.2005இக்கு முன்னர் தமது சுய விபரக் கோவையை பின்வரும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்

செயலாளர், சேது, 82 கச்சேரி கிழக்கு ஒழுங்கை யாழ்ப்பாணம்.

# 17 வயதுப் பிரிவு கிரிக்கெட் போட்டி: சென்.பற்றிக்ஸ் வென்று சம்பியனானது

யாழ்ப்பாணம்,செப்.21

யாழ்.மாவட்ட பாடசாலைகள் கிரிக்கெட் சங்கம் கொமேர்ஷல் வங்கியின் அனுசரணையுடன் நடத்திய 17 வயதுப் பிரிவினருக்கான கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் சென். பற்றிக்ஸ் கல்லூரி வெற்றிபெற்று சம்பியன் கிண்ணத்தைக் கைப்பற்றியது.



சென்.ஜோன்ஸ் கல்லூரி மைதானத்தில் நேற்று முன்தினம் நடந்த இறுதியாட்டத்தில் சென்.பற்றிக்ஸ் கல்லூரியும் யாழ்.மத்திய கல்லூரியும் மோதின.

முதலில் துடுப்பெடுத்தாடிய சென். பற்றிக்ஸ் கல்லூரி அணி சகல விக்கெட்டுக்களையும் இழந்து 187 ஓட்டங்களைப் பெற்றது.

கோபிஷன், தவதீபன், கஜமுகன், நவதீசன், நிலோஷன், ஜெனிபர் ஆகியோர் முறையே 24, 40, 51, 12, 18, 14 ஓட்டங்களைப் தமது அணிக்காகப் பெற்றுக் கொடுத்தனர்.

மயூரன் 41 ஓட்டங்களைக் கொடுத்து மூன்று விக்கெட்டுக்களையும் சிவகரன் 32 ஓட்டங்களைக் கொடுத்து நான்கு விக்கெட்டுக்களையும் கோசன் 32 ஓட்டங்களைக் கொடுத்து இரண்டு விக்கெட்டுக்களையும் தனுசன் 42 ஓட்டங்களைக் கொடுத்து ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய யாழ். மத்திய கல்லூரி அணி சகல விக்கெட்டுக்களையும் இழந்து 122 ஓட்டங்களை மட்டுமே பெற்றது.

ஸ்ரிபன்ராஜ், பிரதீபன், மயூரன், ஜேம்ஸ் ஆகியோர் முறையே 11, 12, 25, 43 ஓட்டங்களைத் தமது அணிக்காகப் பெற்றுக்கொடுத்தனர்.

கேதீஸன் 28 ஓட்டங்களைக் கொடுத்து ஏழு விக்கெட்டுக்களையும், மைக்கல் றொபட் 15 ஓட்டங்களைக் கொடுத்து ஒரு விக்கெட்டையும் கமில்ரன் ஒன்பது ஓட்டங்களைக் கொடுத்து ஒரு விக்கெட்டையும் ஜெனிபர் 16 ஓட்டங்களைக் கொடுத்து ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

சிறந்த பந்து வீச்சாளராக சென்.பற்றிக்ஸ் கல்லூரி அணி வீரன் கேதீஸனும்- சிறந்த துடுப்பாட்ட வீரனாக சென்.பற்றிக்ஸ் கல்லூரி அணி வீரன் கஜமுகனும் சிறந்த களத்தடுப்பாளராக யாழ். மத்திய கல்லூரி அணி வீரன் கோபிகனும் சிறந்த ஆட்டநாயகனாக சென்.பற்றிக்ஸ் கல்லூரி வீரன் கேதீஸனும் தெரிவு செய்யப்பட்டனர்.

சுற்றுப் போட்டியின் சிறந்த துடுப்பாட்ட வீரனாக சென்.பற்றிக்ஸ் கல்லூரி அணியின் வீரன் நவதீபனும் சுற்றுப் போட்டியின் சிறந்த பந்துவீச்சாளராக யாழ். இந்துக் கல்லூரி அணி வீரன் பவசுதனும் தெரிவு செய்யப்பட்டனர்.

இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக யாழக உரிமையாளர் எஸ்.சோமசுந்தரமும் சிறப்பு விருந்தினராக கொமர்ஷல் வங்கியின் உதவி முகாமையாளர் குருபாதமும் கலந்துகொண்டு பரிசில்களை வழங்கினர்.

(3-190)

## இன்றைய ஆட்டங்கள்

நவக்கிரி எல்லாளன் விளையாட்டுக் கழகம் தனது 14 ஆம் ஆண்டு நிறைவை ஒட்டி கழக மைதானத்தில் நடத்திவரும் மாபெரும் உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியில் இன்று நடைபெறவுள்ள ஆட்டங்களில் மோதவுள்ள அணிகளின் விவரம் வருமாறு:

* பிற்பகல் 3.30 மணி- சில்வஸ்ரார் வி.க. எதிர் நவசக்தி வி.க
* மாலை 4.30 மணி- சென். தோமஸ் வி.க. எதிர் சென்.மைக்கல் வி.க. (3-203)

* * *

உடுவில் மத்திய விளையாட்டுக் கழகம் நடத்தி வரும் கரபந்தாட்டச் சுற்றுப்போட்டியில் இன்று புதன்கிழமை மாலை 4 மணிக்கு மத்திய விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெறவுள்ள ஆட்டங்களில் கலந்துகொள்ளவுள்ள அணிகளின் விவரம் வருமாறு:

* இணுவில் கலாஜோதி வி.க.எதிர் வாலிபர் வி.க.
* விக்கினேஸ்வரா வி.க.எதிர் இணுவில் இந்து வி.க. (3-86)

## ஜனசக்தி கிண்ண உதைபந்தாட்டம்

# விறுவிறுப்பான ஆட்டத்தில் பொமேர்ஸ் வெற்றிபெற்றது

யாழ்ப்பாணம்,செப்.21

ஜனசக்தி காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தின் அனுசரணையுடனும் பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக் நடத்தும் உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியின் அரையிறுதி ஆட்டங்களில் வதிரி பொமேர்ஸ் விளையாட்டுக் கழகம், வதிரி டயமன்ஸ் விளையாட்டுக்கழகத்தைத் தோற்கடித்து இறுதியாட்டத்திற்குத் தகுதி பெற்றது.

இந்த அரையிறுதி ஆட்டம் கடந்த சனிக்கிழமை வதிரி டயமன்ஸ் விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெற்றது. போட்டி ஆரம்பமாகி முடிவடையும் வரை மிகவும் விறுவிறுப்பாக இடம்பெற்ற இந்த ஆட்டத்தில் முதல் பாதி ஆட்டம் [illegible] ஆரம்பமாகி 4 ஆவது நிமிடத்தில் பொமேர்ஸ் அணிக்கு கோல் பெறுவதற்கு அருமையான சந்தர்ப்பம் கிடைத்தது. ஆனால், அந்த அணியின் மத்திய கள முன்னணி வீரர் நிரோஷன் அதனைச் சரியாகப் பயன்படுத்தத் தவறிவிட்டார். இருந்தபோதும் 11 ஆவது நிமிடத்தில் நிரோஷனுக்கு மீண்டும் ஒரு சந்தர்ப்பம் கிடைத்தது. அதனைச் சரியாகப் பயன்படுத்தி மிகவும் அழகாக தனது அணிக்காக முதலாவது கோலை மிகவும் கஷ்ரப்பட்டு பெற்றுக்கொடுத்தார். அதன் பின் போட்டி மிகவும் விறுவிறுப்படைந்தது. ஆட்டத்தின் 20 ஆவது நிமிடத்தில் பொமேர்ஸ் அணியின் இடதுகரை முன்னணி வீரர் பாக்கிராசா தனக்குக் கிடைத்த பந்தொன்றை மிகவும் இலாவகமாக மத்திய முன்னணி வீரர் நிரோஷனிடம் தட்டிக்கொடுக்க அதனையும் அவர் அழகாகக் கோலாக்கி தனது அணிக்கான இரண்டாவது கோலைப் பெற்றுக்கொடுத்தார்.

இந்நிலையில் பொமேர்ஸ் அணி 2:0 என்ற நிலையில் முன்னணியில் இருந்தபோது ஆட்டம் இடைவேளைக்காக நிறுத்தப்பட்டது. இடைவேளையின் பின்னர் ஆட்டம் மிகவும் விறுவிறுப்படைந்தது. இடைவேளை ஆரம்பமாகி சுமார் 7 நிமிடங்கள் வரை டயமன்ஸ் விளையாட்டுக் கழகத்தின் ஆதிக்கமே மேலோங்கியிருந்தது. அந்த அணிக்கு இடைவேளையின் பின் ஆட்டம் ஆரம்பமாகி முதலாவது நிமிடத்திலேயே டயமன்ஸ் விளையாட்டுக் கழகத்திற்கு கோல் பெறுவதற்குச் சந்தர்ப்பம் கிடைத்தது. அதனை அவர்கள் பயன்படுத்தத் தவறிவிட்டனர். அதே போல் 4 ஆவது நிமிடத்திலும் ஒரு சந்தர்ப்பம் கிடைத்தது. அதனையும் அவர்கள் தவறவிட்டனர். இருந்த போதும் சில நிமிடங்களில் பொமேர்ஸ் வி.க. வீரர் கோல் பிரதேசத்திற்குள் விட்ட தவறிற்காக டயமன்ஸ் விளையாட்டுக் கழகத்திற்கு தண்டனை உதை வழங்கப்பட்டது. அதனை அவ்வணி வீரர் அரவிந்தன் சரியான முறையில் பயன்படுத்தித் தனது அணிக்கான முதலாவது கோலைப் பெற்றுக்கொடுத்தார்.

அதன் பின் ஆட்டம் மிகவும் சூடுபிடிக்கத் தொடங்கின. இரு அணியினரும் மேலும் கோல்களைப் பெறும் முயற்சியில் ஆக்ரோஷத்துடன் விளையாடினர் இதனால் இருபகுதியினரின் கோல் பிரதேசங்களை பந்து மாறி மாறி ஆக்கிரமித்தவண்ணமே இருந்தது. இந்த நிலையில் ஆட்டம் நிறைவடைவதற்கு 5 நிமிடங்கள் இருக்கையில் பொமேர்ஸ் அணி வீரர் தனக்குக் கிடைத்த பந்தொன்றை மெதுவாகத் தட்ட அதனைப் பிடிக்க டயமன்ஸ் கோல் காப்பாளர் சற்று முன்னேநகர பந்து துள்ளி அவரை ஏமாற்றிக் கோல் கம்பங்களுக்குள் புகுந்து கொண்டது. இதனால் பொமேர்ஸ் அணி 3 ஆவது கோலைப் பெற்றுக்கொண்டது.

இறுதியில் 3:1 என்ற கோல் கணக்கில் பொமேர்ஸ் வி.க. வென்று இறுதி ஆட்டத்திற்குத் தகுதிபெற்றது.

(3-410)

# சிறுவர் உளவளத்தை மேம்படுத்த முல்லைத்தீவில் விளையாட்டு விழா

யாழ்ப்பாணம்,செப்.21

ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்ட சிறுவர்களின் உளவளத்தை மேம்படுத்தும் நோக்குடன் இளையோர் செயற்பாட்டு நிறுவனத்தினர் ஆழிப்பேரலை பாதித்த இடங்களில் இளையோர் விளையாட்டு விழாவை நடத்தி வருகின்றனர்.

அந்த வகையில் அண்மையில் முல்லைத்தீவு மாவட்டத்தில் இந்த விழா நடத்தப்பட்டது.

முல்லைத்தீவு மாவட்ட விளையாட்டுப் பயிற்றுவிப்பாளர் முகுந்தன், இளையோர் செயற்பாட்டு நிறுவன முல்லைத்தீவு இணைப்பாளர் கணேஷ் ஆகியோரின் ஒழுங்குபடுத்தலில் இந்த நிகழ்வுகள் நடத்தப்பட்டன.

பாதிக்கப்பட்ட பிரதேசங்களைச் சேர்ந்த சிறுவர்களிடையே உதைபந்தாட்டம், கபடி, தாச்சி ஆகிய போட்டிகள் நடத்தப்பட்டன.

இந்த நிகழ்விற்கு இளையோர் நிறுவன திட்ட இணைப்பாளர் ரங்கன், தமிழீழ விளையாட்டுத் துறையின் ஊடக இணைப்பாளர் தேவன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

இதேவேளை, சிலாவத்தையில் உள்ள தற்காலிகக் குடியிருப்பில் உள்ள சிறுவர்களுக்கான விளையாட்டு விழாவும் நடத்தப்பட்டது.

(3-203-341)



# பரபரப்பான ஆட்டத்தில் மனோகரா வென்றது

ஜனசக்தி காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தின் அனுசரணையுடன் பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக் நடத்தும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியின் மற்றோர் அரையிறுதியாட்டத்தில் பலத்த போட்டியின் மத்தியில் அல்வாய் மனோகரா விளையாட்டுக் கழகம் வெற்றி பெற்று இறுதியாட்டத்துக்குத் தகுதிபெற்றுள்ளது.

இந்த அரையிறுதியாட்டம் கடந்த ஞாயிற்றுக்கிழமை வதிரி டயமன்ஸ் விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெற்றது. இதில் அல்வாய் மனோகரா விளையாட்டுக் கழகமும் கரவெட்டி நவசக்தி விளையாட்டுக் கழகமும் மோதின.

மிகவும் விறுவிறுப்பாக இடம்பெற்ற இவ்வாட்டத்தின் 20ஆவது நிமிடத்தில் மனோகரா விளையாட்டுக்கழக வலதுகரை முன்னணி வீரன் எஸ்.நிரோஜன் மிகவும் அழகான கோல் ஒன்றை உதைத்து தமது அணிக்கான முதலாவது கோலைப் பெற்றுக் கொடுத்தார். இதனைத் தொடர்ந்து ஆட்டம் மேலும் விறுவிறுப்படைந்தது. இரு பகுதியினரின் கோல் பிரதேசத்தை பந்து மாறி மாறி ஆக்கிரமித்துக்கொண்டிருந்தபோதும் இரு அணிகளினதும் தடுப்பாட்ட வீரர்களின் அபாரமான தடுப்பால் இரு அணி வீரர்களாலும் கோல் பெற முடியாதுபோனது. இந்நிலையில் 1:0 என்ற கோல் அடிப்படையில் ஆட்டம் இடைவேளைக்காக நிறுத்தப்பட்டது.

இடைவேளையின் பின் ஆட்டம் தொடங்கியது. இரு அணிவீரர்களும் புதிய உத்வேகத்துடன் விளையாடினர். மனோகரா அணி, எதிர் அணியினர் கோல் அடிப்பதனை தடுத்து நிறுத்தியதுடன் தமது அணியின் வெற்றியை உறுதிப்படுத்துவதற்கான மேலதிக கோலைப் பெறுவதிலும் முயற்சிகளை மேற்கொண்டனர். மறுபுறத்தில் நவசக்தி அணியினர் எதிரணியினரின் தடுத்தாடும் வியூகங்களை உடைத்து கோல் பெறும் முயற்சியில் ஈடுபட்டனர். இந்நிலையில் இடைவேளையின் பின் ஆட்டம் ஆரம்மாகி 11ஆவது நிமிடத்தில் நவசக்தி அணி வீரர் தமக்குக் கிடைத்த மூலை உதையைச் சரியாகப் பயன்படுத்தி தமது அணிக்கான கோலைப் பெற்றுக் கொடுத்தார்.

இதனைத் தொடர்ந்து பார்வையாளர்களின் கரகோஷம் முழங்கத் தொடங்கியது. இந்நிலையில் ஆட்டம் நிறைவடைவதற்கு சில நிமிடங்கள்இருக்கும் போது மனோகரா விளையாட்டுக் கழக வீரர் சசிகாந்த் எதிரணியினருக்கு போக்குக் காட்டி மிகவும் சிரமத்தின் மத்தியில் தமது அணிக்குரிய வெற்றிக் கோலைப் பெற்றுக்கொடுத்தார். இதன்மூலம் மனோகரா விளையாட்டுக் கழகம் 2:1 என்ற கோல் கணக்கில் நவசக்தி வி.க.வைத் தோற்கடித்து இறுதியாட்டத்திற்குத் தகுதிபெற்றது.

இந்த ஆட்டத்தில் எதிரணி வீரர்களுக்கு ஆபத்து விளைவிக்கும் வகையில் விளையாடியமைக்காக நவசக்தி விளையாட்டுக் கழக வீரர் ஒருவருக்கும் அவருடன் மோதுண்டார் என தவறுதலாக மனோகரா விளையாட்டுக் கழக முன்னணி வீரருக்கும் எதிராக சிவப்பு அட்டைகள் காட்டப்பட்டன.

நடுவரின் இந்தத் தவறான தீர்ப்பினால் கொதிப்படைந்த மனோகரா அணி ஆதரவாளர்கள் சிவப்பு அட்டை ஏன் காட்டப்பட்டது என்று கேட்டு நடுவருடன் விவாதித்தனர். இதனால் மைதானத்தில் சிலமணி நேரம் அமளி துமளி ஏற்பட்டுக் காணப்பட்டமையும் இங்கு குறிப்பிடத்தக்கது.

(3-410)

## ஜெயரட்ணசிங்கம் கிண்ண கிரிக்கெட்

# யங்ஸ்ரார் வி.க. அணி அரையிறுதிக்குத் தகுதி

யாழ்.சென்றல் விளையாட்டுக்கழகம், வீ.டி.ஜெயரட்ணசிங்கம் வெற்றிக் கிண்ணத்துக்காக நடத்திவரும் - ஐம்பது பந்துப் பரிமாற்றங்களைக் கொண்ட - கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் நடந்த ஆட்டம் ஒன்றில் வெற்றி பெற்று யங்ஸ்ரார் வி.க. அரை இறுதிப் போட்டிக்குத் தகுதிபெற்றது.

யாழ்.ஸ்ரான்லிக் கல்லூரி மைதானத்தில் நடந்த இந்த ஆட்டத்தில் யங்ஸ்ரார் வி.கவும் யாழ்.சென்றல் வி.கவும் மோதின.

முதலில் துடுப்பெடுத்தாடிய யங்ஸ்ரார் அணி 46 ஓவர்களில் 311 ஓட்டங்களைப் பெற்றது. சுஜீவன் 98, சதீஸ் 30, துஸ்யந்தன் 47, டினேஸ் 67 ஓட்டங்களைப் பெற்றனர்.

றஜீவ்குமார் 10 பந்துப் பரிமாற்றங்களில் 44 ஓட்டங்களைக் கொடுத்து 5 விக்கெட்டுக்களையும் கலிஸ்ரன் 8 பந்துப் பரிமாற்றங்களில் 61 ஓட்டங்களைக் கொடுத்து 2 விக்கெட்டுகளையும் பாலகுமார் 10 ஓவர்களில் 73 ஓட்டங்களைக் கொடுத்து 2 விக்கெட்டுகளையும் வீழ்த்தினர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய யாழ். சென்றல் விளையாட்டுக் கழக அணி 31.3 ஓவர்களில் சகலவிக்கெட்டுக்களையும் இழந்து 134 ஓட்டங்களை மட்டுமே பெற்றது. றஜீத் 48, சுரேஸ்ராஜா 15, சுதா 10 ஓட் டங்களைப் பெற்றனர்.

பந்து வீச்சில் றஜீத் 8 ஓவர்களில் 32 ஓட்டங்களைக் கொடுத்து 3விக்கெட்டுகளையும் சசிவர்ணன் 4 ஓவர்களில் 17 ஓட்டங்களைக் கொடுத்து 3 விக்கெட்டுகளையும் சுதா 5.3 ஓவர்களில் 23 ஓட்டங்களைக் கொடுத்து 2 விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர்.

இதில் வெற்றிபெற்ற யங்ஸ்ரார் விளையாட்டுக்கழக அணி அரை இறுதிப் போட்டியில் பற்றீஸியன் விளையாட்டுக்கழக அணியுடன் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை ஸ்ரான்லிக் கல்லூரி மைதானத்தில் மோதவுள்ளது. இப்போட்டியில் வெற்றிபெறும் அணி அடுத்த மாதம் 2 ஆம் திகதி மானிப்பாய் பரிஷ் அணியுடன் இறுதிப்போட்டியில் மோதும்.

(3)

# 45 ஆம் நாள் நினைவஞ்சலியும்

## வீட்டுக்கிருத்திய அந்தியேட்டி அழைப்பும்



செல்வி
கீர்த்தனா
வாமதேவன்

(மாணவி, சுண்டிக்குளி மகளிர் கல்லூரி -
A/L 2007 கணிதப் பிரிவு)

முதலாய் வந்த முழு நிலவே உன்
குழலைமொழி மழலைமொழி
கன்னிமொழி கேட்டிருக்கையில்
இடியெனக் காலன் வந்து
களவு கொண்டான்
உன் உயிரை

சீறிய நெற்றி எங்கே?
சிவந்த நல் இதழ்கள் எங்கே?
குறுநகை போன தெங்கே?
அம்மம்மா என்ன சொல்வேன்
அன்பு மகளைத் தீயிலிட்டார்
தீயவை நினையா நெஞ்சத்
தீயிலே எரிய விட்டார்

தீய சொல் சொல்லா வாயை
தீயிலே கருகவிட்டார்!

அழிவில்லை முடிவுமில்லை
அன்புக்கு மரணமில்லை.
இருக்கின்றாய்
எம்முயிரில் இரத்தத்தில்
இதயத்தில் நரம்புகளில்
கண்ணில் செவியில்
கைத்தலத்தில் இருக்கின்றாய்
என்றும் உன் பெயர்
எம்முடன் வைத்திருப்போம்
அம்மா...அம்மா... அம்மா...

வேலணையைப் பிறப்பிடமாகவும் கொக்குவில் பொற்பதி வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட திரு.ச.வாமதேவன் தம்பதியரின் அன்புப் புதல்வி கீர்த்தனா வாமதேவனின் வீட்டுகிருத்திய நிகழ்வும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையும் 23-09-2005 வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்கள் குடும்பசகிதம் வருகைதந்து பிரார்த்தனையிலும் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின் றோம்.

இந்த அழைப்பினை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

109, பொற்பதி வீதி,
கொக்குவில் கிழக்கு.

**திரு.ச.வாமதேவன் குடும்பத்தினர்**
(அதிபர், கோண்டாவில் இராமகிருஸ்ண மகாவித்தியாலயம்).

(40188)(50-16-11)

# 31ஆம் நாள் நினைவலைகள்

**உதயம்**
10 - 05 - 1919



**அஸ்தமனம்**
22 - 08 - 2005

## திருமதி கதிர்காமதம்பி நடராஜா சிவகாமிப்பிள்ளை

மண்ணில் மகிழ்துறைந்து பல
மகிமைகள் மலரவைத்து - தினம்
மகிழ்ச்சி பொங்கு வதனமுடையார்
மாண்புடன் விண்ணடைந்தார்
மலர் கரம் ஏந்தி வணங்கினோம்
மலரடி சேரவே மலரும் அருளையா!

இன்று (21.09.2005) புதன்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளும்படி அன்புடன் அழைக்கிறோம்.

ஓம்சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

இணுவில் மேற்கு,
இணுவில்.

– குடும்பத்தினர்.

(40228)(26-19-16)

# குருதிக் கொடையாளர் கௌரவம்: சமூகத்தின் தலையாய கடமை

யாழ். போதனா வைத்தியசாலை இரத்த வங்கியில் இரத்ததானம் செய்தவர்களைக் கௌரவிக்கும் நிகழ்வு இன்று யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெறுகின்றது. அதனை முன்னிட்டு இந்தக் கட்டுரை பிரசுரமாகின்றது.


**பல** சந்தர்ப்பங்களில் பயன்கருதாது உதவிசெய்பவர்கள், அத்திபாரக் கற்களைப் போன்று மற்றவர்களின் கண்களுக்கும் கருத்துகளுக்கு அகப்படுவதில்லை. அத்தகைய தன்மையிலேயே குருதிக் கொடையாளர்களும் அடங்குவர்.

யார், எவர்க்கென்று இன்றி, மனித உயிர் எதற்கும் தமது இரத்தத்தால் உதவி செய்பவர்கள், உயிர் காப்பவர்கள் இவர்களே. பல நோயாளிகளுக்கு இவர்களே உண்மையான ''இரத்த உறவுகளாக'' இருந்திருக்கின்றார்கள் - இருந்து வருகின்றார்கள்.

வைத்திய கலாநிதி இ.சிவசங்கர்
தேசிய குருதி மாற்றுப் பிரயோக சேவை,
யாழ். போதனா வைத்தியசாலை,
யாழ்ப்பாணம்.

பல்வேறு சந்தர்ப்பங்களில் நோயாளிகளுக்கு இரத்தம் அவசரமாகவும் அவசியமாவும் தேவைப்படும். அத்தகைய சந்தர்ப்பங்களில் வைத்தியசாலைகளில் இயங்கும் இரத்த வங்கிகளின் பங்களிப்பு மிகவும் முக்கியமான - மூலாதாரமான இடத்தைப் பெறுகின்றது.

அதேவேளையில், இரத்த வங்கியின் செயற்பாட்டுக்குக் குருதிக் கொடையாளர்களே தூண்களாக அமைகின்றனர். குருதிக் கொடையாளர்கள் இன்றி குருதி மாற்றீடு சாத்தியமில்லை என்பதை நாம் உணர்ந்து கொள்வதில்லை.



வெளிநாட்டிலிருந்து இறக்குமதியாகும் இயந்திர சாதனங்களை வைத்தோ, கடைகளில் வாங்கும் பொருள்களை வைத்தோ இரத்த வங்கி இயங்கிவிட முடியாது. இரத்தமே அதன் இயக்கத்திற்குத் தேவை அதிலும் இரத்தத்தின் தொடர்ச்சியான போதிய கையிருப்பு என்பது இரத்த வங்கியின் செயற்பாட்டுக்கு அத்திபாரம் ஆகும்.

இதனூடாக மனித உணர்வுடன் பொது நோக்காகத் தவணை முறைகளில் தொடர்ச்சியாக இரத்ததானம் செய்துவருபவர்களின் முக்கியத்துவத்தை நாம் உணர்ந்து கொள்ளமுடியும். இவர்களின் மனித உணர்வுடன் கூடிய அக்கறையான செயற்பாட்டை இரத்த வங்கியினரே அறிந்திருப்பார்கள்.

நோயாளர்களுக்கோ, நோயாளர்களின் உறவினர்களுக்கோ இதுவிடயமாக எதுவும் தெரியவருவதில்லை. அந்தவகையிலேயே இரத்தவங்கி சமூகம் (தேசிய குருதி மாற்று சேவை) தன்னார்வ குருதிக் கொடையாளர்களைக் கௌரவிக்க முனைகின்றது. சமூகத்திற்கு இவர்களை அறியத்தருவது தமது கடமையெனக் கருதுகின்றது.

உண்மையில் குருதிக் கொடையாளர்களைக் கௌரவிப்பது சமூகத்தின் கடமையாகும். சமூகத்தின் பிரதிநிதியாக இரத்த வங்கி இவர்களுக்கு நன்றியறிதலைத் தெரிவிக்க முனைகிறது. இதை எமது கடமையாகக் கருதுகின்றோம்.

## இரத்த வங்கியின் கதவுகள் எந்நேரமும் திறந்திருக்கும்

இந்தச் சந்தர்ப்பத்தில் சில கருத்துகளை முன்வைக்க முனைகின்றோம். உண்மையில் இரத்த வங்கிக்கு இரத்தம் தேவை என்பது ஒரு பிரச்சினையாக இருக்கத் தேவையில்லை. இரத்த வங்கியின் இரத்தத் தேவையைக் கவனிக்கும்பொழுது சமூகத்தின் மிகக் குறைவான விகிதத்தினர் இரத்ததானம் செய்ய முன்வந்தாலே போதுமானது.

தேசிய குருதி மாற்றுப் பிரயோக சேவை இலங்கை

நோயாளிகள் இரத்தமின்றி பரிதவிக்க வேண்டிய நிலை வராது. இரத்ததானம் செய்வது மிகவும் சுலபமான செயற்பாடாகும். மிகவும் குறுகிய நேரமே இதற்குத் தேவைப்படும்.

இரத்ததானம் செய்வதால் எமது நாளாந்த வேலைகளில் எந்த மாற்றமும் தேவைப்படாது. சத்தான உணவு எடுக்கவேண்டும் என்றோ, சில நாள்களுக்கு ஓய்வு எடுக்க வேண்டும் என்றோ இல்லை. முன் அறிவித்தல் எதுவும் இன்றி இரத்த வங்கிக்குக் கடமை நேரத்தில் வந்து இரத்ததானம் செய்யலாம். பலர் ஒன்றாகச்சேர்ந்து இரத்ததானம் செய்ய முன்வரும்போது நாம் அவர்களின் ஊர்களுக்கோ, வேலைத்தளங்களுக்கோ வந்து இரத்தத்தைப் பெற்றுக்கொள்வோம்.

ஆகவே, மீண்டும் இத்தகைய உயரிய பணியை ஆற்றி வருபவர்களுக்கு எமது நன்றியைத் தெரிவித்துக்கொள்வதுடன், இந்த உன்னத பணியை ஆற்றுவதற்குச் சமூக நோக்குக்கொண்ட அனைவரும் முன்வரவேண்டும் என்று அன்பான அழைப்பு விடுக்கின்றோம். ★

---

# வெளிநாட்டு ஓய்வூதியர்கள் விவகாரத்தில் இறுக்கமான நடைமுறைகள் அமுல்படுத்தப்படும்

## ஓய்வூதியப் பணிப்பாளர் சுற்றறிக்கை மூலம் அறிவிப்பு

வலி.தெற்கு,செப்.21

வெளிநாட்டு ஓய்வூதியம் தொடர்பாகப் பல மோசடி நடவடிக்கைகள் பரவலாக இடம் பெற்று வருகின்றன. எனவே, வெளிநாட்டு ஓய்வூதியர்கள் விடயத்தில் மிகமிக இறுக்கமான நடைமுறையைக் கடைப்பிடிக்குமாறு ஓய்வூதியப் பணிப்பாளர் கே.ஏ.திலகரட்ண அறிவித்துள்ளார்.

அரச அதிபர்களூடாகப் பிரதேச செயலர்களுக்கு ஓய்வூதியப் பணிப்பாளர் அனுப்பிவைத்துள்ள சுற்றறிக்கையில் அவர் இதனைத் தெரிவித்திருக்கின்றார்.

இதற்கிடையில் யாழ். மாவட்ட அரச அதிபர் கே.கணேஷ் பிரதேச செயலர்களுக்கு அனுப்பிவைத்துள்ள கடிதத்தில் :-

இதுதொடர்பாக வெளிநாட்டில் வசிக்கும் ஒவ்வொரு ஓய்வூதியக்காரகளுக்கும் தெரியப்படுத்துமாறும் -

வங்கி முகாமையாளர்களின் சுற்றிக்கைக்கு அமைய வெளிநாட்டு ஓய்வூதியர் தொடர்பில் இறுக்கமான நடவடிக்கைகளை - செயற்படுத்துமாறு அறிவிக்கும்படியும் - கேட்டுள்ளார்.

வெளிநாட்டு ஓய்வூதியர்களுடைய உயிர்வாழ் சான்றிதழ்களிலும் அவர்களின் மாதிரிக் கையொப்பங்கள் மூலக்கோவை, இணைக்கோவைகளுடன் ஒத்திருக்கின்றனவா என்பதை நேரடியாகப் பார்வையிட்டு உறுதிப்படுத்தி ஒவ்வொரு மாதமும் உயிர்வாழ் சான்றிதழ்களை வங்கிக்கு அனுப்பிவைக்கமுன் தங்களுடைய ஒப்பம், பதவி முத்திரை என்பவற்றைப் பதிந்து அனுப்பிவைக்க வேண்டும் என்றும் பிரதேச செயலர்களுக்கு அரச அதிபர் அறிவித்துள்ளார்.

வங்கியில் கொடுப்பனவு செய்யப்பட்ட உறுதிச்சீட்டுகள் கிடைக்கப்பெற்றதும் ஆகக் குறைந்தது மூன்று மாதத்துக்கு ஒரு தடவையாவது மாதிரிக் கையொப்பங்கள் செவ்வை பார்க்கப்படவேண்டும். சந்தேகம் இருப்பின் ஓய்வூதியரை நேரடியாக அழைத்து உறுதிப்படுத்திக் கொள்ளவேண்டும் - என்றும் அரச அதிபர் கே.கணேஷ் தமது கடிதத்தில் அறிவுறுத்தியுள்ளார்.

(எ-152-117)

## பொதுமண்டபம் நிறுவ நிதியுதவி

வலி.தெற்கு, செப்.21

வலிகாமம் தெற்குப் பிரதேச செயலர் பிரிவில் இரண்டு பொதுமண்டபங்களை அமைப்பதற்கு இரண்டு லட்சம் ரூபாவினை போரூட் நிறுவனம் வழங்கியுள்ளது.

மயிலங்காடு, கலாஜோதி சனசமூக நிலையம் ஆகிய இடங்களில் அமைக்கப்படவுள்ள இந்தப் பொதுமண்டபங்களுக்கென தனித்தனியே ஒரு லட்சம் ரூபா நிதி வழங்கப்பட்டுள்ளதாக நிறுவனப் பிரதிநிதி வி. என். மூர்த்தி தெரிவித்தார்.

மேலும், வலிகாமம் தெற்குப் பிரதேச செயலர் பிரிவில் 125 மலசலகூடங்களும் 40 குழாய்க் கிணறுகளும் 4 வெட்டுக் கிணறுகளும் அமைக்கப்படவுள்ளதாகவும் - 4 கிணறுகள் திருத்தம் செய்யப்படவுள்ளதாகவும் அவர் மேலும் கூறினார்.

(எ-152)

## சங்கம்புலவு மயானத்தில் கொட்டகை அமைப்பு

வலி.தெற்கு,செப்.21

வலிகாமம் தெற்குப் பிரதேசசபைக்குட்பட்ட சங்கம்புலவு மயானத்தில் புதிய கொட்டகையொன்று அமைக்கப்பட்டுள்ளது.

தகனக்கிரியைகளின்போது மக்கள் அனுபவிக்கும் சிரமத்தினைச் சுட்டிக்காட்டி கந்தரோடை சனசமூக நிலையத்தினர் பலமுறை பிரதேச சபையினரிடம் கொட்டகை அமைப்பதற்கான வேண்டுகோளைச் சமர்ப்பித்திருந்தனர்.

(எ-152)

## குருதிக் கொடையாளர்கள் கௌரவிப்பு வைபவம் இன்று

யாழ்ப்பாணம்,செப்.21

தேசிய குருதி மாற்று பிரயோக சேவையின் ஏற்பாட்டில் குருதிக் கொடையாளர் கௌரவிப்பு விழா இன்று புதன்கிழமை காலை 9 மணிக்கு யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்விற்குப் பிரதம விருந்தினராக யாழ். மாவட்ட அரச அதிபர் கே.கணேஸும் சிறப்பு விருந்தினராகச் சட்டத்தரணியும் பதில் நீதிவானுமாகிய இ.வசந்தசேனனும் கௌரவ விருந்தினர்களாகக் குருதிக் கொடையாளர்களும் கலந்துகொள்ளவுள்ளனர்.

நிகழ்வில் வரவேற்புரையை யாழ். போதனா வைத்தியசாலைப் பதில் பணிப்பாளர் வைத்திய கலாநிதி இ.கணேசமூர்த்தி நிகழ்த்துவார்.

தேசிய குருதி மாற்றுப் பிரயோக சேவைப் பணிப்பாளர் வைத்திய கலாநிதி திருமதி ஆர்.எம்.பிந்துசாரா, உலக வங்கியின் குருதிப் பாதுகாப்பு நிகழ்ச்சித் திட்ட நிபுணத்துவ ஆலோசகர் வைத்திய கலாநிதி திருமதி இசற் எஸ்.பரூஷா, குருதி மாற்றீட்டில் தங்கியுள்ள சிறுவன் இ.யதுர்சன் ஆகியோர் உரை நிகழ்த்துவர்.

குருதி மாற்றுப் பிரயோக சேவையின் விளக்க உரைகளை தேசிய குருதி மாற்று பிரயோக சேவையின் குருதிக் கொடையாளர் பிரிவுப் பொறுப்பதிகாரி வைத்திய கலாநிதி சி.எஸ். மஞ்சநாயக்கா, யாழ். போதனா வைத்தியசாலையின் இரத்த வங்கி வைத்திய அதிகாரி வைத்திய கலாநிதி இ.சிவசங்கர் ஆகியோர் நிகழ்த்துவர்.

நிகழ்வில் குருதிக் கொடையாளர்களுக்கும் ஊக்குவிக்கும் அமைப்புகளுக்கும் விருதுகள் வழங்கிக் கௌரவித்தல்,கலை நிகழ்வு என்பனவும் இடம்பெறவிருக்கின்றன.

(3-202)



சாவகச்சேரி நகரசபை எல்லைக்குட்பட்ட பகுதியில் மேற்கொள்ளப்படவுள்ள உலக வங்கியின் உலர் உணவுத் திட்ட வேலைகள் தொடர்பான கலந்துரையாடல் அண்மையில் சாவகச்சேரி நகரசபை மண்டபத்தில் இடம்பெற்றது.

நகரசபைச் செயலாளர் திருமதி குணமணிதேவி ஆறுமுகம் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் உலக உணவுத் திட்டத்தின் பிரதிநிதி உரையாற்றுகிறார். அருகில் திட்ட நிறுவனப் பிரதிநிதிகளும் இவ்வேலைகளை மேற்கொள்ளவுள்ள பொது அமைப்புகளின் பிரதிநிதிகளும் அமர்ந்திருப்பதைக் காணலாம்.

(படம்: தென்மராட்சிச் செய்தியாளர்)

# கேள்வி அறிவித்தல்

**யாழ்ப்பாணம் சுகாதார சேவைகள்**
**மாகாணப் பிரதிப் பணிப்பாளர் பணிமனை**

## வாகனத் தரிப்பிட கொட்டகைகள் அமைத்தல்

மணிக்கூண்டு வீதியிலுள்ள 16ஆம் இலக்க காணிக்கு ஏற்கனவே அமைந்துள்ள வாகனத் தரிப்பு கொட்டகைகளை அகற்றி பண்ணைப் பிராந்திய மருந்துக் களஞ்சிய காணிக்குள் மீள அமைக்கும் வேலைக்கு கூலிச் செலவுக்கு மட்டும் தகுதியான ஒப்பந்தகாரரிடமிருந்து கேள்விகள் கோரப்படுகின்றது. வேலைகள் இரண்டு வாரங்களுக்குள் பூர்த்தி செய்யப்படல் வேண்டும்.

உரிய கேள்விப்படிவங்களை ரூபா100/- கேள்விப் படிவக் கட்டணமாகவும் (மீளளிக்கமுடியாது) ரூபா 2,000/- கேள்விப் பிணையாகவும் (மீளளிக்கக் கூடியது) செலுத்தி 27.09.2005 பிற்பகல் 3.30மணிவரை ஆஸ்பத்திரி வீதியிலுள்ள இவ்வலுவலகத்தில் பெற்றுக்கொள்ள முடியும். பூர்த்தி செய்யப்பட்ட கேள்விகள் 28.09.2005 முற்பகல் 10 மணிக்கு முன்பாக கேள்விப் பெட்டியில் சேர்க்கப்படல் வேண்டும். கேள்விகள் அன்றைய தினம் உடன் திறந்து ஆராயப்படும். கேள்விகாரர் அல்லது அவரால் அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதி சமூகமளிக்கலாம். வேறு விவரங்களை அலுவலக நேரங்களில் அறிந்து கொள்ளலாம்.

வைத்திய கலாநிதி **ஆ.கேதீஸ்வரன்,**
மாகாண பிரதிப் பணிப்பாளர்,
சுகாதார சேவைகள் பணிமனை,
யாழ்ப்பாணம்.

(சி-45212)
(21.34.15)


## B.Sc. காமராஜர் பல்கலைக்கழகம்
**வெளிவாரி (மதுரை)**

- ★ A/Lஇல் கணிதம், விஞ்ஞானம் ஆகிய பிரிவுகளில் பரீட்சை எடுத்தவர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.
- ★ இவற்றுக்குரிய பதிவுகள் எமது நிறுவனத்தினூடாகச் செய்துகொடுக்கப்படும். விவரங்களை நேரில் பெற்றுக்கொள்ளவும்.
- ★ இக்கற்கை நெறிக்கான பரீட்சைகள் யாவும் **யாழ்ப்பாணத்தில்** நடைபெறுவதற்கு அனுமதி பெறப்பட்டுள்ளது.
- ★ இக்கற்கை நெறிக்கான விரிவுரைகள் ஆரம்பம்: 01.10.2005 காலை9 மணி

*குறிப்பு:* M.A., M.Com. **2006 மே** மாத பதிவினை மேற்கொண்டவர்களுக்கான பரீட்சைகளும் **யாழ்ப்பாணத்தில்** நடைபெறுவதற்கு அனுமதி பெறப்பட்டுள்ளது.

*விவரங்களுக்கு:* **யாழ் .இணைப்பாளர், S. அருள்நங்கை, புதிய உயர்கல்லூரி, ஆரியகுளம் சந்தி, யாழ்ப்பாணம்.**

(40144) (39.15.21.34)



*கே.கே.எஸ்.றோட்....... புதிய பரிமாணத்தில்......*
*கோண்டாவிலில்...... புது வேகத்தில்......*

தரமோ உயர்வு

## சோதிலிங்கன் கூல்பார்

சுவையோ புதிது

**அனைத்து சைவ உணவுகளுக்கும் – சிற்றுண்டிகளுக்கும் மட்டுமல்ல உங்கள் மங்களகரமான நிகழ்வுகளுக்கு இல்லத்தையே வந்தடைய**

**சர்பத் * பீடா * பூந்தி லட்டு * பால்கோவா மற்றும் உங்களுக்குத் தேவையான அனைத்துச் சிற்றுண்டிகளும் தயாரிப்பதில் 33 வருடம் கைதேர்ந்த தயாரிப்பாளரால் தயாரித்து வழங்கப்படும்.*

எமது வர்த்தக நிறுவனத்திற்கு வேறு கிளைகளோ, முகவர்களோ கிடையாது. உங்கள் தொடர்புகள் அனைத்தும் எங்களுடன் மட்டுமே.

## சோதிலிங்கன் கூல்பார்

*கே.கே.எஸ். வீதி, உப்புமடம் சந்தி, கோண்டாவில்.*
T.P.: 0773223207, 0777066895 (40146) (24-15-34)



**வெளிநாடுகளில் உள்ள உங்கள் உறவுகளுக்கு விமானம் மற்றும் கப்பல் மூலம்**

உள்நாட்டு வெளிநாட்டிற்கான சிறியதோ,பெரியதோ,
எந்த அளவுகளிலான பொதிகள், கடிதங்களை
எந்த நாட்டிற்கும் எந்தநேரமும் குறிப்பிட்ட சில நாள்களில
உலகின் முன்னணி நிறுவனங்களினூடாக
குறைந்த கட்டணத்தில் அனுப்பிட

**லண்டனுக்கான 5 Kg பொதி ஒன்றிற்கு 1 Kg க்கான கட்டணம் 500/=**

மற்றும் ஐரோப்பிய நாடுகளுக்கு 20% விசேடசலுகை

**சுவிஸ்லாந்துக்கான 5 Kg பொதிகளுக்கு விசேட சலுகை வழங்கப்படும்.**

259,கே.கே.எஸ் றோட்,
யாழ்ப்பாணம்.
(Opposite All Ceylon Distributors)
Tel - 021 222 7835
Fax - 021 222 7836

## திருமுருகன் கொம் நெற்

46, ஆடியபாதம் வீதி,
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்
(பலநோக்கு கூ.ச.முன்பாக)
Tel - 021 222 7560
Fax - 021 222 7310

36, செல்லப்பிள்ளையார் கட்டடம்,
பிரதான வீதி, நெல்லியடி,
கரவெட்டி.
Tel - 021 226 4252
Fax - 021 226 4253

குகன் தொலைத்தொடர்பகம்
166,ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
Tel - 021 22 2027
Fax - 021 226 2993


### நூறு குடும்பங்களுக்கு உணவல்லாத பொருள்கள்

சிறுவர் பாதுகாப்பு நிறுவனம் வலி. தென் மேற்கு சண்டிலிப்பாய் பிரதேச செயலக பிரிவில் இடம் பெயர்ந்து நண்பர்கள், உறவினர்கள் வீடுகளில் வசித்துவரும் சிறுவர்களை அதிகமாகக் கொண்ட குடும்பங்களுக்கு உணவு தவிர்ந்த பொருள்கள் அடங்கிய பொதிகளை கடந்த வாரம் வழங்கியுள்ளது.

சண்டிலிப்பாயிலுள்ள பிரதேச செயலகத்தில் வைத்து நூறு குடும்பங்களுக்கு இந்தப் பொதிகள் வழங்கப்பட்டுள்ளதாக பிரதேச செயலக வட்டாரங்கள் தெரிவித்தன. (எ-135)

### பொதுக்கிணறுகளைப் புனரமைக்க உதவி

வலிகாமம் தெற்குப் பிரதேசத்தில் உள்ள பொதுக்கிணறுகள், குழாய்க் கிணறுகள், விவசாய வீதிகள் போன்றவற்றைத் திருத்துவதற்கும் புனரமைப்புச் செய்வதற்கும் சமூர்த்தி அதிகார சபையினரால் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இந்தத் திட்டத்தின் கீழ் 5 பொதுக் கிணறுகள், 6 விவசாய வீதிகள், 3 பங்குக் கிணறுகள், ஒரு குழாய்க் கிணறு ஆகிய 15 கருத்திட்டங்கள் மேற்கொள்ளப்படவுள்ளன. இவ்வருடம் மேற்கொள்ளப்படவுள்ள இக்கருத்திட்டங்களுக்காக சமூர்த்தி அதிகார சபை மூன்று லட்சம் ரூபாவினை வழங்கியுள்ளது. (எ-152)

**இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசு**
**பெருந்தெருக்கள் அமைச்சு**
**வீதி அபிவிருத்தி அதிகாரசபை**

# கேள்வி கோரல்கள்

## சர்வதேச ஒத்துழைப்பிற்கான ஜப்பான் வங்கியின் நிதி வழங்களின் ஊடாக முல்லைத்தீவு பிராந்திய வீதி, கட்டட புனரமைப்பு வேலைத்திட்டம்

மாகாணப் பணிப்பாளர் வ-கி (வ) வீதி, அபிவிருத்தி அதிகாரசபை, வவுனியா அதன் கேள்வி கோரல் சபையின் சார்பாகப் பிரதம பொறியியலாளர் முல்லைத்தீவு வலயத்திற்குட்பட்ட பின்வரும் வேலைகளுக்கு மூடி ஒட்டப்பட்ட கேள்வி கோரல்களைப் பெற்றுக்கொள்ள உள்ளது.

| வீதியின் பெயர் | மாவட்டம் | தகுதி | பாதுகாப்புத் தொகை |
|---|---|---|---|
| பருத்தித்துறை-மருதங்கேணி வீதியின் 25.90-30.97 கி.மீ. மற்றும் சோரன்பற்று-தாளையடி வீதியின் 6.50-7.48 கி.மீ. பகுதியை தார் ஊற்றி கல் பரப்புதல் (SBST) | கிளிநொச்சி | M6 அல்லது அதற்கு மேல் (வீதி நிர்மாணம்) | ரூபா.70,000.00 |
| நிறைவேற்றுப் பொறியியலாளர் காரியாலய மீள்நிர்மாணம் | முல்லைத்தீவு | M6 அல்லது அதற்கு மேல் (கட்டட நிர்மாணம்) | ரூபா.70,000.00 |

கேள்விப்பத்திரம் ஏற்றுக்கொள்ளப்படும் நடைமுறை 10.10.2005 அன்று பிற்பகல் 2.00 மணியுடன் முடிவடையும்.

கேள்விப்பத்திரங்கள் தயாரிக்கப்படுவதற்குரிய படிவங்களைப் பின்வரும் காரியாலயங்களில் இருந்து பெற்றுச் சமர்ப்பிக்க வேண்டும்.

| அலுவலகம் | தொலைபேசி இலக்கம் | மின்னஞ்சல் |
|---|---|---|
| மாகாணப் பணிப்பாளர் வ-கி(வ) வீதி அபிவிருத்தி அதிகாரசபை, கண்டிவீதி, வவுனியா. | 024-222 2826 | rdanorth@sltnet.lk |

கேள்விப்பத்திர ஆவணங்கள் 21.09.2005 தொடக்கம் மீளளிக்கப்பட முடியாத வைப்புத்தொகையான 1,725.00 (பெறுமதி சேர் வரி உள்ளடங்கலாக) செலுத்துவதன் மூலம் விநியோகிக்கப்படும்.

முன் கேள்விகோரல் கூட்டம் 29.09.2005 இல் மாகாணப் பணிப்பாளர் வ-கி(வடக்கு) வீதி அபிவிருத்தி அதிகாரசபை வவுனியா காரியாலயத்தில் காலை 10.00 மணிக்கு நடைபெறும்.

02. நிறைவேற்றும் காரியாலயம் வீதி அபிவிருத்தி அதிகாரசபையே ஆகும்.

03. தகுதி வாய்ந்த கேள்வி கோருபவர்கள் பின்வரும் தகைமைப் பிரமாணங்களுக்கு இணங்குதல் வேண்டும்

அ) கேள்வி கோருபவர் தன்னை இக்ராட் (ICTAD) நிறுவனத்தில் பெருந் தெருக்கள் மற்றும் கட்டட நிர்மாணத்தில் மேல் வேலைகளுக்கு எதிரே குறிப்பிடப்பட்டுள்ள தர கள் அல்லது அதற்கு மேல் தற்போது பதிவு செய்திருத்தல் வேண்டும்.

ஆ) கேள்வி கோருபவர் இலங்கை தேசிய நிர்மாண சங்கத்தில் (NCASL) செல்லுபடியாகும் ஒழுங்கான உறுப்புரிமையை கேள்வி கோரல் படிவம் பெற்றுக் கொள்ளும் பொழுதும் ஒப்பந்தத்தை வழங்கும் பொழுதும் கொண்டிருத்தல் வேண்டும்.

04. கேள்வி கோரல் ஆவணங்களை *மாகாணப் பணிப்பாளர் வ-கி (வடக்கு) வீதி அபிவிருத்தி அதிகாரசபை வவுனியா அல்லது பிரதம பொறியியலாளர், வீதி அபிவிருத்தி அதிகார சபை, 155ஆம் கட்டை, கிளிநொச்சி* அலுவலகங்களில் எதுவித கட்டணங்களும் இன்றி பார்வையிட முடியும்.

05. கேள்விப் பத்திரங்கள் கேள்வி கோரல் முடிவு திகதியில் இருந்து 120 கலண்டர் நாள்கள் வரை செல்லுபடியாக இருக்கும்.

01. கேள்விப்பத்திரங்கள் மேலே தரப்பட்ட வேலைகளிற்கு எதிராகக் குறிப்பிடப்பட்டுள்ள பாதுகாப்புத் தொகைகளுக்கு உரிய பாதுகாப்புப் பத்திரங்களையும் கொண்டிருக்க வேண்டும்.
ஏற்றுக்கொள்ளக்கூடிய பாதுகாப்புப் பத்திரங்களைக் கொண்டிராத கேள்வி கோரல்கள் ிராகரிக்கப்படும்.

02. கேள்விப் பத்திரங்கள் குறிப்பிட்ட முடிவுறும் நேரத்தின் பின்பு உடனடியாக மாகாணப் பணிப்பாளர் வ-கி (வ) வீதி அபிவிருத்தி அதிகாரசபை அலுவலகத்தில் திறக்கப்படும்.

கேள்வி கோருபவர்கள் அல்லது அவர்களது பிரதிநிதிகள் கேள்விப் பத்திரம் திறக்கும் நேரம் பிரசன்னமாக இருக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

03. மேலதிக விவரங்களிற்குத் தயவுசெய்து பின்வரும் அலுவலகங்கள் தொலைபேசி இலக்கங்கள் மின் அஞ்சல் முகவரிகள் மூலம் தொடர்பு கொண்டு பெற்றுக்கொள்ளலாம்.

| அலுவலகம் | தொலைபேசி இலக்கம் | மின்னஞ்சல் |
|---|---|---|
| மாகாணப் பணிப்பாளர் வ-கி(வ) வீதி அபிவிருத்தி அதிகாரசபை, கண்டி வீதி, வவுனியா. | 024-222 2826 | rdanorth@sltnet.lk |
| பிரதம பொறியியலாளர் வீதி அபிவிருத்தி அதிகாரசபை, 155ஆம் கட்டை, கிளிநொச்சி. | 021-228 5724 | |

***மாகாணப் பணிப்பாளர் [வ.கி -வடக்கு],***
***வீதி அபிவிருத்தி அதிகாரசபை,***
***கண்டிவீதி, வவுனியா.***

(சி-45159)
(21.14)

# பொங்கு தமிழ் நிகழ்வில் அணிதிரண்டு உரிமையைப் பெற கோஷமிடுவோம்!

## கலாநிதி ந.சிதம்பரநாதன் அறைகூவல்

நாம் எமது உரிமையை வென்றெடுக்கும் காலம் வந்துவிட்டது. அதனை சர்வதேசத்துக்கு ஆணித்தரமாக எடுத்துக் கூறிக்கொண்டிக்கிறோம். இம்மாத இறுதியில் நடக்கும் பொங்கு தமிழ் நிகழ்வில் அனைவரும் அணிதிரள்வோம்.

நல்லூர் ஆலய வருடாந்த உற்சவத்தையொட்டி புலிகளின் குரல் ஏற்பாடுசெய்த கேணல் கிட்டு, லெப்ரினன் கேணல் தியாகி திலீபன் ஞாபகார்த்தமாக வருடாந்தம் நடத்தப்படும் முத்தமிழ் சிறப்பு கலை அரங்க இறுதி நிகழ்வில் யாழ்.பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி ந.சிதம்பரநாதன் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது-

எமது வாழ்க்கை முறைகள் காலம் செல்லச் செல்ல மாறியுள்ளது. முன்னர் பலத்துடனும் தன்மானத்துடனும் வாழ்ந்துள்ளோம். இன்று இந்நிலைமை மாறியுள்ளது. சினிமாக்களை திரும்பத்திரும்பப் பார்ப்பதன் மூலம் அதே கற்பனைக்குள் நாம் மூழ்கியுள்ளோம். இதனை நாம் பல இடங்களில் கண்டுள்ளோம்.

சிங்கள இராணுவம் எமது பகுதிகளைப் பிடித்தபோது தமிழ் மக்களும் தமக்கு ஆதரவு என சர்வதேசத்திற்கு அறிக்கை விடுத்தார்கள். உண்மையில் மக்கள் இராணுவத்தினரின் பயம் காரணமாக வாய்பேசவில்லை. ஆனால், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் இடம்பெற்ற பொங்கு தமிழ் நிகழ்வில் பல லட்சம் மக்கள் கலந்துகொண்டு தமது உண்மை நிலைமையை உலகிற்கு வெளிப்படுத்தினார்கள்.

நாங்கள் எதிர்காலத்தில் என்ன செய்யப் போகின்றோம். என்னத்தைக் கூறப்போகின்றோம் என்பதை உலகிற்கு மிகவும் ஆணித்தரமாக எடுத்துக்கூறவேண்டும். இம்மாத இறுதியில் இதற்காக யாழ்ப்பாணத்தில் ஒன்றுகூடவுள்ளோம். இதில் நாம் லட்சம் லட்சமாகக்கூட வேண்டும்.

ஒன்றாகவே இருக்கிறோம் என்பதை வெளிப்படுத்த வேண்டும். இதனை மீண்டும் உலகிற்கு வெளிப்படுத்த வேண் டியது எங்கள் அனைவரினதும் கடமையாகும்.



அரசு மக்கள் மத்தியில் குழப்பத்தை உருவாக்க முயன்று கொண்டு இருக்கின்றது. இதனை நாம் அனைவரும் ஒன்று கூடி முறியடிக்க வேண்டியது அவசியமாகும். இதற்கு நாம் அனைவரும் ஒரு தலைமையின் கீழ் ஒன்றாகவே இருக்கின்றோம் என்பதை உணர்த்தவேண்டும். இம்மாத இறுதியில் யாழ்ப்பாணத்தில் இடம்பெறவுள்ள பொங்கு தமிழ் நிகழ்வில் நாம் அனைவரும் ஒரு குடும்பமாகச் செயற்படவேண்டும் - எனவும் குறிப்பிட்டார்.

(ப-86)

# கல்வித்தரம் வீழ்ச்சியடைவதால் எதிர்காலத்தில் பெரும் தாக்கம் ஏற்படும்

## இளைப்பாறிய உதவிப் பிரதேச செயலர் எச்சரிக்கை

குடத்தனை, செப்.21

இன்றைய மாணவர்களின் கல்வித் தரம் வீழ்ச்சியடைந்து செல்வது மிகக் கவலைக்குரியது. இந்நிலை எதிர்காலத்திலும் மிகப் பெரியதாக்கங்களை ஏற்படுத்தும் அவலநிலை உள்ளது. இதனைத் தவிர்ப்பதற்கு உரிய செயற்றிட்டங்களை அமுல்படுத்தவேண்டும்.

- இவ்வாறு பருத்தித்துறை தும்பளை நாவலர் விளையாட்டுக்கழகத்தின் 32 ஆவது ஆண்டுவிழாவிலும் பரிசளிப்பு விழாவிலும் உரையாற்றிய மேற்படி கழகத்தின் கல்விப் பிரிவுத் தலைவர் ஆர்.சிவபுண்ணியம் (இளைப்பாறிய உதவிப் பிரதேச செயலர்) தெரிவித்தார்.

கழகத் தலைவர் எஸ்.பி.விவேகானந்தன் தலைமையில் தும்பளை கணக்கிலாவத்தை விளையாட்டு மைதானத்தில் விழா நடைபெற்றது.

நிகழ்வில் இளைப்பாறிய பொலீஸ் இன்ஸ்பெக்டர் அமரர் வி.கிருஷ்ணராஜா, கழக உறுப்பினர் அமரர் ஏ.முரளீதரன் ஆகியோரின் திருவுருவப்படங்களுக்கு மலர்மாலைகள் அணிவித்து அஞ்சலி செலுத்தப்பட்டது.

விழாவில் தொடர்ந்து உரையாற்றிய சிவபுண்ணியம் குறிப்பிட்டதாவது:

கிராமத்தின் அபிவிருத்தி, மேம்பாடு அக்கிராம மக்களின் கல்வி வளர்ச்சியிலேயே தங்கியுள்ளது. கிராமிய சேவை நிறுவனங்கள் கிராமிய மக்களின் கல்வி மேம்பாட்டு நடவடிக்கைகளில் கூடிய கவனமெடுக்கவேண்டும். தும்பளை நாவலர் விளையாட்டுக் கழகம், விளையாட்டு நடவடிக்கைகளுடன் கல்வி அபிவிருத்தி மேம்பாட்டு நடவடிக்கைகளிலும் ஈடுபட்டு வருகின்றது.

ஜி.சீ.ஈ. சாதாரண தரப் பரீட்சை, ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சைகளுக்குத் தோற்றும் மாணவர்களுக்குக் கழகம் இலவச கல்விக் கருத்தரங்குகளைத் தொடர்ந்து நடத்தி வருகின்றது. பரீட்சைகளில் சிறப்புச் சித்திபெறும் மாணவர்களை ஊக்குவிக்கும் முகமாக அவர்களைக் கௌரவித்து , பாராட்டிப் பரிசில்களும் வழங்கி வருகின்றது.

எதிர்காலத்தில் கல்வி அபிவிருத்தி மேம்பாட்டிற்கான பல்வேறு திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படவுள்ளன. இத்திட்டங்கள் வெற்றிபெற அனைவரும் ஒத்துழைக்கவேண்டும்.

எதிர்காலத்தில் எமது பகுதிகளில் நாட்டிற்கு உகந்த பிரஜைகள் உருவாகவேண்டும் என்பதே எங்கள் அனைவரினதும் விருப்பமாகும். நாட்டிற்குகந்த நற்பிரஜைகளாலேயே வாழ்க்கையில் வெற்றிபெறமுடியும் - என்று தெரிவித்தார்.

பருத்தித்துறை நகரசபை நிர் க அதிகாரி ஏ.நடராஜா, ஹற்றன் நஷனல் வங்கி உதவி முகாமையாளர் கே.ஷ்கந்தபாபு உட்படப் பலர் உரையாற்றினர். கழகச் செயலாளர் எஸ்.குருபரன் நன்றியுரை வழங்கினார். (ப-78)




# ஊனம் ஒரு குறைபாடல்ல; துணிவுடன் வாழ உறுதிகொள்வீர்



ஏனையவர்களுக்குச் சமமானவர்கள் நாங்கள் என்ற துணிவுடன் வாழ்ந்து காட்டுங்கள் . சக்கர நாற்காலிகளைப் பெற்றுக் கொள்வதால் வலுக்குறைந்தவர்களாக உங்களை நீங்களே எண்ணிவிடாதீர்கள்.

-இவ்வாறு தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் யாழ். மாவட்டப் பிரிவின் சக்கர நாற்காலிகள் வழங்கும் வைபவத்தில் பேசிய யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி பத்மினி சிதம்பரநாதன் கூறினார்.

நல்லை ஆதீன விருந்தினர் மண்டபத்தில் யாழ்.மாவட்ட தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் பணிப்பாளர் சு.ஜெயராஜ் தலைமையில் நடைபெற்ற மேற்படி வைபவத்தில் திருமதி பத்மினி சிதம்பரநாதன் தொடர்ந்து பேசும் போது கூறியதாவது:-

எமது தேசத்தில் பெண்கள், குழந்தைகளுடன் கவனிக்கப்பட வேண்டிய [illegible] வர்களில் வலதுகுறை[illegible] கின்றார்கள். யுத்த நிலைகளாலும் இன்னோரன்ன காரணங்களினாலும் இன்று பலர் வலது குறைந்தவர்களாக மாறநேர்ந்திருக்கிறது. தமிழர் தேசியத் தலைவர் இந்த விடயத்தில் மிகவும் அக்கறைகொண்டுள்ளார். ஏனையவர்களைப் போன்று சமூகத்தில் இவர்களும் வாழவேண்டும் என்பதற்காக உரிய நிலையங்களை அமைத்து அதனூடாக அவர்களின் தேவைகளைக் கவனிக்க ஆவனசெய்துள்ளார்.

தமிழர் புனர்வாழ்வுக் கழகம் கடந்த நான்கு வருடங்களாக வலுக்குறைந்தவர்களுக்கு சக்கர நாற்காலிகளை வழங்கி வருகின்றது. ஆழிப்பேரலை அனர்த்தத்தின்போது இந்நிறுவனம் எமது மக்களுக்கு ஆற்றிய பணிகள் அனைவரும் அறிந்ததே. தமிழ் மக்களின் துயர் துடைக்கும் பணியில் புனர்வாழ்வுக் கழகம் அளப்பரிய பங்களிப்பை வழங்குகின்றது. பயனாளிகள் கழகத்தின் நோக்கங்களை நிறைவேற்றும் வகையில் நல்லமுறையில் இவற்றைப் பயன்படுத்திக் கொள்வது அவசியம் -என்றார்.

புனர்வாழ்வுக் கழகப் பணிப்பாளர் ஜெயராஜ் பேசும்போது கூறியதாவது:-

நான்கு வருடங்களாக நல்லூர் பெருந்திருவிழாவின் ரதோற்சவ தினத்தன்று எமது புனர்வாழ்வுக் கழகம் வலது குறைந்தவர்களுக்கு சக்கர நாற்காலிகளை வழங்கிவருகின்றது. நாங்கள் தமிழ் மக்களுக்கு உதவவேண்டும் என்ற முனைப்புடன் இருக்கின்றோம். லண்டனில் உள்ள ஆலயங்கள் மற்றும் அன்பர்களின் உதவியுடன் இந்தப் பணி இடம்பெறுகின்றது. இந்த சக்கர நாற்காலிகளைப் பெறுபவர்கள் தமக்கு இனி இது பயன்படாது எனக் கருதும்போது நல்லமுறையில் அதனைத் திரும்பவும் எம்மிடம் ஒப்படைக்கவேண்டும். ஏனெனில், உங்களைப் போன்ற பலருக்கு இதன் தேவை இருக்கிறது - என்றார்.

மாநகர சபை ஆணையாளர் சி.வி.கே. சிவஞானம், நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாசார்ய சுவாமிகள், வைத்திய கலாநிதி வை.தியாகராசா, எஸ்.தர்மேந்திரன் உட்படப் பலர் பேசினார்கள். வலுவிழந்த 14 பேருக்குமான சக்கர நாற்காலிகளை திருமதி பத்மினி சிதம்பரநாதன், சி.வி.கே.சிவஞானம், வைத்திய கலாநிதி தியாகராசா ஆகியோர் வழங்கினார்கள்.

(ப-111-204)

# பல்வேறு சவால்களை எதிர்நோக்கும் நாம் கல்விநிலை பற்றியும் சிந்திக்கவேண்டும்

## தெல்லிப்பளை ப.நோ.கூ.ச.ஊழியர் பாராட்டு விழாவில் அரச அதிபர்



பல்வேறு வகையான சவால்களுக்கும் முகம் கொடுக்க வேண்டியவர்களாகவே நாம் இன்று காணப்படுகின்றோம். எமது கல்வியின் நிலைமைகூட மிகவும் பின் தங்கியே காணப்படுகின்றது. இந்த நிலைமையை இட்டு நாம் அனைவரும் கண்ணீர் சிந்தவேண்டும்.

மேற்கண்டவாறு யாழ்.மாவட்ட அரச அதிபர் கே.கணேஸ் குறிப்பிட்டார்.

தெல்லிப்பளை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தில் 25 வருட சேவையை பூர்த்தி செய்த ஊழியர்கள் மற்றும் பொதுச்சபை உறுப்பினர்களைப் பாராட்டும் நிகழ்வு தலைவர் சி.சிவமகாராசா தலைமையில் தெல்லிப்பளை பிரதேச செயலக திறந்தவெளி அரங்கில் இடம் பெற்றது.

இந்த நிகழ்வில் கலந்துகொண்டு தொடர்ந்து உரையாற்றிய அரச அதிபர் கே.கணேஸ்:-

வாழ்க்கையென்பது சவாலாகவே இருக்கின்றது. இதனை நாம் வைராக்கியத்துடன் ஏற்று அதற்கு முகம்கொடுக்கவேண்டும். இதே போன்று நிறுவனத்தின் நன்மை கருதி உழைப்பவர்களைப் பாராட்ட வேண்டியது நிறுவனத்தின் கடமையாகும். அந்தவகையில் அதனைச் செய்கின்ற இந்தக் கூட்டுறவுச் சங்கமும் பாராட்டப்பட வேண்டியதாகும்.

யாழ்ப்பாணத்தில் கல்வி நிலைமை மிகவும் மோசமான நிலைமைக்குச் சென்று கொண்டு இருக்கின்றது. கடந்த ஜி.சீ.ஈ. சாதாரண பரீட்சையில் 40 வீதமானவர்களே சித்தியடைந்துள்ளார்கள். இதிலும் சித்தி அடையாதவர்களிலும் பெரும் பகுதியினர் எல்லாப் பாடங்களிலும் கோட்டை விட்டுள்ளார்கள்.

ஒரு காலத்தில் கல்வியில் முன் நின்ற யாழ்ப்பாணம் இன்று பின்தங்கிய நிலையில் காணப்படுகின்றது. இந்நிலைமை தொடர்ந்து காணப்படமுடியாது. இதனை மாற்றியமைக்க நாம் அனைவரும் ஒன்றிணைந்து பாடுபட வேண்டியது அவசியமாகும். [illegible]தற்குக் குறிப்பாகப் பெற்றோர்களாகிய நாம் அனைவரும் முன்வரவேண்டும்.

அகில இலங்கை ரீதியில் யாழ்.மாவட்டம் கல்வி நிலைமையில் பின்தங்கியே காணப்படுகின்றது. அண்மையில் தென்மராட்சிக் கல்வி வலய உதவிக் கல்விப் பணிப்பாளர் ஒருவருடன் கதைத்துக்கொண்டு இருக்கும்போது குறிப்பிட்டார் - ஆண்டு ஐந்துக்கு உட்பட்ட பரீட்சையொன்றில் 25 மாவட்டங்களில் 24ஆவது மாவட்டமாக யாழ்.மாவட்டம் நிற்கிறது என்று. இத்தகைய நிலையையிட்டு நாம் அனைவரும் கண்ணீர் விடவேண்டும்.

கூட்டுறவுத் துறையைப் பொறுத்தவரையில் யுத்தத்துடன் பின்னிப்பிணைந்த ஒன்றாகும். அத்தியாவசிய காலத்திலும் நெருக்கடியான காலத்திலும்கூட இக்கூட்டுறவுத்துறை சிறந்த முறையில் மக்களுக்குச் சேவையாற்றியுள்ளது. ஆகவே, இக் கூட்டுறவுத்துறைக்கு உதவிகளைச் செய்ய வேண்டியது மிகவும் அவசியமாகும். இது எமது கடமையும் ஆகும் என்று கூறினார்.

இன்று விற்பனை நிலையங்கள் அனைத்தும் போட்டி வர்த்தகத்தில் ஈடுபட்டுள்ளன. இந்த வகையில் கூட்டுறவு நிலையங்களும் தமது கிளைகளைக் கவர்ச்சிகரமான முறையில் வைத்திருக்கவேண்டியது அவசியமாகும். கிளைக்கு வரும் மக்கள் வரவேற்கப்பட வேண்டும். கிளைக்கு வந்து செல்லும் நுகர்வோர் திருப்தியுடனும் மகிழ்ச்சியுடனும் திரும்பிச் செல்லவேண்டும் - என்று அவர் மேலும் பேசுகையில் தெரிவித்தார்.

யாழ்.மாவட்ட கூட்டுறவு உதவி ஆணையாளர் க.கனகசபாபதி, தேசிய கூட்டுறவுச் சபைத் தலைவர் பெ.கனகசபாபதி, காங்கேசன்துறை மக்கள் வங்கி முகாமையாளர் பொன். கணேசமூர்த்தி உட்பட மற்றும் பலர் உரையாற்றினார்கள்.

(ப-86)

# முதலாம் வருட நெஞ்சகலா நினைவலைகள்



மலர்வு
28.05.1930

உதிர்வு
21.09.2004

**அமரர் செபஸ்தி தேவதாசன் [நட்சத்திரம்]**
*இளைப்பாறிய அதிபர்- மண்டைதீவு*

புகழுடன் தோன்றி உயர்கல்வி கற்று
ஆசிரியர் அதிபர் எனத் தாய் நாட்டின்
வளம் நிறைந்த இடங்களிலெல்லாம்
கடமையை உரிமையாக்கி சேவை செய்தாய்

ஆன்ம இளைப்பாற்றித் திருப்பலிகள்:
ஆஸ்திரேலியா:- Sydney Westmead Church
கனடா:- St.Bernad Church Lawerence West
இலங்கை:- யாழ் மரியன்னை பேராலயம்
மண்டைதீவு- புனித பேதுரு ஆலயம்
பாஷையூர்- புனித அந்தோனியார் ஆலயம்

நிரந்தரவிலாசம்:
5 ஆம் வட்டாரம்,
மண்டைதீவு.

தற்காலிக விலாசம்:
ஆஸ்திரேலியா.

இவரின் பிரிவால் துயருறும்:
**மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.**

(சி-45203) (39-26-15-19)

# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக் கிருத்திய அழைப்பும்

அன்னை மடியில்
08 - 10 - 1915



இறை வனிடம்
22 - 08 - 2005

## அமரர் வேலுப்பிள்ளை தம்பாபிள்ளை

திங்களொன்று சென்றது ஐயா
தீருமோ எம் துயரம் ஐயா
உங்கள் ஆத்ம சாந்திக்காக என்றும்
ஸ்ரீநாகதம்பிரானை வேண்டுகின்றோம்!

இன்று (21.09.2005) புதன்கிழமை காலை 11.00 மணிக்கு அன்னாரது இல்லத்தில் நடைபெறும் வீட்டுக்கிருத்திய நிகழ்விலும், ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும், அதனைத் தொடர்ந்து நடை பெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

**லச்சுமி இல்லம்,**
**மாமுனை,**
**செம்பியன்பற்று.** (40194)(26-19-15) **- குடும்பத்தினர்.**

# மரண அறிவித்தல்

## பொன்னுத்துரை வரதராஜா



கொழும்புத்துறை விபுலானந்தர் வீதியைப் பிறப்பிடமாகவும் இலக்கம் 64, அரசடி வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னுத்துரை வரதராஜா அவர்கள் 19.09.2005 திங்கட்கிழமை அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தோழர் பொன்னுத்துரை-சின்னம்மா தம்பதியரின் அன்பு மகனும், திருமதி புஸ்பவதி -வரதராஜா (ஆசிரியை, யாழ்.இந்து மகளிர் ஆரம்பப்பாடசாலை) அவர்களின் அன்புக் கணவரும், புருஷோர்த் (யாழ்.இந்துக்கல்லூரி), ஷங்கவி (யாழ். இந்து ஆரம்பப் பாடசாலை), ஆகியோரின் அன்புத்தந்தையும் காலஞ்சென்றவர்களான தில்லைராஜேஸ்வரி, விக்கிரமராஜா மற்றும் திருமதி இன்பராணி விஜயரூபன் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புச்சகோதரரும் கிருஷ்ணவேணி (ஜேர்மனி), காலஞ்சென்ற சீவரெத்தினம் மற்றும் குணரஞ்சினி (ஆசிரியை, யாழ். இந்து ஆரம்ப பாடசாலை), ஞானகலா (ஜேர்மனி), விஜயரூபன் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (21.09.2005) புதன் கிழமை பிற்பகல் 1 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கோம்பயன்மணல் இந்துமயானத்தில் தகனம் செய்யப் படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

இல.64, அரசடி வீதி,
யாழ்ப்பாணம்.
(40236)(26-15-19)

தகவல்:
திருமதி புஸ்பவதி வரதராஜா (மனைவி),
திருமதி இன்பராணி விஜயரூபன் (சகோதரி),
செல்வி தா.குணரஞ்சினி (மைத்துனி).

## சாட்டி தேவாலய பெருந்திருவிழா

வேலணை, சாட்டி சிந்தாத்திரை மாதா தேவாலயப் பெருந்திருவிழா கடந்த வியாழக் கிழமை மாலை கொடியேற்றத்துடன் ஆரம்ப மாகி, நவநாள் ஆராதனைகள் தொடர்ந்து நடை பெற்று வருகின்றன. எதிர்வரும் வெள்ளிக் கிழமை மாலை 6 மணிக்கு திருப்பலியும், நற் கருணை வழிபாடும் இடம்பெறும். வருகிற 24ஆம் திகதி சனிக்கிழமை காலை திருநாள் திருப் பலியைத் தொடர்ந்து திருச்சொரூப பவனி, சொரூப ஆசீர் என்பனவற்றுடன் விழா முடி வடையும்- இதனையொட்டி 23 மற்றும் 24ஆம் திகதிகளில் யாழ்.நகரிலிலிருந்து அரச பஸ்கள் மற்றும் மினிபஸ்களின் விசேட சேவைகள் நடைபெறும் என்று ஆலயப் பங்குத்தந்தை தெரிவித்தார்.

## காந்தி நூலகம் ஆரம்பம்

யாழ்ப்பாணம், செப்.21

அகில இலங்கை காந்தி சேவா சங்கத்தின் 'காந்தி நூலகம்' 171, முதலாம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் இயங்க ஆரம்பித்துள்ளது.

இந்த நூலகம் சனிக்கிழமைகளில் பிற் பகல் 2 மணி தொடக்கம் 6 மணி வரையும், ஞாயிற்றுக்கிழமைகளில் முற்பகல் 8மணி தொடக்கம் 11 மணிவரையும் திறந்திருக்கும்.

காந்தீய கற்கை நெறியை மேற்கொள் வோரும், இத்துறைசார் ஆர்வலர்களும் மற்றும் பொது மக்களும் இந்நூலகத்தை உபயோகித்துப் பயன் பெற முடியும் என்று நூலகப் பொறுப்பாளர் இ.இராசவேல் அறிவித்துள்ளார்.

## ஆசிரிய கலாசாலை பரீட்சைகள்

யாழ்ப்பாணம்,செப்.21

ஆசிரிய பயிற்சிக் கலாசாலையில் ஆசிரிய பயிற்சி பெறும் முதலாம், இரண்டாம் வருட மாணவர்களுக்கான பரீட்சைகள் நாளை வியாழக்கிழமை முதல் எதிர்வரும் 3ஆம் திகதி வரை நடைபெறவுள்ளன.

முதலாம் வருட மாணவர்களுக்கான பரீட்சைகள் நாளையும், நாளை மறுதினமும், இரண்டாம் வருட மாணவர்களுக்கான பரீட்சைகள் அதனைத் தொடர்ந்து நடை பெறவுள்ளன.

பலாலி ஆசிரிய பயிற்சிக் கலாசாலையில் இருந்து பரீட்சைக்குத் தோற்றும் ஆசிரிய மாணவர்களுக்கான அனுமதி அட்டைகள் தற்போது வழங்கப்படுகின்றன.(410)

## வீதிகள் புனரமைப்பு

நல்லூர், செப்.21

உணவுக்காக வேலைத்திட்டத்தின் கீழ் நெடுந்தீவு கிழக்கில் ஒரு வீதியும் மேற்கில் சாராப்பிட்டி சேமக்காலை வீதி, காளிகோவில் முதலியாகுளம் வீதியும் புனரமைக்கப்படுகின்றன. (ஒ-111)

## வலி.வடக்குப் பகுதி கலைஞர்களுக்கு

யாழ்ப்பாணம்,செப்.21

வலிகாமம் வடக்குப் பிரதேசத்திற்குட்பட்ட சகல துறை சார்ந்த கலைஞர்களினது விபரங்களை ஒன்று திரட்டி ஆவணம் ஆக்கும் நடவடிக்கையை வலிகாமம் வடக்குப் பிரதேச செயலகம் மேற்கொண்டுள்ளது.

இது தொடர்பான முக்கிய கலந்துரையாடல் இன்று புதன் கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் இடம் பெறவுள்ளது.

இந்தக் கலந்துரையாடலில் இப் பிரதேசத்திற்குட்பட்ட சகலதுறை சார்ந்த அனைத்துக் கலைஞர்களையும் தவறாது கலந்துகொள்ளுமாறு பிரதேச செயலர் கேட்டுள்ளார்.(ஒ-410)

## வேலைத்திட்டங்களுக்கு தொழில் உபகரணங்கள்

சாவகச்சேரி,செப்.21

உலக உணவுத் திட்டத்தின் கீழ் நடைபெறும் வேலைத்திட்டங்களை துரிதப்படுத்த அத்திட்டங்களுக்கு அரச செயலகத்தால் மண் வெட்டிகள், அலவாங்கு, கைவண்டில்கள், கத்திகள், கோடரி என்பன சம்பந்தப்பட்ட உள்ளூராட்சி சபைகளுக்கு வழங்கப்படுகின்றன.(ஒ-31)

ஓம் கிரியா பாபாஜி நம ஓம்

# ஆன்மீக கிரியா யோகா சங்கம்

(கனடா நிலையத்தின் யாழ்.கிளை)

*யோகாசனப் பயிற்சி வகுப்பும் யோகா சிகிச்சை முறையும் அங்குரார்ப்பண வைபவமும்*

**காலம் :** இன்று (21.09.2005) புதன்கிழமை பிற்பகல் 4.00 மணி
**இடம் :** 'வேளாவை', அளவெட்டி வடக்கு.
(ஸ்ரீ சுப்பிரமணிய ஆச்சிரமம் அருகில்),
அளவெட்டி.
**தலைவர்:** செஞ்சொற் செல்வர் ஆறு.திருமுருகன்
(உப.அதிபர், ஸ்கந்தவரோதயா கல்லூரி).
**இயக்குநர்:** திரு. அப்பர்சுவாமி இராமநாதன்

ஆர்வமுள்ள அனைவரும் பங்குபற்றி பயனடையுமாறு அழைக்கப்படுகின்றனர்.

(40216)(26-15-19) **-இயக்குநர்.**

# இலங்கை அரசு

## நிவாரணம், புனர்வாழ்வு நல்லிணக்கத்துக்கான அமைச்சு

## வடகிழக்கு புனர்வாழ்வு சம்பந்தமாக உலக வங்கியின் உதவியுடன் செயற்படுத்தப்படும் திட்டம்

### வடகிழக்கு நீர்ப்பாசன விவசாயத் திட்டம் - கட்டம் II

கடன் இல.3935 C.E.

தேசிய கூறுவிலை கோரல் (நிர்மாண வேலைகள்)

# கேள்வி அறிவித்தல்

01. இரண்டாவது வடக்கு - கிழக்கு நீர்ப்பாசன விவசாயத் திட்டத்தின் ஆகுசெலவு சார்பாக சர்வதேச அபிவிருத்தி அமைப்பிலிருந்து கடனொன்றை இலங்கை அரசு பெற்றுள்ளது. கீழுள்ள அட்டவணையில் விவரிக்கப்பட்டுள்ள நிர்மாண வேலைகளுக்கான ஒப்பந்தங்களின் கீழ் தகுதிவாய்ந்த கொடுப்பனவுகளுக்கு இக்கடனின் ஒரு பகுதியைப் பிரயோகிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. இதற்குத் தகுதி வாய்ந்த கேள்விதாரர்களிடமிருந்து பின்வரும் வரையறுக்கப்பட்ட வழிகாட்டலின் கேள்விகள் கோரப்படுகின்றன. ஐ.பி.ஆர்.டி. (IBRD) கடன் வசதி ஐ.டி.ஏ. (IDA) நம்பிக்கையின் கீழான வசதி.

02. திட்டப்பணிப்பாளர், வடகிழக்கு நீர்ப்பாசன விவசாயத்திட்டம், திருகோணமலை அவர்களினால் மூடிய கேள்விகள் தகுதியான ஒப்பந்தகாரர்களிடமிருந்து பின்வரும் நீர்ப்பாசனக் கட்டுமானத்தை நிர்மாணிப்பதற்குக் கோரப்படுகின்றன.

03. மீளளிக்கப்படாத கட்டணமாக ஒவ்வொரு வேலைக்கும் ரூபா 1000.00ஐ காசாகக் கிளிநொச்சி பிரதி நீர்ப்பாசனப் பணிப்பாளர் அலுவலகத்தில் செலுத்தி 23.09.2005 ஆம் திகதிமுதல் 03.10.2005ஆம் திகதி 15.00 மணிவரை கேள்விப் பொதிக்கான கேள்வி ஆவணங்களின் இரு பிரதிகளைப் பெற்றுக்கொள்ளலாம்.

| இல: | கேள்விக் குறியீடு | வேலை விவரம் | கேள்விப் பிணை ரூபா | இக்ராட் தரம் |
|---|---|---|---|---|
| 01 | NEIAP II/JAF/VAL/01 | அராலி கொங்கிறீற் அணைக்கட்டு யாழ். மாவட்டம் ( Araly Barrage) | 200,000.00 | M5 (நீர்ப்பாசனமும் அதற்கு மேலும்) |
| | NEIAP II/JAF/VAL/02 | கேலன்காமம்குளத்தினுடைய மண் அணை, குளியல் படிகள், குளத்தினுள் உள்ள கிணறுகள் ஆகியவற்றைப் புனரமைத்தல் - யாழ்.மாவட்டம். | 100,000.00 | M6 (நீர்ப்பாசனமும் அதற்கு மேலும்) |
| | NEIAP II/JAF/VAL/03 | கிராய் பிரதான வாய்க்காலின் தடுப்புச் சுவர், உள், வெளிச் செல்லும் வாய்க்கால்கள், இருவழி தடுப்புக் கதவுகள் ஆகியவற்றை அமைத்தல் - யாழ். மாவட்டம் | 150,000.00 | M5 (நீர்ப்பாசனமும் அதற்கு மேலும்) |

04. ஆர்வமுள்ள தகுதியான கேள்விதாரர்கள் கேள்விப் பத்திரங்களைப் பிரதி நீர்ப்பாசனப் பணிப்பாளர் அலுவலகம், நீர்ப்பாசனத் திணைக்களம், வில்சன் வீதி, கிளிநொச்சியில் இலவசமாகப் பார்வையிடுவதோடு, மேலதிக விவரங்களையும் பெற்றுக்கொள்ளலாம்.
தொலைபேசி இல. 021 228 5867 அல்லது 021 228 3969

05. மேற்கூறப்பட்ட வேலைகளுக்குச் சமர்ப்பிக்கப்படும் கேள்வி திறக்க்ப்படும் தினத்திலிருந்து ஒரு வருடத்திற்குச் செல்லுபடியானதாக இருத்தல் வேண்டும். அத்துடன், திட்டப்பணிப்பாளரின் பெயரில் எடுக்கப்பட்ட கேள்விப் பிணையும் கேள்விகளுடன் இணைக்கப்பட்டு, திட்டப்பணிப்பாளர், நியாப், 171, மின்சார நிலைய வீதி, திருகோணமலை என்ற முகவரிக்கு 23.10.2005ஆம் திகதி 15 மணிக்கு முன் கையளிக்கப்படல் வேண்டும். அதே தினம் கேள்விகள் திறக்கப்படும். கேள்விதாரர் அல்லது அவரின் பிரதிநிதி விரும்பின் சமூகமளிக்கலாம்.

06. மேற்குறிப்பிட்ட திகதியில் காரியாலயம் மூடப்பட வேண்டிய சந்தர்ப்பம் ஏற்படின் அதற்கு அடுத்த வேலை நாளன்று அதே இடத்தில் அதே நேரத்தில் கோரல்கள் பெறப்பட்டு திறக்கப்படும்.

07. வேறு விவரங்கள் தேவைப்படின் கேள்வி ஆவணங்களில் பார்வையிடலாம்.

**எந்திரி எஸ்.பாலசிங்கம்,**
*திட்டப் பணிப்பாளர்,*
*நியாப், 171, மின்சார நிலைய வீதி,*
*திருகோணமலை.*

(சி/42221) (24-26-15-19))

### படையினர் இருவர் கைதானதன் எதிரொலி

# தெற்கு ஈராக்கில் கலவரம்; பிரிட்டிஷ் டாங்கி எரிப்பு!

பக்தாத், செப். 21

ஈராக்கின் தெற்கு நகரான பஸ்ராவில் பிரிட்டிஷ் படையினர் இருவர் கைதுசெய்யப்பட்டதைத் தொடர்ந்து, அங்கு தங்கியுள்ள பிரிட்டிஷ் படையினருக்கும் ஷியா ஆயுததாரிகள், ஈராக்கியப் படையினர் ஆகியோருக்கும் இடையே ஏற்பட்ட மோதலில் - கலவரத்தில் - பிரிட்டிஷ் டாங்கி ஒன்று எரியூட்டப்பட்டது. உள்ளூர் சிறைச்சாலை ஒன்று தகர்க்கப்பட்டது. பொதுமக்கள் இருவர் கொல்லப்பட்டனர். பிரிட்டிஷ் படையினர் மூவர் காயமடைந்தனர்.

ஈராக்கிய பாதுகாப்புப் பிரிவினரால் கைது செய்யப்பட்ட இரு பிரிட்டிஷ் பணியாளர்களை மீட்பதற்காக பிரிட்டிஷ் படையினர் உள்ளூர் சிறை ஒன்றை டாங்கிகளைக் கொண்டு தகர்த்தனர் என்று ஈராக்கிய அதிகாரிகள் கூறுகின்றனர்.

பிரிட்டிஷ் படையினரால் தமது படையினர் இருவரும் மீட்கப்பட்டுள்ளனர் என்பதை லண்டனில் அரச அதிகாரிகள் உறுதிப்படுத்தியுள்ளனர். சிறையை உடைத்துப் பார்த்தபோது அருகே இருந்த வீடு ஒன்றில் அவர்கள் இருவரும் தடுத்து வைக்கப்பட்டிருந்ததைத் தமது படையினர் கண்டனர் என்றும் பிரிட்டிஷ் பாதுகாப்பு அமைச்சு தெரிவித்தது.

அதேநேரத்தில், அந்த இரு படையினரையும் மீட்பதற்கு பிரிட்டிஷ் படையினர் நடந்துகொண்டவிதம் குறித்து மாறுபட்ட கருத்துகள் ஈராக்கில் இருந்து வெளியாகி இருக்கின்றன. உள்ளூர் சிறையை டாங்கிகள் சகிதம் சுற்றிவளைத்த ஈராக்கியப் படையினர் தமது பணியாளர்களை மீட்டுச் சென்றனர் என்று ஈராக்கிய அதிகாரிகள் தரப்பில் தெரிவிக்கப்படுகின்றது. ஆனால், பேச்சு மூலம் இணக்கம் காணப்பட்டே அவர்கள் விடுவிக்கப்பட்டனர் என்று ஈராக்கிய பாதுகாப்பு அமைச்சு தெரிவிக்கிறது. உள்ளூர் பாதுகாப்பு மற்றும் அரச அதிகாரிகளுடன் பேச்சு நடத்தியே குறித்த இரு பிரிட்டிஷ் பணியாளர்களும் விடுவிக்கப்பட்டனர் என்றும் அமைச்சு தெரிவித்துள்ளது.

ஆனால், பஸ்ரா ஆளுநர் மொஹமட் அல்-வைலி, பிரிட்டிஷாரின் செயல் பற்றிக் கருத்துத் தெரிவிக்கையில், இது ''மிகக் கொடூரமான ஆக்கிரமிப்பு'' எனச் சாடினார்.

பிரிட்டிஷ் டாங்கிகள் ஈராக்கியர்களின் தாக்குதலுக்கு இலக்கானதைத் தொடர்ந்து ஏற்பட்ட கலவரத்தில் இரண்டு பொதுமக்கள் கொல்லப்பட்டனர். மூன்று பிரிட்டிஷ் படையினர் காயமடைந்தனர் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. பொதுமக்கள் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்தார்கள் என்ற குற்றச்சாட்டின் கீழேயே குறித்த இரு பிரிட்டிஷ் படையினரும் ஈராக்கிய அதிகாரிகளால் கைது செய்யப்பட்டனர்.

இரு பிரிட்டிஷ் பணியாளர்களும் சிறிய காயங்களுக்கு உள்ளாகி இருந்தனர் என்பது வெளியிடப்பட்ட புகைப்படங்களில் தெரிகின்றன என்று அதிகாரிகள் கூறினர்.

அவர்களை விடுவிப்பதற்காக பிரிட்டிஷ் படையினர் உள்ளூர் சிறைச்சாலையின் மதில்களை டாங்கிகளால் மோதிப் பிளந்தனர் என்றும் -

அப்போது அவர்கள் துப்பாகிப் பிரயோகம் செய்தனர் என்றும் - பஸ்ரா பொலிஸார் தெரிவிக்கின்றனர். (ற)

## ஆந்திராவைத் தாக்கியது புயல் வெள்ளத்தில் சிக்கி 10 பேர் பலி!

ஒரிசா கடலோரப் பகுதிகளைப் பயமுறுத்திக் கொண்டிருந்த புயல் நேற்றுமுன்தினம் ஆந்திராவின் கலிங்கபட்டினத்தில் கரையைக் கடந்தது. அப்போது ஆந்திரா மற்றும் ஒரிசாவில் பலத்த காற்றுடன் மழை பெய்ததால் பெருமளவில் சேதம் ஏற்பட்டது.

வங்கக்கடலின் வடமேற்குப் பகுதியில் மையம் கொண்டிருந்த புயல் ஒரிசாவின் பாரதீப் மற்றும் கோபால்பூரி கடற்கரைப் பகுதிகளைத் தாக்கும் என எதிர்பார்க்கப்பட்டது.

ஆனால், கடந்த 18ஆம் திகதி இரவில் இதில் திடீர் திருப்பம் ஏற்பட்டது. தென்மேற்குப் பகுதியை நோக்கி நகர்ந்த புயல் ஆந்திராவில் கலிங்கபட்டினம் பகுதியில் கரையைக் கடந்தது. வடமேற்குத் திசையில் சென்று பின்னர் வலுவிழக்கும். இந்தப் புயல் கரையை கடந்தபோது ஆந்திராவின் கடலோரப் பகுதிகளில் பலத்த காற்றுடன் மழை பெய்தது.

அதேநேரத்தில் ஒரிசாவிலும் பலத்த மழை பெய்தது. வெள்ளத்தில் சிக்கி 10 பேர் பலியாகினர். பலர் காயமடைந்தனர்.

பாரதீப் - கோபால்பூர் கடற்கரைப் பகுதியில் மீன்படிக்கச் சென்ற 25 மீனவர்களின் நிலை என்னவென்பது தெரியவில்லை. (8)

## புதியகட்சி ஆரம்பிக்கிறார் நடிகை விஜயசாந்தி

ஹைதராபாத், செப்.21

தமிழகத்தில் நடிகர் விஜயகாந்த் கட்சி ஆரம்பித்ததுபோல, ஆந்திராவிலும் நடிகை விஜயசாந்தி புதியகட்சி ஆரம்பிக்கிறார். அவரின் புதியகட்சியின் பெயரைப் பதிவுசெய்ய அவரது சார்பில் தேர்தல் ஆணையத்தில் விண்ணப்பம் செய்யப்பட்டுள்ளது. 'ஆந்திராவைப் பிரித்து தனித் தெலுங்கானா மாநிலம் உருவாக்கவேண்டும்' என்று கோரி நடிகை விஜயசாந்தி ஓர் அமைப்பை உருவாக்கிப் போராட்டம் நடத்தி வருகிறார். அவர் தனது அமைப்பைக் கட்சியாக மாற்றும் ஆரம்ப கட்டப் பணிகளில் தீவிரமாக ஈடுபட்டுள்ளார். இதையடுத்து, ஆந்திராவில் மற்றொரு தெலுங்கானாக் கட்சி உதயமாகிறது.

விஜயசாந்தியின் ஆதரவாளரும், முன்னாள் தெலுங்கு தேச எம்.பியுமான புட்ட பகா ராதாகிருஷ்ணா புதிய கட்சியின் பெயரைப் பதிவுசெய்வதற்காக டில்லிக்குச் சென்று தேர்தல் ஆணையத்திடம் விண்ணப்பம் செய்தார். விண்ணப்பத்தில் புதிய கட்சியின் பெயராக, 'தல்லி (தாய்) தெலுங்கானாக் கட்சி' என்று குறிப்பிடப்பட்டது. இந்தத் தகவல்களை விஜயசாந்தியின் நெருங்கிய வட்டாரங்கள் தெரிவித்தன. (8)

### உலக அரங்கில்

# 'என்னை என் தந்தையின் வீட்டிற்குச் செல்ல விடுங்கள்'

### மறைந்த பாப்பரசரின் இறுதி வார்த்தை

வத்திக்கான், செப், 21

மறைந்த பாப்பரசர் 2ஆம் ஜோன் போல் தனது வாழ்வின் இறுதிக் கட்டத்தில் இருந்த போது 'என்னை என் தந்தையின் வீட்டிற்குச் செல்ல விடுங்கள்' என்று கூறியதாக வத்திக்கான் நிர்வாகம் தெரிவித்துள்ளது.

உலகம் முழுவதும் உள்ள கத்தோலிக்க கிறிஸ்தவர்களின் தலைவராகக் கருதப்படுபவர் பாப்பரசர். கடந்த 1978ஆம் ஆண்டு வெறும் 33 நாள்களே பதவி வகித்து இறந்து போன பாப்பரசர் முதலாம் ஜோன் போலின் இறப்பில் மர்மங்கள் இருப்பதாகச் சந்தேகங்கள் எழுந்தன. இதேபோல, கடந்த ஏப்ரல் மாதம் இறந்த பாப்பரசர் 2ஆம் ஜோன் போல் மரணத்திலும் வேண்டாத தகவல்கள் வெளியாகிவிடக் கூடாது என்பதற்காக அவரது இறுதி நாள்கள் குறித்து 220 பக்கப் புத்தகத் தொகுப்பை வத்திக்கான் நகரம் கடந்த வாரம் வெளியிட்டது. இதில் கடந்த ஜனவரி 31ஆம் திகதி முதல் பாப்பரசர் 2 ஆம் ஜோன் போல் இறுதிநாள்களில் நடைபெற்ற ஒவ்வொரு சம்பவங்களும் குறிப்பிடப்பட்டுள்ளன.

இந்தப் புத்தகத்தில் பாப்பரசர் 'பார்கின்சன்' நோயால் அவதிப்பட்டது முதல் அவரது சிகிச்சை முறைகள், பேச்சுகள் உட்பட அனைத்து விவரங்களும் வெளியிடப்பட்டுள்ளன. பாப்பரசர் மறைந்த நாளன்று கடைசியாக 'என்னை என் தந்தை வீட்டிற்குச் செல்ல விடுங்கள்' எனக் கூறினார் என்ற அரிய தகவலும் அதில் இடம்பெற்றுள்ளது.

மறைந்த பாப்பரசர் 2ஆம் ஜோன் போலிடம் இருந்து இறுதியாக உதிர்ந்த இந்தச் சொற்கள் மெல்லிய முணுமுணுப்பாக, அவரது தாய் மொழியான போலந்து மொழியில் இருந்தன. இந்த வார்த்தைகளைக் கூறிய ஆறு மணிநேரத்தில் பாப்பரசர் மரணமடைந்தார் என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (8)


Jayoda ஜயோதா ජයෝදා

## உத்தியோகபூர்வ முடிவுகள்

டிக்கட் தொடர் இல. 6278527 முதல் 6291236 வரை சீட்டிழுப்பு இல. 169 திகதி 19-9-2005

வெற்றி எண்கள் **5 0 7 2 3 9** சுப்பர் எண் **22**

சுப்பர் ஜக்பொட் பரிசு 1,50,79,325/- வெல்லப்படவில்லை

| வெற்றி எண்கள் | வெற்றி பெற்றோர் | பரிசுத் தொகை | முழு பரிசுத் தொகை |
|---|---|---|---|
| 6 எண்களுடன் சுப்பர் எண் | - | 1,50,79,325/- | - |
| இடது பக்கத்தில் இருந்து முதல் 6 எண்கள் | 01 | 10,00,000/- | 10,00,000/- |
| இடது பக்கத்தில் இருந்து முதல் 5 எணகள் | 12 | 50,000/- | 6,00,000/- |
| இடது பக்கத்தில் இருந்து முதல் 4 எண்கள் | 112 | 5,000/- | 5,60,000/- |
| இடது பக்கத்தில் இருந்து முதல் 3 எண்கள் | 1,112 | 500/- | 5,56,000/- |
| இடது பக்கத்தில் இருந்து முதல் 2 எண்கள் | 11,119 | 50/- | 555,950/- |
| இடது பக்கத்தில் இருந்து முதல் 1 எண் | 1,10,194 | 10/- | 11,01,940/- |
| வலது பக்கத்தில் இருந்து முதல் 5 எண்கள் | 09 | 5,000/- | 45,000/- |
| வலது பக்கத்தில் இருந்து முதல் 4 எண்கள் | 111 | 1,000/- | 1,11,000/- |
| வலது பக்கத்தில் இருந்து முதல் 3 எண்கள் | 1,112 | 100/- | 1,11,200/- |
| வலது பக்கத்தில் இருந்து முதல் 2 எண்கள் | 11,022 | 20/- | 2,20,440/- |
| | | மொத்தம் | 48,61,530/- |
| மோட்டார் சைக்கிள்களின் பெறுமதி | 08 | 75,325/- | 6,02,600/- |
| வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை | | | 54,64,130/- |

இந்த வியாழக்கிழமை சுப்பர் ஜக்பொட்
ரூ. **15,388,500/-**

தொடர் இல. 7217962 க்கு மேற்பட்ட செம்மஞ்சள் நிற டிக்கட்டுக்கள் 2005 செப்டம்பர் 22 ஆம் திகதி வியாழக்கிழமை செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுக்கள் 6 மாதங்கள் செல்லுபடியாகும்.

வளமான வாழ்விற்கு

அபிவிருத்தி லொத்தர் சபை
இல. 33, சென்ற் மைக்கேல் வீதி, கொள்ளுப்பிட்டி, கொழும்பு 3.

ரூபா 75,325/- பெறுமதியான எட்டு மோட்டார் சைக்கிள்களை வெற்றிபெற்ற 8 டிக்கட்டுகளின் தொடர் இலக்கங்கள்

| | |
|---|---|
| மட்டக்களப்பு | 6285506-5-08 |
| கொழும்பு | 6290981-2-65 |
| கண்டி | 6285398-1-59 |
| மாத்தறை | 6279467-7-91 |
| புத்தளம் | 6280456-6-08 |
| அம்பாறை | 6283478-1-31 |
| பதுளை | 6282022-2-27 |
| பொலன்னறுவை | 6285084-9-20 |


## பரி.தோமாவின் கல்லூரி, கல்கிசை தமிழ் இலக்கிய மன்றம் நடத்தும்

## அகில இலங்கை தமிழ்த்திறன் காண் மற்றும் விவாதப் போட்டிகள் -2005

பரி.தோமாவின் கல்லூரி கல்கிசை தமிழ் இலக்கிய மன்றம் இவ்வருடம் தனது வைரவிழா கொண்டாட்டங்களையொட்டி நாடு முழுவதும் பரந்திருக்கும் தமிழ் மாணவரை ஒருமிக்கச் செய்து தத்தம் தனித் தமிழ்த்திறன்களை வெளிக்கொணரும் முகமாக அகில இலங்கை ரீதியில் தமிழ்த்திறன் காண் மற்றும் விவாதப்போட்டிகள் 2005 ஐ செந்தமிழ் அன்னையின் நாள் தொட்டு நடத்தவுள்ளது.

போட்டி விவரங்கள்:

- கட்டுரை
- சிறுகதை
- கவிதை
- பேச்சு
- தனியிசை
- ஆங்கிலக் கட்டுரை

மேற்படி போட்டிகள் கீழ்ப்பிரிவு (தரம் - 6,7,8), மத்திய பிரிவு (தரம்- 9,10), மேற்பிரிவு (தரம் -12,13) ஆகிய 3 பிரிவுகளில் நடைபெறும்.

மேலும் அகில இலங்கை தமிழறிவுப் போட்டியும் விவாதப் போட்டிகளும் திறந்த போட்டிகளாக நடைபெறும்.

மேற்படி போட்டிகள் 01.10.2005 அன்று காலை 8.31 மணிக்கு பரி.தோமாவின் கல்லூரி மண்டபத்தில் வெகுசிறப்பாக அரங்கேறும் என அனைத்து பாடசாலைகளுக்கும் தெரியத் தருகின்றோம். போட்டிகளில் பங்குபற்றுபவர்கள் 31.01.1986 இற்குப் பின்னர் பிறந்தவர்களாக இருக்கவேண்டும். 28.09.2005 இற்கு முன்னர் தம் வரவை உறுதிப்படுத்தும் வெளிமாவட்டப் பாடசாலைகளுக்கு தங்குமிட, உணவு வசதிகள் இனிதே ஒழுங்கு செய்துதரப்படும். இந்த தோமிய முயற்சியை ஊக்குவிக்குமாறும் நாடெங்கிலும் தமிழ்ப்பெருமை பரவுவதற்காகவும் அனைத்து பாடசாலைகளையும் இந்த அகில இலங்கை போட்டிகளில் கலந்துசிறப்பிக்குமாறு பணிந்து நிற்கின்றோம்.

உங்கள் வரவை உறுதிசெய்யும் பொருட்டு,

**தொடர்புகளுக்கு:**

Fax: 011 4528840
(ATTN: SECRETARY,
TAMIL LITERARY ASSOCIATION,
S.THOMA'S COLLEGE, Mr.LAVINIA

திரு. K.V.Kuggatharan (பொறுப்பாசிரியர்)
தொ.இல. 011 2593107
M.F.Imran (தலைவர்) தொ.இல. 011 2729708
V.S.AJANTHAN(பொருளாளர்)
தொ.இல. 011 2363211

# சமாதான வாழ்த்துச் செய்திகள்

**"வன்முறையற்ற வழிகளில் சமாதானத்தையும் நல்லிணக்கத்தையும் நோக்கி"**

சர்வதேச சமாதான தினமாகிய இன்று சமாதானத்திற்கும் நல்லிணக்கத்திற்குமான நிறுவனம், சமாதானச் செய்திகளை ஐக்கிய நாடுகள் ஸ்தாபன செயலாளரிடமிருந்தும், மதத்தலைவர்களிடமிருந்தும் அரச, அரச சார்பற்ற நிறுவன அதிகாரிகளிடமிருந்தும் வழங்கி இந்நாளை சமாதான நாளாக அனுஷ்டிக்குமாறு அனைவரையும் அழைக்கின்றது.

**Dear Friends around the world,**



Peace is the paramount United Nations mission. It is the basis of our existence. The essence of our identity. The cause that animates everything we do.

September 21, the International Day of Peace, is a day on which we reaffirm our commitment to this quest.

It is an opportunity to consider how to strengthen our system of collective security. And it is meant to be a day of global cease-fire. I call on all countries and all people to stop all hostilities for the entire day. I also urge all people around the world to observe a minute of silence at 12 noon.

Twenty-four hours is not a long time. But it is time enough for combatants and political leaders to consider the destruction they are visiting on their people, and on their lands.

It is long enough to look over the barricades, and through the barbed wire, and to see if there is another path. On this International Day of Peace, let us all honour those who have suffered from violence. Let us hold in our hearts the ideal of peace.

**Kofi Annan**
**UN Secretary-General**

## அருள் ஆசிச் செய்தி



அன்புள்ளவர்கட்கு,

இன்று உலக சமாதான தினமாகும். உலகில் வாழும் அனைத்து மனித உயிர்களுக்கும் மிகவும் அவசியம் தேவையானது சமாதானம் ஆகும். இதனைக் குறிக்கோளாகக் கொண்டு சமாதானத்திற்கும் நல்லிணக்கத்திற்குமான நிறுவனம் இலங்கையில் வாழும் தமிழின மக்கள் துன்பத்திலிருந்து விடுபட்டு சமாதானத்துடன் வாழ்வதற்கு இந் நாளை சிறப்பிப்பது, ஏக்கத்துடன் வாழ்ந்து கொண்டிருக்கும் மக்களிறகு இந்நிகழ்ச்சி மன ஆறுதலை தருவதாகும். சமாதானம் நிலைத்து வர அனைவரும் இறைவனைப் பிரார்த்திப்போமாக. சமாதானம்! சமாதானம்! சமாதானம்! இதுவே இன்றைய கருப்பொருளாகவுள்ளது.

'என்றும் வேண்டும் இன்ப அன்பு'

*ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த*
*பரமாச்சாரிய சுவாமிகள்,*
*இரண்டாவது குருமகா சந்நிதானம்.*



நாடு மறுபடியும் ஜனாதிபதித் தேர்தலை எதிர்நோக்குவதால் வழமை போல் தேர்தல் இனக்கூச்சலை உண்டாக்கும். சிறுபான்மையினரை பகைவர்களாக இனங்காணும்படி இந்நாட்டு மக்கள் பெரிதான மூளைச்சலவை செய்யப்பட்டுள்ளனர். அதனால் ஒரு தேர்தலிலிருந்து மறு தேர்தலிற்கு மோசமான முறையில் பாதிப்படைந்துள்ளோம். நாம் ஒரே நாட்டில் வாழவேண்டுமெனில் வேறு வழியின்றி எமது வேறுபாடுகளை ஏற்றுக்கொண்டு ஒன்றாக வாழ்வதை விட வேறு மார்க்கமில்லை. அதுதான் சமாதானத்திற்கான பாதை. சந்தர்ப்பத்திற்கு உகந்த முறையல் செயற்பட்டு கூடி வாழ்வதை ஆதரிப்போம். அந்தமுறையில் சமாதானத் திற்காகப் பாடுபடுவோம். சமாதானம் என்பது அமைப்பு ரீதியான சமயங்களுக்கு அப்பாற்பட்ட புனிதமான சொல். ஆனால் சகல பெரிய மதங்களும் சமாதானம் பற்றியே பேசுகின்றன. காருண்யமுள்ளவரான புத்தபெருமான் சமாதானம் பற்றியே பேசினார். காருண்யமுள்ளவரான யேசுவும் சமாதானம் பற்றியே பேசினார். இந்துக்களும் ஆன்மிக ரீதியில் அப்படியே பேசு கின்றனர். வேறுபாடுகளுக்கு அப்பால் சென்று சமாதானத்திற்காகச் செயற்பட எம்மால் முடியாதா? எமது பாடசாலை பாடவிதானங்களில் சமாதானக்கல்வி ஒன்றிணைக்கப்பட வேண்டும். இதைச் செய்வதற்கு நாம் தாமதித்து விட்டோம். ஆனால் மிகவும் தாமதமாகிவிட்டதாக நான் நினைக்கவில்லை. சமாதானமான தேர்தலுக்காக எதிர்பார்ப்புடன் செபிப்போம். நேர்மையான தேர்தல் நடைபெற்றால் மக்களின் தீர்ப்பினை ஏற்று தேர்தலுக்குப் பின்னரான சமாதான சூழலுக்காகவும் செபிப்போம்.

அருட்தந்தை S. M. செல்வரட்ணம் அமதி
முதல்வர் – யாழ் மாகாண அமல மரித்தியாகிகள்

## "வன்முறையற்ற வழிகளில் சமாதானத்தையும் நல்லிணக்கத்தையும் நோக்கி..."



என்ற தெளிந்ததொரு கருததொனியில் சமாதான வாரமொன்றைப் பிரகடனப்படுத்தி, யாழ் குடாநாட்டில் சமாதான விழிப்புணர்வுகளையும், செயற்பாடுகளையும் செய்துவரும் சமாதானத்திற்கும் நல்லிணக்கத் திற்குமான நிறுவனத்திற்கு எனது பாராட்டும், ஆசீரும் உரித்தாகுக!

"சமாதானம்" என்பது அரசியலுடன் கலக்கப்பட்ட வியாபாரச் சொலலாக எம் அனைவராலும் ஜீரணிக்கப்படுகின்றது. தவிர, இலங்கை அரசியலிலும், உலக அரங்கிலும் பதவிக்கு ஏணியாக, பணத்திற்கான ஒரு சந்தையாக சமாதானம் என்ற சொல்லைப் பயன்படுத்துவது வருநதத்தக்கது. சமாதானம் அரசியல்விடுதலையை மட்டும் குறித்து நிற்கும் ஓர் பதம் அல்ல. மாறாக தேசிய, இன, மத, மொழி, பண்பாட்டின் எல்லைகளைக் கடந்து, ஆன்மீக விடுதலையை குறித்து நிற்கும் ஒரு பதமாகும்.

மக்கள் இன்மொழி பேசி, இரக்கம் காட்டி, உயிர்களுக்கு மதிப்பளித்து, ஒன்றுபட்டு, வேற்றுமையில் ஒற்றுமையாய் வாழ்வது சமாதானத்தின் சிறப்பாகும். பண்பாட்டின் வேற்றுமைகளைக் கொண்டாடுவதை விடுத்து, அவற்றை முரண்பாட்டின் காரணங்களாக பாவித்தல் கூடாது. இன, மத, மொழி, தேசிய ஆர்வங்களால் பல உயிர்களைப் பறிகொடுத்து துன்பியல் வாழ்வை அனுபவிக்கும் நாம், சமாதானத்திற்காக ஒன்றுபடுவோம். குறிப்பாக வன்முறையற்ற வழிகளில் சமாதானத்தையும் நல்லிணக்கத்தையும் நோக்கி நகர்ந்து, சமாதானப் பண்பாடொன்றை எம்மத்தியல் உருவாக்குவோம். சமாதானப் பண்பாடென்பது நல்விழுமியங்களின், மனநிலைகளின், நடத்தைமுறைகளின், வாழ்க்கை வழிகளின் தொகுப்பாகும் மட்டுமன்று, இப்பண்பாடு வன்முறையை விடுத்து முரண்பாட்டைத் தடுத்து, தனித்துவங்களை மதிக்கும் ஒரு பண்பாகும்.

இந்நாளில் சமாதானத்திற்காக ஒன்றிணைந்து உழைக்க அனைவரையும் அழைத்து, வாழ்த்தி ஆசிக்கின்றேன்.

*+ மேதகு. தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை,*
*யாழ் மறைமாவட்ட ஆயர்.*



"Every day many children, women and men around the world are dying because of wars. Lives of the people are precious and everyone should respect that by not taking it away from the people of this world. I pray that peace will conquer the world and the chance to live in peace and harmony will be given to each and every person".

*Best regards*
*Agron Dragaj, UNHCR, Jaffna*

## சமாதானச் செய்தி



ஐக்கிய நாடுகள் ஸ்தாபனம் தனது பொது ஒன்று கூடலின் தொடகக நாளில் புரட்டாதி மாதம் 21ம் திகதியை சர்வதேச சமாதான தினமாகப் பிரகடனப்படுத்தியுள்ளமையை அறிந்து நான் சந்தோஷமடைகிறேன். இதை முன்னிட்டு சமாதானத்திற்கும் நல்லிணக்கத்திற்குமான நிறுவனம் புரட்டாதிமாதம் 15ஆம் திகதி தொடக்கம் 21ம் திகதி வரையிலான நாள்களை சமாதான வாரமாக அனுஷ்டிப்பதை அறிந்தமை எனக்கு இரட்டிப்பு மகிழ்ச்சியை தருகின்றது. இச்சந்தர்ப்பத்தில் இந்த சமாதானச் செய்தியை தெரிவிப்பதில் நான் பெருமகிழ்வடைகின்றேன்.

சமாதானம் என்ற விடய ஒவ்வொரு மனிதனுக்கும், அவனுடைய இயல்பும், ஊக்கமும், மகிழ்ச்சியும் நிறைந்த வாழ்விற்கு மிகவும் இன்றியமையாத அம்சமாகவுள்ளது. ஆனால் அதே நேரத்தில கடினமான பேச்சுவார்த்தை, உழைப்பு மூலமே சமாதானத்தை அடையலாம் என்பதையே நாம் அனுபவம் மூலமாகக் கற்றுக்கொண்டோம் இதனை அடைவதற்கு அனைவரினதும் பங்களிப்பு வேண்டும். போர் மற்றும் அசாதாரண நிலைமைகளால் இந்த உலகத்தில் பெருந்தொகையான உயிரழிவுகள் தொடர்ந்துகொண்டு இருக்கின்றன. ஏன் நாங்கள் இந்த அழகான பூமியில் சமாதானமாக வாழ்ந்து பெறுமதி வாய்ந்த உயிர்கள் அழிவதைத் தடுக்க முடியாது? சர்வதேச சமாதான தினத்தின் பிரகடனமானது இந்த உலகத்தின் சனத்தொகையில் ஒரு பகுதியினரின் இதயங்களுக்காவது சமாதானத்தின் தேவையை உணர்த்தும் என நான் நம்புகின்றேன்.

சமாதானத்திற்கும் நல்லிணக்கத்திற்குமான நிறுவனம் சமாதானத்தை நோக்கி முன்னெடுக்கும் அனைத்து செயற்பாடுகளும் வெற்றிகரமாக அமைய வாழ்த்துகின்றேன்.

**பேராசிரியர் சு.மோகனதாஸ்,**
**துணைவேந்தர், யாழ்.பல்கலைக்கழகம்.**

# மாபெரும் சமாதானக் கலை விழா

*"வன்முறையற்ற வழிகளில் சமாதானத்தையும் நல்லிண கத்தையும் நோக்கி"*

**இடம்:~ யாழ் திருமறைக் கலாமன்றம், காலம்:~ 21.09.2005, நேரம்:~ மாலை 6.30**

யாழ்ப்பாணத்தில் சமாதான நிறுவனமாக இயங்கி வரும் "சமாதானத்திற்கும் நல்லிணக்கத்திற்குமான நிறுவனம்" இன்று மாபெரும் சமாதானக் கலை நிகழ்வு ஒன்றை திருமறைக் கலாமன்றத்தில் ஒழுங்கு செய்துள்ளது. பாடசாலைச் சிறார்களின் சமாதான நிகழ்வுகளும், "கலாபவனம்" தலைமையில் நடனங்களும், சிறப்பு நிகழ்வாகத் திருமறைக் கலாமன்றத்தின் "கொல்சனும் கொற்றம்" எனும் நாட்டுக்கூத்தும் நடைபெறவுள்ளது. அனைவரையும் வருக வருகவென வரவேற்கின்றோம்.

சமாதானத்திற்கும் நல்லிணக்கத்திற்குமான நிறுவனத்தால் சமாதான வாரத்தையொட்டி நடாத்தப்பட்ட கவிதை, கட்டுரை, சுவரொட்டி போட்டி முடிவுகள் பின்வருமாறு:

கவிதைப் போட்டி முடிவுகள :- செல்வி.சோபிகா ஸ்ரீஜீவா (முதலாம் இடம்), செல்வி R.சுகந்தினி (இரண்டாம் இடம்), செல்வன் ஆ.ஜென்சன் றொனால்ட் (கவிஞர் சூரிய நிலா) (மூன்றாம் இடம்),

சித்திரப் போட்டி முடிவுகள் :- செல்வி.கார்த்திகேயினி திருநாவுக்கரசு (முதலாம் இடம்), திருமதி.மாலாதேவி மதிவதனன் (இரண்டாம் இடம்), செல்வன் ப.கோகிலன் (மூன்றாம் இடம்),

**கட்டுரைப் போட்டி முடிவுகள்**

முதலாம் பிரிவு: செல்வி.மைதிலி மோகனராசன் (முதலாம் இடம்), செல்வன்அருள்ராஜா அங்கலின்றாஜ் (இரண்டாம் இடம்), செல்வன் திருநாவுக்கரசு துவாரகன் (மூன்றாம் இடம்),
இரண்டாம் பிரிவு: செல்வி தனந்திகா சிற்றம்பலம் (முதலாம் இடம்), செல்வன் தர்மகுலசிங்கம் சுஜீவன் (இரண்டாம் இடம்), செல்வி முகூர்த்தனா பாலச்சந்திரன் (மூன்றாம் இடம்),
மூன்றாம் பிரிவு: செல்வி யோசப்பின் ஷியார்னி லூக்காஸ் (முதலாம் இடம்), செல்வன் அன்ரனி எட்வின் றோஜர் (இரண்டாம் இடம்), செல்வி ஷிறோமி அந்தோனிராஜா (மூன்றாம் இடம்).

வெற்றிபெற்றவர்களிற்கான பரிசுகள் இன்று மாலை 6.30 மணிக்கு திருமறைக்கலாமன்றத்தில் நடைபெறவுள்ள சமாதானநிகழ்வில் வைத்து வழங்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் அறியத் தருகின்றோம். மேலும் இப்போட்டிகளில் ஆர்வத்துடன் பங்குபற்றிய அனைத்துப்போட்டியாளர்களையும் பாராட்டுவதோடு மேற்படி சமாதானக் கலைநிகழ்வில் பங்குபற்றும்படி உங்களை அன்புடன் அழைத்து நிற்கின்றோம்.

(40265)

**சமாதானத்திற்கும் நல்லிணக்கத்திற்குமான நிறுவனம், இல.08, குருசோ வீதி, யாழ்ப்பாணம்.**

## மனமுவந்து வாழ்த்துகின்றோம்



யா/ அச்சுவேலி சரஸ்வதி வித்தியாசாலையில் பிரதி அதிபராகக் கடமையாற்றி 16.09.2005இல் 60ஆவது அகவைகண்டு ஓய்வுபெற்றுச் செல்லும் **திருமதி க.இராசலிங்கம்** அவர்களின் ஓய்வுகாலம் சிறப்புற அமைய வாழ்த்துவதுடன், மேலும் சமூக சேவைகள் செய்து பல்லாண்டு காலம் சிறப்புற வாழ வாழ்த்துகின்றோம்.

(40218) (11-12-38)

*அதிபர், ஆசிரியர், மாணவர்,*
யா/அச்சுவேலி சரஸ்வதி வித்தியாசாலை. *பெற்றோர்.*

## துயர் பகிர்கின்றோம்

எங்கள் பாடசாலை ஆசிரியை **திருமதி ஜெயவதனா ரமேஸ்பாபு** அவர்களின் அன்புத் தந்தை

### க.துரைகிளி

(40272)(38-11-12)

அவர்கள் 18.09.2005 அன்று காலமானதையிட்டு அவரது பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவிப்பதோடு, ஆத்மசாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்.
**யா/கொற்றாவத்தை அ.மி.த.க. பாடசாலை.**

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

மலர்வு 04 - 05 - 1934



உதிர்வு 22 - 08 - 2005

### அமரர் வைரமுத்து செல்லத்துரை

*வழிகாட்டி எங்கள் வாழ்வமைத்த*
*விழிமூடிய தெய்வமே உந்தன்*
*பாதங்களில் எங்கள் வணக்கம்.*

22.08.2005 அன்று இறைபதமடைந்த எமது அன்புத் தெய்வம் வைரமுத்து செல்லத்துரை அவர்களின் வீட்டுக் கிருத்தியமும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையும் இன்று (21.09.2005) புதன்கிழமை அவரது இல்லத்தில் நடைபெறவிருப்பதால் அந்நிகழ்விலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

சுதுமலை கிழக்கு,
மானிப்பாய். (40254)(11-12-38) *குடும்பத்தினர்.*

## மரண அறிவித்தல்கள்

### திருமதி குணலிங்கம் சரஸ்வதி



மறவன்புலோவைப் பிறப்பிடமாகவும் கொல்லங்கலட்டியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி குணலிங்கம் சரஸ்வதி(ஜேர்மனியில்) அவர்கள் நேற்று (20.09.2005) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் குணலிங்கத்தின் அன்பு மனைவியும் சட்டநாதர் - சிதம்பரம் தம்பதியரின் பாசமிகு மகளும் காலஞ்சென்ற விநாயகர் ஆறுமுகம் - சரஸ்வதி தம்பதியரின் அன்பு மருமகளும் கேதீஸ்வரன் (பிரான்ஸ்), ஜேர்மனியில் உள்ள மணிமாறன், நிசாந்தன், சுபாசினி, சுமதி, சுதாமினி ஆகியோரின் தாயாரும் மனோகரன், மகேஸ்வரன், பரமேஸ்வரன், பரமேஸ்வரி, நகுலேஸ்வரி, இராஜேஸ்வரி (சமுர்த்தி அலுவலர்) ஆகியோரின் அன்புச் சகோதரியும் கு.சரவணபவன், ந.சரவணபவன், குமாரசாமி, யோகாதேவி (பிரான்ஸ்), அருள்மணி, நமோநிதி (பிரான்ஸ்) ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் (24.09.2005) சனிக்கிழமை ஜேர்மனியில் நடைபெறும்.

தகவல்:
**தந்தை - இ.சட்டநாதர்.**

ஆறுமுகம் வீதி,
கந்தரோடை, சுன்னாகம். (40276)(38-11-12)

### செல்லையா சங்கரப்பிள்ளை

(ஓய்வுபெற்ற ஆசிரியர்)

சுதுமலை தெற்கைப் பிறப்பிடமாகவும் உடுவில் தெற்கு பாலாவோடையை வசிப்பிடமாகக் கொண்ட செல்லையா சங்கரப்பிள்ளை நேற்று 20.09.2005 காலமானார்.

அன்னார் இராசம்மா (ஓய்வுபெற்ற ஆசிரியை, யா/இணுவில் மத்திய கல்லூரி) அன்புக் கணவரும் சச்சிதானந்தபிள்ளை, சந்திரகாந்தன் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையும் ஜெயந்தி , சறோஜினிதேவி ஆகியோரின் அன்பு மாமனாரும், ஜனகன், கோபிகா, சரன், துளசி, அபிலாஷ், மிதுனா ஆகியோரின் அன்புப் பேரனும் காலஞ்சென்றவர்களான பொன்னம்பலம், கந்தையா (சுதந்திரநாத அச்சகத்தின் முன்னாள் உரிமையாளர்) ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (21.09.2005) புதன்கிழமை பி.ப. 2மணிக்கு அவரது இல்லத்தில் இடம்பெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக தாவடி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல் லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: **ச.சச்சி** (மகன்)
**ஸ்ரீச்சாமி பாமசி, தாவடி**
T.P: **0779581737**

பாலாவோடை, (40277)(38-11-12)
உடுவில் தெற்கு, சுன்னாகம்.

## மார்பு நோய் சிகிச்சை நிலையம் இன்று முதல் பண்ணையில்

யாழ்ப்பாணம்,செப்.21

மார்பு நோய் சிகிச்சை நிலையம் இன்று முதல் பண்ணையில் அமைந்துள்ள சுகாதாரக் கிராமத்தில் இயங்கும் என மாவட்ட காசநோய்த் தடுப்பு வைத் திய அதிகாரி சி. எஸ். யமுனானந்தா தெரிவித்தார்.

மார்பு நோய் கிசிச்சை நிலையத்துக்கு தனியான கட்டடம் ஒன்று பண்ணையில் அமைக்கப்பட்டுள்ளது.

இதுவரைகாலமும் பல்வேறு இடங்களில் இந்த வைத்தியநிலையம் இயங்கி வந்தமை குறிப்பிடத்தக்கது. (3)


**B.A. PART -1**
*ஆரம்பம்: 24-09-05*
*சனி காலை 8.30*
எமது வழமையான விரிவுரையாளர்கள்.
**D.C.C.A.**
ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம்.
(40209) (24-11-12 58)

**A/L DAY CLASS**
D.C.C.A
*ஆரம்பம்: 24-09-05*
*சனி காலை 8.30*
*மாதப் பரீட்சை*
இம்மாதக் கட்டணம் இல்லை.
PAPER 06
ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம்.
(40210) (24-11-12 58)

**ராஜா** யாழ்ப்பாணம்
*இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரேதின வெளியீடு*
*நியூபுகழ் எஸ்.ஜே.சூர்யா, நிலா நடித்த*
**அன்பே ஆருயிரே**
காட்சி [illegible]: 10.30,2.30, 6.30, 9.30 (பு.நே.)
[illegible] முற்பதிவு செய்துகொள்ளலாம்.

**நாதன்ஸ் சினிமா** ஆஸ்பத்திரி முன்பாக யாழ்ப்பாணம்.
*மணிகண்டன், சிம்ரன், ஜெய் ஆகாஷ் மற்றும் பலர் நடித்த*
***கிச்சா வயது 16***
கா.நே.: 10.30, 2.30, 6.30, 9.30. (பு.நே.)
(சி 45384)

**மனோகரா** யாழ்ப்பாணம்
சிம்பு, கோபிகா நடித்த
**தொட்டி ஜெயா**
காட்சிநேரம்:- பு.நே. 10.30, 2.30, 6.30, 9.30,
(சி 44110)

**நாகம்ஸ்** சினிமா சுன்னாகம்
ரவிகிருஷ்ணா, கோபிகா, ரேவதி நடித்த
**பொன்னியின் செல்வன்**
காட்சிகள்:
11.00, 3.00, 7.00 (பு.நே.). (ரீல்ஸ்)


## மரண அறிவித்தல்

### ஆழ்வார் இராசையா

*(ராசு - நோர்வே)*



காரைநகர், காமாட்சி கேணியடியைப் பிறப்பிடமாகவும் நோர்வேயை வசிப்பிடமாகவும் கொண்ட ஆழ்வார் இராசையா அவர்கள் 13.09.2005 செவ்வாய்க்கிழமை அன்று நோர்வேயில் காலமானார்.

அன்னார் றூபி அவர்களின் அன்புக் கணவரும் ரதின், ராஜீ ஆகியோரின் பாசமிகு தந்தையும் கந்தசாமி (ஆசிரியர்), ஏரம்பு, புலேந்திரன் (தொல்பொருள் ஆராய்ச்சி நிலையம் - யாழ்ப்பாணம்) ஆகியோரின் சகோதரரும் மனோன்மணி, நாகேஸ்வரி, கோகுலமணி ஆகியோரின் மைத்துனரும் வரதராசா, சாந்தி (சுவிஸ்), ஜீவராசா, நேசராசா, ஜெயந்தி, கமலா, குமார், நந்தன், கலைமதி (சுவிஸ்), பவானி, துசிதா, சாயினி, கபிலாயினி ஆகியோரின் சிறிய தந்தையும் நாகேஸ்வரி, நாகேந்திரம் ஆகியோரின் சகோதரரும் நாகசுந்தரத்தின் மைத்துனரும், நரேந்திரன் (சுவிஸ்), நாகராஜன் (கனடா), நாகலக்ஷ்மி, நந்தினி, சண்முகரட்ணம் (சுவிஸ்), சுதா (சுவிஸ்) ஆகியோரின் மாமனாருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று புதன்கிழமை நோர்வேயில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

(சி-45225) (38-11-12)

*அந்தோனியார் வீதி,*
*மானிப்பாய்.*

தகவல்:
**ஆ.புலேந்திரன்.**

## நெல்சன் சாரதி பயிற்சிப் பாடசாலை

**அரசாங்கத்தால் A தரத்தில் அங்கீகரிக்கப்பட்ட சாரதிப் பயிற்சி பாடசாலை**

சிறிய வாகனம் முதல் கனரக வாகனம் வரை பயிற்சி அளித்து சாரதி அனுமதிப்பத்திரம் பெற்றுக்கொள்ளலாம். எனவே தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி: -

**இல: - 109, Y.M.C.A. கட்டடம்**
**கச்சேரியடி, யாழ்ப்பாணம்.**

(40273)(38-11-12)

## மரண அறிவித்தல்கள்

### சிவகுரு சுப்பிரமணியம் (காரைநகர்)



காரைநகர், பலகாட்டைப் பிறப்பிடமாகவும் சாவகச்சேரி பெருங்குளம் பிள்ளையார் கோயிலடியை வசிப்பிடமாகவும் கொண்ட சிவகுரு சுப்பிரமணியம் அவர்கள் நேற்று (20-09-2005) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் செல்லம்மாவின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற நவரத்தினம், கனகரத்தினம், மகாலட்சுமி ஆகியோரின் அன்புத் தந்தையும் உருக்குமணிதேவி, இராசலட்சுமி, சிவசுப்பிரமணியம் ஆகியோரின் அன்பு மாமனும் இராசமலர், சதீஸ்குமார், சிறிதேவி, நாகேஸ்வரி, சிவகுமார், கணேஸ்குமார், உஷாநந்தினி, கோமதி, தேவிகா, ரூபன், வசந்தன், மாலவன், லவன், றஜீவன், சிவா, சுதா, காண்டீபன் ஆகியோரின் பேரனும் ஜனாத்தின் பூட்டனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (21-09-2005) புதன்கிழமை முற்பகல் 10 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் கண்ணாடிப்பிட்டி இந்துமயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பெருங்குளம் பிள்ளையார் கோயிலடி,
சாவகச்சேரி. (40267)(11-12-38)

*தகவல்:*
குடும்பத்தினர்.

### திருமதி தேவகி நடராசா



மலேசியாவைப் பிறப்பிடமாகவும், அரியாலையை சொந்த இடமாகவும் கொண்ட திருமதி தேவகி நடராசா அவர்கள் 18.09.2005 ஞாயிற்றுக்கிழமை அன்று காலமாகிவிட்டார்.

அன்னார் செல்லையா நடராசாவின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான ஆறுமுகம் செல்லையா (சிங்கப்பூர் முத்தையா)- திருமதி செல்லையா இராசம்மா தம்பதியரின் சிரேஷ்ட புத்திரியும் இராகுலன், ரதிமோகன், ரஜனி, நளினி ஆகியோரின் பாசமிகு தாயும், காலஞ்சென்ற பாலசுப்பிரமணியம், பாலராமன், சுகுணவதி ஆகியோரின் சகோதரியும் நிர்மலநாதன், சரஸ்வதி, ரோசி ஆகியோரின் அன்பு மாமியாரும், சுகந்தி, சுதாகரன் (தங்கன்), சுமன், சுதன், சுகன், ஜேசன், ஜேனி, அனித்தா, அனோஜன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் துவாரகன், துவாரகா, துர்க்கா ஆகியோரின் பாசமிகு பூட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (22-09-2005) வியாழக்கிழமை முற்பகல் 10 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக சித்துப்பாத்தி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும்படி அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

**556, கண்டி வீதி,**
*அரியாலை*
**(ஸ்ரீ பார்வதி வித்தியாசாலை அருகில்).**

தகவல்:
**குடும்பத்தினர்**

(40269)(11-12-38)

### செல்லையா நவரட்ணம்



பண்டத்தரிப்பைப் பிறப்பிடமாகவும் நல்லூர், செட்டித்தெருவை வசிப்பிடமாகவும் கொண்ட செல்லையா நவரட்ணம் அவர்கள் 19.09.2005 திங்கட்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை 22.09.2005 வியாழக்கிழமை முற்பகல் 11 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*50/18, செட்டித்தெரு,*
*நல்லூர்.* (40255)(11-12-38)

தகவல்:
**குடும்பத்தினர்.**

### அ.இ.பெஞ்சமின்

**(இலங்கை மின்சார சபை முன்னாள் ஊழியர், யாழ்., இ.மி.ச. தொழிலாளர் சங்க முன்னாள் தலைவர்)**

யாழ். சுண்டுக்குழியைப் பிறப்பிடமாகவும் நீர்வேலி தெற்கை (புனித அந்தோனியார் வளவு) வசிப்பிடமாக்வும் கொண்ட அ.இ.பெஞ்சமின் அவர்கள் நேற்று (20.09.2005) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அல்பிறட்- லைசா தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற நேசமணியின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற எலிசபேத்தின் அன்புத் தந்தையும் இராசம்மா, காலஞ்சென்றவர்களான ஞானம்மா, பெரியதம்பி, அருளம்மா, இராசு, யோசையா ஆகியோரின் அன்புச் சகோதரருமாவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (21.09.2005) புதன்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு யாழ். 41, பழைய பூங்கா வீதி இல்லத்திலிருந்து புனித மரியன்னை பேராலய சேமக்காலைக்கு நல்லடக்கத்துக்காக எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

'அருள் லூட்ஸ் லொட்ஜ்'
*41,* பழைய பூங்கா வீதி. யாழ்ப்பாணம்.

தகவல்:
**உறவினர்.**

(40262)(11-12-38)

# சமஷ்டி மட்டுமே...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

✱ தமிழர்களுக்கென தனியான சுயநிர்ணய உரிமையும் இல்லை.

- என்பன போன்ற - தமிழர் விரோத - அம்சங்கள் அடங்கியிருந்தன.

ஆனால், இணைத்தலைமைகள் நேற்றுக் கூட்டாக வெளியிட்ட அறிக்கை, பிரதமரின் இந்த நிலைப்பாட்டை முற்றாக மறுத்துரைத்து நிராகரிக்கும் வகையில் அமைந்திருந்தது.

"ஜனநாயகத்தை உறுதிப்படுத்தி, சகல இன குழுக்களினதும் சட்டபூர்வ உரிமை மற்றும் மனித உரிமைகளை மதிக்கும் வகையில் டிசெம்பர் 22இல் ஒஸ்லோவில் காணப்பட்ட கொள்கை இணக்கத்துக்கு அமைவாக, ஐக்கிய இலங்கைக்குள் சமஷ்டி முறையிலான இணக்கப்பாடு ஒன்றை அரசியல் பேச்சுகள் வாயிலாகக் காண்பதன் மூலம் மட்டுமே இனப்பிணக்குக்கு அமைதித் தீர்வைக் காண முடியுமென்பதை இணைத் தலைமைகள் மீண்டும் வலியுறுத்தியுள்ளன."- என்று அந்தக் கூட்டறிக்கை தெரிவித்தது.

இந்த அறிக்கையின் வாயிலாக, ஒஸ்லோ இணக்கப்பாட்டின் மூலமாக மட்டுமே அமைதித் தீர்வு எட்டமுடியும் எனத் திட்டவட்டமாகச் சுட்டிக்காட்டியிருக்கின்றன இணைத் தலைமைகள்.

வடக்கு - கிழக்கு தமிழர் தாயகம் என்பதையும், உள்ளக சுயநிர்ணய உரிமையுடன் கூடிய சமஷ்டித் தீர்வை அவர்களுக்குப் பெற்றுக் கொடுப்பதையும் ஒஸ்லோ இணக்கம் உறுதிசெய்கிறது. இது பிரதமர் மஹிந்த தற்போது பேரினவாதக்கட்சிகளோடு செய்து கொண்டுள்ள ஒப்பந்தங்களுக்கு முற்றிலும் மாறானது என்பது குறிப்பிடத்தக்கது.

'தேர்தல்களின் பின்னராவது அமைதித் தீர்வுக்கான சமாதான முயற்சிகளை முன்னெடுக்க வேண்டும். எனவே, அதனை சீர்கெடுக்கும் வகையிலான கூற்றுகள், அறிக்கைகள் போன்றவற்றை வெளியிடவேண்டாம்.'- என்ற சாரப்பட தேர்தல் விவகாரத்தை ஒட்டி இந்த அறிக்கை மூலம் கருத்து வெளியிட்டிருக்கின்றன இணைத் தலைமைகள். இதுவும் கூட பிரதமர் மஹிந்தவின் நிலைப்பாட்டுக்கு விழுந்த ஒரு சூடாகவே கருதப்படுகின்றது.

(இணைத் தலைமை நாடுகளின் கூட்டறிக்கை தனியான செய்தியாகப் பிரசுரமாகியுள்ளது.) (க-3-7-12)

# நேற்றுப் பிரதமரின்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஜே.வி.பியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் மாத்திரமே கலந்துகொண்டு உரையாற்றினர். கூட்டமும் பெரிதும் சோபிக்கவுமில்லை.

நேற்று பிற்பகல் 4 மணிமுதல் இந்தப் பிரசாரக்கூட்டம் கொழும்பு நகரசபை முன்றிலில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் ஜனாதிபதி வேட்பாளரும், பிரதமருமான மஹிந்த ராஜபக்ஷ, அமைச்சர்கள் மைத்திரிபால சிறிசேன, நிமால் சிறிபால டி சில்வா, தினேஷ் குணவர்த்தன, பீலிக்ஸ் பெரேரா ஏ.எச்.எம்.பௌஸி, அனுர பிரியதர்சன யாப்பா உட்பட பல அமைச்சர்களும் கலந்துகொண்டு உரையாற்றினர்.

ஜே.வி.பியின் சார்பில் அதன் தலைவர் சோமவன்ஸ அமரசிங்க, நாடாளுமன்ற உறுப்பினர்களான விமல்வீரவன்ஸ, ரில்வின் சில்வா, அனுரகுமார திஸ்ஸாநாயக்க, விஜித ஹேரத், சுனில் ஹந்துனெத்தி ஆகியோர் கலந்துகொண்டனர்.

இதில் ஜே.வி.பியின் சார்பில் அதன் தலைவர் சோமவன்ஸ அமரசிங்க மற்றும் விமல் வீரவன்ஸ ஆகியோர் உரையாற்றினர்.

ஆனால், ஜாதிக ஹெல உறுமயவின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் எவரும் இதில் கலந்து கொள்ளவில்லை.

வழக்கமாக கூட்ட சம்பிரதாயங்களின்படி அக்கூட்டத்தின் முக்கிய பிரமுகரே கடைசியில் உரையாற்றுவார். மக்களின் ஆதரவும் ஆரவாரமும் அவருக்கே இருக்கும். ஆனால், இந்தக் கூட்டத்தில் அது தலைகீழாக இருந்தது.

கடைசியாக உரையாற்ற வேண்டியவர் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷதான். ஆனால், கடைசியில் உரையாற்றியவர் ஜே.வி.பியின் விமல்வீரவன்ஸ. விமல் வீரவன்ஸவுக்கு முன்னர் உரையாற்றிவிட்டு மேடையில் அமர்ந்திருந்தார் பிரதமர்.

விமல் வீரவன்ஸ உரையாற்ற வந்தபோது மக்களின் கரகோசமும் பட்டாசுச்சத்தமும் பலமாகவிருந்ததை அவதானிக்கக்கூடியதாக இருந்தது.

இந்தக் கூட்டத்துக்கு வந்திருந்த மக்கள் தொகையும் வெகு குறைவாகவே இருந்தது. சில ஆயிரம் பேரே தேறினர். அவர்களிலும் பலர் சிவப்புக்கொடிதாங்கி சிவப்புச் சட்டை அணிந்திருந்தனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

# இந்துமா சமுத்திரத்தில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

2002 ஆம் ஆண்டு முதல் தமிழ்நாட்டு மீனவர்களுக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையே 4 முக்கியமான மோதல்கள் நடைபெற்றனவாம். அப்படியான ஒரு பிரச்சினையில் இந்திய மீனவர்கள் விடுதலைக்காக பெருந்தொகையான பிணையத் தொகை செலுத்தப்பட்டுள்ளதாம்.

இலங்கையில் இந்தியத் தமிழ் மீனவர்கள் கைதுசெய்யப்படுகிறபோது, அது தொடர்பாகத் தங்களுடன் இந்தியா நேரடிப் பேச்சு நடத்த வேண்டும் என்று தமிழீழ விடுதலைப் புலிகள் விரும்புகிறார்கள். இதன் மூலம் தற்போது நடைமுறையில் உள்ள - அங்கீகரிக்கப்படாத - கடற்படையாக இருக்கும் விடுதலைப் புலிகளின் கடற்படைப் பிரிவை இந்தப் பிராந்தியத்தின் மூன்றாவது கடற்படையாக நிலைநிறுத்த விடுதலைப் புலிகள் முயற்சிக்கிறார்கள்.

உலகிலேயே கடற்படை வைத்திருக்கும் ஆயுதக்குழு தமிழீழ விடுதலைப் புலிகள் மட்டும்தான்.

இந்தியப் பிராந்தியத்தில் விடுதலைப் புலிகளின் கடற்படை காரணமாக கடல்சார் பயங்கரவாதச் செயல்களை இந்தியா எதிர்நோக்கும் அபாயம் உள்ளது.

ஆசிய, ஐரோப்பிய நாடுகளிலிருந்து நவீன கடற்படைச் சாதனங்களை தமிழீழ விடுதலைப் புலிகள் கொள்வனவு செய்துள்ளார்கள்.

சமீபத்திய இந்திய கடற்பிராந்தியம் தொடர்பான அறிக்கையில் 'கடற்பிரதேசத்தைக் கட்டுப்படுத்துவது மட்டும் முக்கியமல்ல. எதிரிகள் இந்தப் பிரதேசத்தை பயன்படுத்த அனுமதிக்காமல் இருப்பதும் அவசியமாகும் என்று வலியுறுத்தப்பட்டுள்ளது.

ஓய்வுபெற்ற இந்திய கடற்படைத் தளபதி சென்னையில் வெளியிட்ட ஆய்வறிக்கை ஒன்றில் இந்திய - இலங்கை பாதுகாப்புக்கு தமிழீழ கடற்புலிகள் ஆபத்தை ஏற்படுத்தக் கூடும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

விரைவான நடவடிக்கைகளை இந்திய அரசு மேற்கொள்ளாவிட்டால் தமிழீழ விடுதலைப் புலிகள் தங்களது ஆளுகைப் பகுதியை அதிகரித்து விடுவார்கள். இது தெற்காசியப் பிராந்தியப் பாதுகாப்புக்கும் பாரிய அச்சுறுத்தலாக அமையும்.

இந்திய - ஸ்ரீலங்கா மீனவர்கள் பிரச்சினையில் விரைந்து செயல்படும் இருதரப்பினரும் இந்தப் பிரச்சினைக்கான காரணியை அகற்ற வேண்டும்.

இலங்கைத் தீவின் வடக்கு - கிழக்குப் பகுதிக் கடல் பிராந்தியத்தை தமிழீழத்தின் கடற்பிரதேசமாக ஏற்கனவே தமிழீழ விடுதலைப் புலிகள் அறிவித்துள்ளார்கள். அவர்கள் அருகாமையில் உள்ள கடற்பிரதேசங்களையும் தங்கள் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவந்துவிடக்கூடும்.

2002 ஆம் ஆண்டு யுத்தநிறுத்த ஒப்பந்தத்தை அடுத்து இலங்கையின் வடபகுதி மீனவர்கள் நீண்ட காலத்துக்குப் பிறகு யுத்த நிறுத்த மீன்பிடி தொழிலில் ஈடுபட்டு வருகின்றனர். இதுவே இருதரப்பு மீனவர்களின் பிரச்சினைக்கு காரணமாக இருக்கிறது - என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

PC UPGRADES
தரமுயர்த்தல்
உங்கள் பாவனையில் உள்ள கணனிகளை தற்கால தொழில் நுட்பத்திற்கேற்ப அதி நவீன கணனிகளாக மாற்றித்தரப்படும்
■ உங்கள் கணனிகளின் பரிசீலனை இலவசம்
■ உங்கள் வீட்டிற்கு / அலுவலகத்திற்கு எமது தொழில் நுட்பவியலாளர்கள் வந்து பரிசீலிக்கும் வசதி
MICRO PC SYSTEMS
யாழ் நகர் 175/3, கஸ்தூரியார் வீதி, தொலை: 021 222 5893
நெல்லியடி பிரதான வீதி (பொலிஸ் நிலையமருகில்) 0773039536

ELECTRONIC REPAIRS
Analog & Digital Monitors
Inkjet / Laser / Dot matrix Printers
Power Supply
Scanners
Laptop & Mobile PCs
UPS
VCD/DVD players
Hi-fi systems
மற்றும் அனைத்து இலத்திரனியல் உபகரணங்கள்
MICRO PC SYSTEMS
யாழ் நகர் 175/3, கஸ்தூரியார் வீதி, தொலை: 021 222 5893
நெல்லியடி பிரதான வீதி (பொலிஸ் நிலையமருகில்) 0773039536

# அரசியல் படுகொலைகளை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

டின் இணைத் தலைமை அமைப்புகள்.

அமெரிக்கா, ஜப்பான், நோர்வே மற்றும் ஐரோப்பிய ஒன்றியத்தின் தலைமை நாடான பிரிட்டன் ஆகியவற்றின் பிரதிநிதிகளே நேற்று முன்தினம் நியூயோர்க்கில் கூடி இலங்கை நிலைவரம் குறித்து ஆராய்ந்த பின்னர் கூட்ட றிக்கை ஒன்றை வெளியிட்டனர்.

முன்னர் வெளியான செய்திகளில் குறிப்பிடப்பட்டமை போன்று - எதிர்பார்க்கப்பட்டபடி - காட்டமான சில வாசகங்கள் அந்த அறிக்கையில் அடங்கியிருந்தன. அந்த அறிக்கையின் முழு விவரம் வருமாறு:-

டோக்கியோ உதவிவழங்கும் நாடுகளின் இணைத் தலைமைகள் இலங்கையின் அமைதி முயற்சிகளுக்கு உதவும் வகையில் கடந்த 19ஆம் திகதி நியூயோர்க்கில் ஒன்றுகூடி, இலங்கை வெளிவிவகார அமைச்சர் கதிர்காமரின் கொலையை அடுத்து இலங்கையின் தற்போதைய நிலைமை குறித்து ஆராய்ந்தன.

இணைத் தலைமைகள், வெளிவிவகார அமைச்சரின் கொலையை திட்டவட்டமாகக் கண்டிப்பதை மீண்டும் வெளிப்படுத்துகின்றன.

இத்தகைய மனச்சாட்சியே இல்லாத பயங்கரவாதச் செயல்கள் இனப்பிணக்குக்கு அமைதி மற்றும் அரசியல் தீர்வு காண்பதில் பொறுப்பான வர்களின் உறுதிப்பாடு குறித்து ஆழமான சந்தேகங்களை எழுப்புகின்றன.

அமைதி முயற்சியில் தமக்குள்ள அர்ப்பணிப்பையும், மாற்றத்தில் தங்களுக்குள்ள விருப்பையும் வெளிப்படுத்தும் விதத்தில் பகிரங்கமான நடவடிக்கைகளை உடனடியாக எடுக்குமாறு தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பை இணைத் தலைமைகள் கோருகின்றன. விடுதலைப் புலிகளினால் மேற்கொள்ளப்படும் அரசியற் படுகொலைகளை உடனடியாக நிறுத்துவது, சிறுவர்களை படைக்குச் சேர்க்கும் புலிகளின் செயற்பாட்டை நிறுத்துவது அத்தகைய இரண்டு நடவடிக்கைகள் ஆகும்.

யுத்தநிறுத்த ஒப்பந்தம் 2002 பெப்ரவரியில் நடைமுறைக்கு வந்த பின்னர் இப்பொழுது இலங்கை அரசுக்கும் - புலிகளுக்கும் இடையிலான அமைதி நடவடிக்கைகள் மிகமோசமான சவால்களை எதிர்கொண்டுள்ளன என்று இணைத்தலைமைகள் கருதுகின்றன. அமைதி நடவடிக்கைகளுக்கான முக்கிய நங்கூரம் யுத்தநிறுத்த-உடன்பாடுதான். ஆனால், தொடரும் வன்செயல்களால் அது மிகவும் ஆபத்துக்குள்ளாகியுள்ளது. அந்த உடன்பாட்டை பயனுள்ள வகையில் நடைமுறைப்படுத்துவது இலங்கை அரசினதும், புலிகளினதும் கடமையாகும்.

வெளிவிவகார அமைச்சர் கதிர்காமர் கொலையை அடுத்து தம்மை கட்டுப்படுத்திக் கொண்டதற்காகவும், யுத்தநிறுத்த உடன்பாடு குறித்து புலிகளுடன் இணங்கியதற்காகவும் இலங்கை அரசை இணைத் தலைமைகள் மெச்சுகின்றன. யுத்தநிறுத்த உடன்படிக்கையை நடைமுறைப்படுத்துவது தொடர்பான பேச்சுகளை இலங்கை அரசுடன் நடத்துவது தொடர்பான இடம் குறிதது விடுதலைப் புலிகள் ஓர் இணக்கத்திற்கு வராதமை இணைத் தலைமைகளை ஏமாற்றமுற வைத்துள்ளது. யுத்தநிறுத்த உடன்படிக்கை அமுல்படுத்தப்படுவதை மேம்படுத்துவதற்கான நடைமுறைச் சாத்தியமான வழிகள் குறித்து கண்டறிவதற்கு எதிர்வரும் ஒக்ரோபரில் நோர்வேயின் விஷேட பிரதிநிதி மேஜர் ஜெனரல் புறுஹொவ்டே நேரில் விஜயம் செய்யும்போது ஆக்கபூர்வமான செயற்பாடுகளில் ஈடுபடும்படி இருதரப்பையும் இணைத் தலைமைகள் கோருகின்றன.

வன்செயல்களுக்கும் அமைதியின்மைக்கும் எண்ணெய் ஊற்றும் துணை இராணுவக் குழுக்களின் நடவடிக்கைகள் குறித்து இணைத் தலைமைகள் கவலை கொண்டுள்ளன. யுத்த நிறுத்த உடன்பாட்டின்கீழ், இந்தக் குழுக்களை, ஆயுதங்களைக் களைந்து வடக்கு - கிழக்குக்கு வெளியே கொண்டுபோய் நிறுத்த வேண்டிய இலங்கை அரசின் பொறுப்பை இணைத்தலைமைகள் மீள வலியுறுத்துகின்றன.

இலங்கையின் எதிர்காலம் அதன் மக்களின் கைகளிலேயே உள்ளது. எதிர்வரும் தேர்தல்கள் இலங்கையின் அரசியல் தெரிவிற்கான ஒரு நேரமாகும். அமைதி முயற்சிகளை எவ்வகையில் சிறப்பாக முன்னெடுக்கலாம் என்பது குறித்து கடும் வாதப் பிரதிவாதங்கள் நடக்கலாமென்பது இயல்பானதே. தேர்தலின் பின்னர் அமைதித் தீர்வை நோக்கிய தான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுவதை பாதிக்கும் விதத்தில்அறிக்கை விடுவது, அது மாதிரியான செயல்களில் ஈடுபடுவது போன்றவற்றையும், வன்செயல்களையும் தவிர்க்குமாறு இணைத் தலைமைகள் சகல கட்சிகளையும் கோருகின்றன.

தேர்தலைத் தொடர்ந்து அமைதி முயற்சிகளுக்குப் புத்துயிர் ஊட்டப்படுமென இணைத் தலைமைகள் நம்புகின்றன. ஜனநாயகத்தை உறுதிப்படுத்தி, சகல இனக் குழுக்களினதும் சட்டபூர்வ உரிமை மற்றும் மனித உரிமைகளை மதிக்கும் வகையில் - டிசெம்பர் 2002இல் ஒஸ்லோவில் காணப்பட்ட கொள்கை இணக்கத்திற்கு அமைவாக - ஐக்கிய இலங்கைக்குள் சமஷ்டி முறையிலான இணக்கப்பாடு ஒன்றை அரசியல் பேச்சுகள் வாயிலாகக் காண்பதன்மூலம் மட்டுமே இனப் பிணக்குக்கு அமைதித் தீர்வு காண முடியுமென்பதை இணைத் தலைமைகள் மீண்டும் வலியுறுத்தியுள்ளன.

ஆழிப்பேரலை ஏற்பட்டு ஏறத்தாழ ஒரு வருடமாகிறது. ஆழிப்பேரலை மீள் கட்டுமானத்திற்காக வழங்கப்பட்ட உறுதிகளை நிறைவேற்றுவதில் சர்வதேச சமூகம் திடசங்கற்பத்தோடு உள்ளது என்பதை இணைத் தலைமைகள் மீள வலியுறுத்துகின்றன. வடக்கு - கிழக்கு குறிப்பிடத்தக்களவு மீள் எழுவதற்கு இலங்கை அரசாங்கம், விடுதலைப் புலிகள், முஸ்லிம் சமூகம் ஆகியவற்றுக்கிடையே ஒத்துழைப்பு அவசியமாகும்.

இறுதியாக, பதவியை விட்டு வெளியேறும் நோர்வே வெளிவிவகார அமைச்சர் பீற்றர்ஸன், பிரதி வெளிவிவகார அமைச்சர் விடார் ஹெல்கிஸன் ஆகியோர் இலங்கை அமைதி முயற்சிகளுக்கு அனுசரணை வழங்கும் விடயத்தில் சோர்வின்றி ஆற்றிய பணிகளுக்காக இணைத்தலைமைகள் தமது நன்றியைச் செலுத்த விரும்புகின்றன. நோர்வே தொடர்ந்து அனுசரணைப் பணியை ஆற்றுவதற்கு எமது தீவிர ஆதரவை மீண்டும் உறுதிப்படுத்துகிறோம்.- என்று உள்ளது. (க-ப)

# காவலில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பொலீஸாரின் சகோதரிகளும் உட்பட 6 பேர் இக் குழுவில் இடம்பெற்றிருந்தனர். (க-3)

# திருமலையில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

காயமடைந்த கடற்படையினர் திருகோணமலை வைத்தியசாலையில் சேர்க்கபட்டுள்ளனர் எனவும் - தெரிவிக்கப்பட்டுள்ளது.

இக்குண்டு வீச்சின் எதிரொலியாக அந்தப் பகுதியில் அமைந்திருந்த தமிழருக்குச் சொந்தமான மூன்று கடைகள் அடித்து நொருக்கப்பட்டன என்றும் தெரிவிக்கப்பட்டது. (க-03)

# பொலீஸ்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தக் கண்காணிப்புக் குழுவின் தலைவர் ஹக்ரப் ஹொக்லண்டிற்கு பொலீஸ் ஆணைக் குழுவின் தலைவர் ரஞ்சித் அபேசூரிய நேற்றுக் கடிதமொன்றை அனுப்பியுள்ளார். தமது கடமையில் இருந்த சந்தர்ப்பத்தில் இந்த பொலீஸ் உத்தியோகத்தர்கள் விடுதலைப் புலிகளால் கைதுசெய்யப்பட்டு தடுத்துவைக்கப்பட்டுள்ளனர் என்று ஆணைக்குழுவின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டுள்ளதாகவும், அவர்களை துரித கதியில் விடுவிப்பதற்கான பொறுப்பு போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவைச் சார்ந்தது எனவும் அந்தக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வடக்கு - கிழக்கில் கடமையாற்றும் பொலீஸாரின் பாதுகாப்பு தொடர்பில் கண்காணிப்புக் குழு கவனஞ்செலுத்த வேண்டுமென்றும் அந்தக் கடிதத்தில் மேலும் வலியுறுத்தப்பட்டுள்ளது. (க)

eTouch COMPUTER SYSTEM
"The right way to touch IT"
அனைத்து Diploma கற்கைநெறிகளுக்குமான புதிய பிரிவுகள் ஆரம்பம்!!!
80% OFF
INTERNET & E-MAIL 1,000/=
OFFICE AUTOMATION
DESKTOP PUBLISHING
PHOTO MIXING 1,500/=
PROGRAMMING
HARDWARE
HIGHER DIPLOMA IN AUTOCAD 3000/=
(New South Wales University Syllabus & Handouts)
MULTIMEDIA 3,500/=
ஆரம்பம்: 17,18,24,25 -09-2005
மானிப்பாய் வீதி, மருதனார்மடம்
021-4590222 etouch@wow.lk

SCIENCE CENTRE
நெல்லியடி
A/L DAY CLASS
(40015)
Maths - ஜெயந்தன் Che. - அன்பழகன்
Bio. - அல்போன்ஸ் Phy. - பிரபா

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 21.09.2005 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.